# ஸ்ரீ அரவிந்தம் - தத்துவம்

கர்மயோகி

**மதர்ஸ் ஸர்வீஸ் சொசைட்டி**
பிளாட் 4, வெங்கட்டா நகர் விரிவு
பாண்டிச்சேரி - 605 011.

*முன்னுரை*

# Life Divine நூலின் விசேஷ அம்சங்கள்

நூல் கடினமானது எனப் பெயர் பெற்றதற்குப் பல காரணங்களுண்டு. கடினமான அம்சங்களின் விசேஷமறிந்தால் கடினம் குறையலாம் என்ற கருத்துடன் எழுதப்பட்ட சில குறிப்புகள் அடங்கியது இச்சிறு நூல். கடினம் என்பதன் காரணங்கள்:

1. ஆங்கில நடை சென்ற நூற்றாண்டிற்குரியது. மிக நீண்ட வாக்கியங்களுள்ளது.
2. உலகத் தத்துவ மரபிலுள்ள சிக்கல்களை அவிழ்க்க ஸ்ரீ அரவிந்தர் முனைகிறார்.
3. ஞானத்திற்குரிய கருத்தை அறிவுக்குக் கூற ஸ்ரீ அரவிந்தர் முனைகிறார்.
4. நம் மனதிலுள்ள கேள்விகளுக்குப் பதில் நமக்குப் புரியும். ஸ்ரீ அரவிந்தர் கூறும் விளக்கங்களுக்குள்ள கேள்விகளும் இன்று நம் மனதிலில்லை. **கேள்வியே மனதிலில்லாதபொழுது பதில் விளங்காதது ஆச்சரியமில்லை.**

முதல் தடை மொழியைப் பற்றியது. நூலைத் தமிழில் எழுதினால் அத்தடை எழாது. இரண்டாம் தடை தத்துவமானது. தத்துவச் சிக்கல் எளியவர்க்கு எப்படிப் புரியும்? அச்சிக்கல் வாழ்வில் எழும்பொழுது அன்னை தத்துவத்தை விலக்கிச் சிக்கலை அவிழ்க்கிறார். **நம் பிரச்சனை தீருகிறது. நம் வாழ்வில் அது பிரார்த்தனை பலிக்கும்தொறும் நடைபெறுகிறது.** Life Divine **புரிய வேண்டும் என்பவர் அவிழும் சிக்கலை ஆரம்பமாக்கி, அதன் நுணுக்கத்தை அறிய முற்பட்டால், நுணுக்கம் புரியும்பொழுது தத்துவம் விளங்கும்.** நம் அறிவுக்கு ஞானம் எப்படி எட்டும் என்பது அடுத்தது. அன்னையை அறிவது ஞானம். அன்னையை பலனாக அறிவது சௌகரியம். தெளிவாக அறிவது ஞானம். அன்பாக அறிவது ஆனந்தம். அன்னையாக அறிவது யோகம்.

பிரார்த்தனை பலிக்கும்பொழுது பலிக்கும் பாணியை அறிவது தெளிவு. அந்தத் தெளிவுக்குரியது ஞானம். கடைசியானது மனதிலுள்ள கேள்வி. நூல் புரிய வேண்டுமானால் மனதில் கேள்வியிருக்க வேண்டும். உலகம் எப்படி சிருஷ்டிக்கப்பட்டது என்ற கேள்வி மனதிலிருந்தால் நூல் புரியும். என் மனதில் அது தோன்றியதேயில்லையே, எப்படி எனக்குப் புரியும் என்பது பிரச்சினை. ரிஷிகள் எந்தக் கேள்வியைக் கேட்க நமக்கு உரிமையில்லை என்றனரோ அக்கேள்வியல்லவா இது? நான் எப்படி இக்கேள்வியை எழுப்ப முடியும்?

இன்று உலகில் இலட்சக்கணக்கான விஞ்ஞானிகள் கேட்கும் கேள்வி இது. அவ்வகையில் இது உங்கள் மனதிலிருக்கலாம். இல்லாவிட்டால் இலட்சக்கணக்கானவர் எழுப்பும் கேள்வியை நீங்களும் எழுப்பலாம். அவர்கள் மனநிலையை ஆராயலாம். அது நூலை அறிய உதவும். ஸ்ரீ அரவிந்தர் அக்கேள்விகளை எழுப்புகிறார். அவற்றிற்குப் பதில் தேட மனம் விழைந்தால் நூல் புரியும். அக்கேள்விகளை விஞ்ஞானியும், பகுத்தறிவுவாதியும், யதார்த்தவாதிகளும் வெவ்வேறாகக் கேட்கின்றனர். அவை,

1. உலகம் இயற்கை, அதை ஏற்கலாம், விளக்க முடியாது.
2. உலகம் மாயை, ஞானம் வந்தால் மாயை விலகும்.

ஸ்ரீ அரவிந்தர் கூறும் பதில் வேறு. உலகம் இறைவன் ஆனந்தம் அனுபவிக்க ஏற்பட்டது. **ஞானமான இறைவன் தன்னை ஞானத்துள் மறைத்து அஞ்ஞானமாகி, மறைந்த இறைவன் தான் மறைந்ததை மறந்தபின், நினைவுபெறுவதில் ஆனந்தம் கண்டு, ஞானமாக மீண்டும் எழுவதால் பேரானந்தம் பெறுகிறான். அக்காரணத்திற்காக ஏற்பட்டதே சிருஷ்டி என்பது பகவான் விளக்கம்.**

தான் தன்னுள் மறைவது சிருஷ்டி. தன்னை இறைவன் மறைக்கும் விதம் நூலில் முதற் புத்தகத்தில் 28 அத்தியாயங்களாக எழுதப்பட்டுள்ளது. மறையும் நிலைகளாவன:



1. எதுவுமே இல்லாத பிரம்மம் சத் எனும் புருஷனாவது.
2. புருஷனான பிரம்மம் ஜீவியமாவது.
3. ஜீவியம் தன்னை ஆனந்தமாக அறிந்து உணர்வது.
4. தன்னை அறிந்து சத்திய ஜீவியமாவது.
5. சத்திய ஜீவியம் இரண்டாகப் பிரிந்து மனம் உண்டாவது.
6. மனத்தின் உறுதி ஞானத்தால் சக்தியாகி, வாழ்வாவது.
8. வாழ்வு சலனமிழந்து ஜடமாவது.

சத்-புருஷன் என்ற ஆன்மா தன்னைக் கொஞ்சம் கொஞ்சமாக இழந்து ஜடமாகி பின்னர் வந்த வழியே தலைகீழே மாறி தன்னைக் கொஞ்சம் கொஞ்சமாக அறிந்து - அதாவது ஆன்மா பரிணாம வளர்ச்சி பெற்று - மீண்டும் ஆன்மாவாகவும், சத் புருஷனாகவும் மாறி பிரம்மத்தை அடைவது பரிணாமம். ஜடத்திலாரம்பித்து முடிவதாகும்.

நூலில் சிக்கல்கள் என எழுபவை மறையும் பாணி, மீண்டும் எழும் பாங்கு, அவற்றை இக்கட்டுரையில் சில முக்கிய இடங்களைக் குறித்துக் காட்டுகிறேன். **வாசகர் பகவான் ஸ்ரீ அரவிந்தருடன் மனத்தால் ஒன்றியபொழுதும், அன்னை அருள் செயல்பட்ட வகையை அறியும்பொழுதும், நெஞ்சம் பக்தியால் நெகிழ்ந்தபொழுதும், உலகமும் உற்றார் பாசமும் உகந்ததன்று என்ற தெளிவு பெறும்பொழுதும், இறைவன் வரும் தருணத்தை இம்மையில் நமக்குணர்த்த வந்த நூல் என்ற இங்கிதம் எழும்பொழுதும், சிக்கல்கள் தாமே அவிழ்ந்து, கடினம் என்ற பகுதிகள் இனிமை எனும்படி நூலின் வண்ணம் மாறுவதைக் காணலாம்.**

**கொடுமையான வாழ்வை இனிமையாக மாற்றவந்த பகவான் எழுதிய நூல் எவர்க்குக் கடினமாக இருந்தாலும் பக்தர்கட்குக் கனிவானது எனக் காணலாம், கண்டது வாழ்வில் பலிக்கும்.**

**இந்நூலில் எனக்கு எழுந்த ஐயங்களையும், தடைகளையும், குழப்பங்களையும் உதாரணமாக எழுதியுள்ளேன்.**

## சொற்களைப் பற்றிய குறிப்பு

இந்நூல் அன்பர்கள் Life Divineஐப் பற்றி ஓரளவு தெரிந்து கொள்ள எழுதப்பட்டது. நூலின் அமைப்பு, கருத்து, முக்கியம் ஆகியவற்றைப் பற்றி எழுதியதுடன், நூலில் சிக்கலான பல பகுதிகளை எடுத்து சிக்கல் அவிழும் வகையான விவரங்களை எழுதியுள்ளேன். Life Divineஐ பலமுறை படித்தவர்க்குப் பயன்படுவது இந்நூல். எனினும் முதல் முறை படிப்பவர்க்கும் இந்நூல் ஓரளவு உதவும். இதே நூலை ஆங்கிலத்திலும் Sri Aravindam என வெளியிட்டுள்ளோம். நேரடியான மொழிபெயர்ப்பில்லை. இரண்டும் பொதுவாக ஒரே கருத்துக்களைக் கூறும் நூல்கள்.

Life Divineஐ படித்து அறிய விரும்பும் அன்பர்கட்கும், அதைப் பற்றி விவரமாகத் தெரிந்து கொள்ள முயல்பவர்கட்கும் தெளிவாக இருக்கும். இவற்றைக் கடந்த நிலையில் சில அன்பர்கள் Life Divine தத்துவத்தை நுணுக்கமாக அறிய முற்படலாம். அவர்கள் மூலத்தைப் படித்துவிட்டு, இந்த நூலைப் படித்தால் சொற்கள் பயன்படுத்தப்பட்ட வகையால் சில இடங்களில் தெளிவு குறைவாக இருக்கலாம். குழப்பமும் வரலாம். **அவர்களுடைய குழப்பத்தை ஆங்கில நூல் Sri Aravindam விளக்கும்.** இரண்டையும் இணைத்துப் பார்ப்பது அவ்வகையான அன்பர்கட்கு உதவும். இப்படியொரு சந்தர்ப்பம் எழக் காரணமானவை,

1. ஸ்ரீ அரவிந்தம் கூறும் தத்துவம் புதியது.
2. புதிய தத்துவத்திற்குப் புதிய சொற்கள் தேவை.
3. ஸ்ரீ அரவிந்தர் Life Divineஐ சமஸ்கிருதத்திலோ, வங்காளியிலோ எழுதாமல் ஆங்கிலத்தில் எழுதியுள்ளார்.
4. அவருடைய கருத்துக்களை சமஸ்கிருதச் சொற்கள் முழுமையாகப் பிரதிபலிக்கா. ஜீவாத்மா என்பது அப்படிப்பட்ட சொல். Life Divineஇல் பகவான் இதை ஜீவாத்மா எனக் கூறாமல் Individual என்கிறார். இதற்கு தமிழில் சொல் இல்லை. பகவான் கூறும் ஜீவாத்மா பரமாத்மா, சமஸ்கிருத சொல் ஜீவாத்மா மோட்சம் தேடுவது. அன்பர்கட்கு இரண்டும் ஒன்றே. தத்துவம் பயில்பவர்கட்கு இது முக்கியமான வேறுபாடு.
5. Life Divineஇல் சமஸ்கிருத சொற்கள் பல வருகின்றன. எல்லா முக்கியமான கருத்துகட்கும் பகவான் ஆங்கில சொற்களையே பயன்படுத்துகிறார். ஆங்கிலம் ஆன்மீகத்திற்குரிய மொழியல்ல. "Intuition, Soul, Consciousness என்ற சொற்கள் நான் பயன்படுத்துவதிலிருந்து வேறுபட்டவை, வேறு வழியில்லாமல் உள்ள சொற்களைப் பயன்படுத்துகிறேன்" என்கிறார்.
6. ஸ்ரீ அரவிந்தம் ஆங்கிலம், சமஸ்கிருதம், தமிழ் சொற்களுக்கு அகப்படாது.

— *ஆசிரியர்.*

# ஸ்ரீ அரவிந்தம் - தத்துவம்

## பொருளடக்கம்


| | |
|---|---|
| | *பக்கம்* |
| ஸ்ரீ அரவிந்தம் - தத்துவம் | 1 - 44 |
| 56 அத்தியாயங்களின் தலைப்பு | 45 - 47 |
| இந்திய ஆன்மீக வரலாறு | 48 - 55 |
| சிருஷ்டியின் அமைப்பும், நூலின் சாராம்சமும் | 56 - 66 |
| இதயத்தின் எழுச்சி | 67 - 69 |
| தெய்வீக வாழ்வு | 70 - 72 |
| பிரம்மம், புருஷா, ஈஸ்வரா, மாயை, பிரகிருதி, சக்தி | 73 - 80 |
| உலகம் முதல் பிரம்மம் வரை | 81 - 82 |
| பணம், அதிகாரம், வாழ்வு, பிரம்மம் | 83 - 84 |
| அகந்தை என்ற ஜீவாத்மா, பிரபஞ்ச ஆத்மா, பரமாத்மா | 85 - 86 |
| ஹிருதய சமுத்திரம் | 87 - 88 |
| ஆத்மாவின் இரு முனைகள் | 89 - 90 |
| அடக்கத்துள் அடங்கிய ஐந்து அம்சங்கள் | 91 - 106 |
| ஸ்ரீ அரவிந்த மந்த்ரோபதேசம் | 107 - 119 |

# ஸ்ரீ அரவிந்தம் - தத்துவம்

## STRUCTURE OF LIFE DIVINE

| | | |
|---|---|---|
| **Book I** | OMNIPRESENT REALITY AND THE UNIVERSE | பரம்பொருளும் பிரபஞ்சமும் |
| **Book II** | THE KNOWLEDGE AND THE IGNORANCE - THE SPIRITUAL EVOLUTION | ஞானம் அஞ்ஞானம் -ஆன்மீகப் பரிணாமம் |
| **Part - I** | THE INFINITE CONSCIOUSNESS AND THE IGNORANCE | அனந்தஜீவியம் அஞ்ஞானம் |
| **Part - II** | THE KNOWLEDGE AND THE SPIRITUAL EVOLUTION | ஞானம் -ஆன்மீகப் பரிணாமம் |



1. உலகை, உலகுக்கப்பாலுள்ள ஆண்டவன் சிருஷ்டித்தான் என்ற கருத்தை ஏற்காமல் ஸ்ரீ அரவிந்தர் இறைவனான பரம்பொருள் தானே உலகமாக மாறினான் என்று கொண்டு Life Divineஐ எழுதினார். நூலின் முதல் புத்தகம் அதைக் கூறுகிறது. இது சிருஷ்டி.

2. சிருஷ்டிக்கு இதுவரை காரணம் கூறியவரில்லை. லீலை என்றவர்கள் ஏன் லீலை ஏற்பட்டது எனக் கூறவில்லை. பிரம்மத்தை நாம் பரம் பொருள் இறைவன் என்கிறோம். இது அனந்தமானது. அனந்தமான இறைவனுக்கு தன் இச்சையாகச் செயல்படும் உரிமையும், திறமையும் உண்டு. தான் இன்பம் துய்க்க விரும்பினான். ஒளிந்து மறைவதும், மறைந்ததைக் கண்டு பிடிப்பதும் இன்பம். சர்வ வியாபியான பிரம்மம் எங்கு போய் மறைவான்? அவன் மறைய அவனுக்கு இடமில்லை. ஏனெனில் எங்கும் அவனே இருக்கிறான். எனவே தன்னுள் தான் மறைவதாக (Self-absorption) முடிவு செய்தான். அதனால் ஏற்பட்ட பல மாறுதல்களில் ஞானம், அஞ்ஞானமானதும் ஒன்று. இரண்டாம் புத்தகத்தின் முதற் பகுதி ஞானம் அஞ்ஞானமானதைக் கூறுகிறது. இது சிருஷ்டி. சிருஷ்டி முடிந்த பின் பரிணாமம். இது அஞ்ஞானத்திலிருந்து ஞானம் வெளி வருவது. **மறைந்து மறந்த இறைவன் தன் நினைவு பெறுவது ஆனந்தம். நினைவால் வெளிவருவது பேரானந்தம்.** இரண்டாம் புத்தகம் பரிணாமத்தை விளக்கும்.

இதில் இரு பகுதிகள் உள்ளன. முதற்பகுதி பரம்பொருள் அனந்த ஜீவியமாகி, பிரபஞ்சமாகுமுன் அஞ்ஞானமாகும் பகுதி.

இரண்டாம் பகுதி ஞானம் வெளிவந்த பின், பரிணாமம் தொடர்ந்து ஆன்மா வளர்வதாகும். வளர்ந்த ஆன்மா மீண்டும் சத் புருஷனையடைந்து, பிரம்மத்தில் போய்ச் சேருகிறது என புத்தகம் முடிகிறது.

நூலில் கடைசி பக்கமான 1070இல் பகவான், **“அஞ்ஞானத்தை ருசித்து அனுபவிக்க ஏற்பட்டது சிருஷ்டி. அதை அனுபவித்தாயிற்று”** என முடிக்கிறார்.






# ஆன்மா உற்பத்தியான வகை

## Creation of Spirit

Sat objectivises itself as Satyam.

Sat is neither subjective nor objective.

The experience of Sat is Spirit.

Spirit is substance.

It is spiritual substance.

**அகமான சத் சத்தியமாகப் புறத்தில் மாறும்பொழுது ஆன்மா உற்பத்தியாகிறது.**

***சத் தன்னுள் சித்தையும், ஆனந்தத்தையும் கொண்டது.***

***சத்திற்குத் தன்னை அறியவோ, அனுபவிக்கவோ அவசியமில்லை, ஆனால் முடியும்.***

***சத் தன்னை அறிவதால் சித் ஆகிறது.***

***சத் தன்னை அறிந்தபின் சித் மூலம் தன்னை உணர்ந்து அனுபவிப்பதால் ஆனந்தமாகிறது.***

***சத் தன்னைப் புரிந்து கொள்ள முயன்றால்*** (comprehend) ***சத்திய ஜீவியமாகிறது.***

***சத்திற்குத் தான் சத்தாக இருக்கவேண்டிய அவசியமும் இல்லை என்பதைச் செயல்படுத்தினால் சத் மீண்டும் பிரம்மமாகும்.***

***சத்*** is Self - Conscious Being.

***இதன் அம்சங்கள் மூன்று.***

***ஆத்மா-புருஷா-ஈஸ்வரா.***

***மனம் ஆத்மாவை அக்ஷரப்பிரம்மமாகக் காணும். தெய்வீக மனம் ஆத்மாவைப் புருஷனாகவும், புருஷோத்தமனாகவும் காணும்.***

சத்திய ஜீவியம் ஆத்மாவை ஈஸ்வரனாகக் காணும்.

அக்ஷர பிரம்மம் புருஷோத்தமனில் அடக்கம்.

அக்ஷர பிரம்மமும், புருஷோத்தமனும் ஈஸ்வரனுள் அடக்கம்.

Self என்பது பிரம்மம். பிரபஞ்சத்தைக் கடந்தது.

Soul என்பதும் அதுவே. நாம் ஆத்மா என்போம். இது பிரபஞ்சத்திற்குரியது.

Being என்பது பொதுச் சொல். ஜீவன் எனலாம்.

Spirit என்பது ஆன்மா எனப்படும். **Self, soul, being** என்பவை **Spirit**இன் பல நிலைகள், பல தோற்றங்கள்.

Man sees Self as his own self or collective self or immobile self or universal self or cosmic self or Transcendent Self as his vision rises.

புருஷன், ஈஸ்வர அம்சங்கட்கு முன் நிலை பிரம்மம்.

❁❁❁❁❁



# சத்திய ஜீவியம்

## Supermind is the nature of Sachidanandam

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சத் | - | சித் | - | ஆனந்தம் | அகமானால் |
| சத்தியம் | - | ஞானம் | - | அனந்தம் | புறமாகும் |

புறம் என்பதை nature என்கிறார்.

சத்திய ஜீவியத்தில் இருபகுதிகள் உள்ளன.
முதற்பகுதி காலத்தைக் கடந்தது.
அடுத்தது காலத்திலுள்ளது.

- மனம் இவற்றினிடையே பிறக்கிறது.
- சத்திய ஜீவியம் முழுமையானது.
- இங்கு ஞானமும், உறுதியும் இணைந்துள்ளன.
- பிரம்மத்தின் தொடர்பு இங்கு நிரந்தரமானது.
- மனத்தில் பிரிந்து தெரிபவை இங்கு இணைந்து தெரியும். புருஷப் - பிரகிருதி இங்கு ஒன்றே, சத், சித், ஆனந்தம் மூன்றாகத் தெரிந்தாலும் ஒன்றானவை. தகப்பன், கணவன் ஒரே மனிதன் என்பதைப்போல் பிரியாத பாகுபாடுள்ள இடம்.
- Real-Idea பூரண எண்ணத்தால் சிருஷ்டிக்கிறது.

❁❁❁❁❁

## வாழ்வு

## Creation of Life

மனத்தில் இரு பகுதிகள் உள்ளன.

ஞானம், உறுதி என்பவை அவை.

உறுதி என்பது சக்தி.

ஞானம் உறுதியுடன் செயல்பட்டால் சக்தி பிறக்கும்.

அப்படிச் செயல்படும்பொழுது ஞானம் தன்னை ஓரளவு இழக்கும், சக்தி எழுந்தால் சக்தியின் லோகம் (Plane of life) உற்பத்தியாகும்.

வாழ்வு என்ற லோகம் ஞானம், உறுதியில் செயல்படுவதால் எழுவது. இங்கு ஞானம் குறைவாக இருக்கும்.




❋❋❋❋❋



## ஜடம்

## Creation of Matter

ஞானம் உறுதிமேல் செயல்படும்பொழுது வாழ்வு உண்டானால், ஓரளவு ஞானம் தன்னை இழக்கும், முழுவதும் ஞானம் தன்னை இழந்தால் வாழ்வு ஜடமாகும். ஜடம் இவ்விதம் உற்பத்தியாகிறது.

இதையே வேறுவிதமாகவும் கூறலாம்.

சத்திற்கும் சத்தியத்திற்கும் இடையேயுள்ளது ஆன்மா. இதை spirit எனவும் spiritual substance எனவும் கூறுகிறார். சிருஷ்டியில் spiritual substance மாறி material substance ஜடப் பொருளாக வேண்டும். Spirit கண்ணுக்கு - புலனுக்கு - தெரியாது. புலனுக்குத் தெரிய உருவம் வேண்டும். புலன் மனத்தின் கருவி. மனம் புலன் வழி ஆன்மாவைக் கண்டால் Spiritual substance மாறி material substance, அதாவது Matter ஜடமாகிறது என்பது தத்துவம்.



சத்திற்கும் சத்தியத்திற்கும் இடையேயுள்ள ஆன்மாவை சத்திய ஜீவியத்தின் இரு பிரிவுகளிடையே பிறந்த மனம் கண் என்ற புலன் வழி காணும்பொழுது ஜடமாகத் தெரிகிறது.

- ⊙ ஜடம் என்பது ஆன்மா.
- ⊙ ஜடம் என்பது மனத்தின் பார்வைக்கே தவிர ஜடம் என்பதில்லை.
- ⊙ ஆன்மாவை மனம் ஜடமாகக் காண புலன் வழியாகக் காணவேண்டும்.
- ⊙ ஆன்மாவுக்கு உருவமில்லாவிட்டால் மனம் காண முடியாது.

**உருவம் பெற்ற ஆன்மா புலன் வழி காணும் மனத்திற்கு ஜடமாகத் தெரிகிறது.**

❁❁❁❁❁



# மேல் மனம்
# Surface mind

- ⊙ மேல்மனம், உள்மனம், அடிமனம், ஆழ்மனம் (surface mind, inner mind, subliminal mind, subconscious mind)
- ⊙ ஆழ்மனம் நம் கடந்த கால வாழ்வை உடலிலும், ஜீன், குரோமசோம், DNA என்பவற்றிலும் வைத்துள்ளது. இதயம், ஜீரணம், அனிச்சைச் செயல் போன்றவற்றைக் கட்டுப்படுத்துவது, தானே இயங்குவது.
- ⊙ மேல் மனம் என்பதையே நாம் மனம் என்கிறோம். நாம் ஆழம் என்பது மேல் மனத்தின் ஆழம், depth of the surface. இதன் அம்சங்கள்,

  **மனம், சிறியது, அகந்தை, காலம், மேலேழுந்ததாக இருப்பது.**

- ⊙ அஞ்ஞானம் இங்கே பூர்த்தியாகிறது.
- ⊙ உள்மனம் பரந்தது, மேல் மனத்திற்கு அடியில் உள்ளது. சூட்சுமமானது, ஆன்மிகமானதன்று, பெரியது. அடிமனம் உள் மனத்தில் அமைந்துள்ளது.
- ⊙ உள் மனம் மேல் மனத்தின் ஆழம் எனலாம்.
- ⊙ மனோமயப் புருஷனும், நிர்வாணக் கதவும் இங்குள்ளன. சைத்தியப் புருஷன் உள்ள அடிமனத்திற்குப் போக உதவும்.
- ⊙ Superconscient பரமாத்மாவும், ஆழ்மனம் subconscientஉம் உள்மனத்தில் சேருமிடத்தில் அடிமனம் ஏற்படுகிறது. சைத்தியப் புருஷன் அடிமனக் குகையில் இருக்கிறான். அடிமனம் பிரபஞ்சம் முழுவதும் பரவக் கூடியது. எல்லா மனிதர்களுக்கும் அவர்கள் மனம், உணர்வு, உடல் அடிமனத்தில் சந்தித்து ஒன்றாக உள்ளன.

நம் கண்ணில் படாதவை, காதில் விழாதவை அடிமனத்திற்குத் தெரியும். அங்குப் பதிவாகும்.

**ஒருவர் சந்தோஷம் உலகத்தின் சந்தோஷம்**
**ஒருவர் வருத்தம் உலகத்தின் வருத்தம்**

என்பதை உண்மையாக்கும் மனம் அடிமனமாகும்.

❋❋❋❋❋



# Spiritual Aspects

## Fundamental Spiritual Determinants

உலகம் பெரியது. அது சூரிய மண்டலத்தின் பகுதி, சூரிய மண்டலம் பிரபஞ்சத்தின் பகுதி. நாம் அறிவது நம் ஊர், சந்தர்ப்பங்கள் மட்டும்.

- ⊙ சாதாரண மனிதனுக்கு ஊர் தெரியும்.
- ⊙ படித்தவனுக்கு நாட்டைப் பற்றித் தெரியும். நடைமுறையில் அவனும் சாதாரண மனிதனே.
- ⊙ தவம் செய்தவர்கள் தவிர மற்றவர்க்கு திருஷ்டியில்லை. திருஷ்டியின் நிலைக்கேற்ப,
  - கவி இயற்கை எழிலைக் காண்கிறான்.
  - தவசிகள் காண்பவை மூன்று.
    1. அக்ஷரப் பிரம்மம்.
    2. சித் - சக்தி
    3. ஆனந்தம்
- ⊙ சத் புருஷனைக் கண்டவன் அதை அக்ஷரப் புருஷனாகக் காண்கிறான்.
- ⊙ அக்ஷரப் பிரம்மத்தைக் கண்டவனுக்கு உலகம் மாயை.
- ⊙ சித்-சக்தியைக் கண்டவனுக்கு உலகம் பிரகிருதி. இவன் நாத்திகன்.
- ⊙ ஆனந்தத்தைக் கண்டவனுக்கு உலகம் லீலை.
- ⊙ ஒன்றைக் கண்டவர்கள் மற்ற இரண்டையும் மறுக்கிறார்கள்.
- ⊙ மனம் அக்ஷரப் பிரம்மத்தைக் கண்டால், தவசியின் நிலை தெய்வீக மனத்திற்கு உயர்ந்து மனோமயப் புருஷனை அடையலாம். அப்பொழுது மனம் கண்ட அக்ஷரப் பிரம்மம் முதலில்

புருஷனாகவும், அடுத்த உயர்ந்த கட்டத்தில் - கீதை - புருஷோத்தமனாகவும் தெரிகிறது.

- அக்ஷரப் புருஷன் புருஷோத்தமனில் அடக்கம்.
- தவசி மேலும் உயர்ந்து சத்திய ஜீவியத்தை அடைந்து சத் புருஷனைக் கண்டால், சத் புருஷன் ஈஸ்வரனாகத் தெரியும்.

  ஈஸ்வரனுள் புருஷோத்தமன் அடக்கம்.
- அக்ஷரப் பிரம்மமும், புருஷோத்தமனும் பிரளயத்தால் அழிவதில்லை. ஈஸ்வரன் அழிவான். அதனால் ரிஷிகள் ஈஸ்வரனைக் கருதவில்லை.
- ஈஸ்வரன் அழிந்தாலும் பிரதமர்போல் சக்தியுள்ளவன்.

  புருஷோத்தமன் ஜனாதிபதிபோல் அழியாவிட்டாலும் power இல்லாதவர்.
- அக்ஷரப் பிரம்மமும், புருஷோத்தமனும் சிருஷ்டிக்காதவர்கள், ஈஸ்வரன் சிருஷ்டிப்பவன்.

❋❋❋❋❋



## Spiritual Aspects
## Fundamental Spiritual Determinants

| சத் | - | சித் | - | ஆனந்தம் |
|---|---|---|---|---|
| பிரம்மம், புருஷன், ஈஸ்வரன் | - | ஞானம், உறுதி | - | அழகு, சந்தோஷம், அன்பு |
| Self as subject, Self as object and Self - awareness holding them together | | known, knowledge, knower<br>Lord of will, Force, Object of will | | Lover, Love, Beloved<br>Enjoyer, Enjoyment, Enjoyed |

As the world consists of only objects created out of the 93 elements by their interaction, இவ்வுலகில் உள்ள பொருள்களும், மனிதர்களும், நிகழ்ச்சிகளும் மேற்கண்ட 24 அம்சங்கள் இணைந்து செயல்படுவதால் ஏற்பட்டவை. (மேற்கண்ட 8 spiritual determinants-ம் ஒவ்வொன்றும் 3 ஆகப் பிரிவதால் 24 ஆகின்றன)

## Process of Creation - Methods

- *Self-conception, Self-limitation, Self-absorption, Objectivity, Subjectivity, Dividing, Energising, Force creating Forms, Forms meeting, Forms creating sensation, double opening of evolution, double opening that forms the Many out of One, extension, putting out powers as nature.*
- *All planes are one; all methods are one.*
- ***Planes and Methods are after all ONE.***
- *Self-absorption is by self-conception and self-limitation.*
- *Movement is method, repose is the plane.*

❋❋❋❋❋



## சிருஷ்டியின் இரகஸ்யம் - முறைகள்

தன்னிச்சையாகச் செயல்படுவது, தனக்கு அளவு ஏற்படுத்துவது, தன்னை தன்னுள் கிரகித்துக் கொள்வது; அகம் - புறம்; பகுத்தல், சக்தியை எழுப்புதல், சக்தி ரூபம் ஏற்படுத்துவது; ரூபம் புலனுணர்வை எழுப்புவது; மேலும், கீழும் ஒரே சமயத்தில் செல்வது; ஒன்று பலவாக மாற, பிரிந்து சேர்வது.

- எல்லா லோகங்களும் ஒன்றே, எல்லா முறைகளும் ஒன்றே.
- **லோகங்களும் முறைகளும் ஒன்றே.**
- தன்னைக் கிரகித்துக் கொள்ள தானே முடிவு செய்வதால் அது தன்னிச்சையாகும்.
- அமைதி லோகம், சலனம் முறை.

ஜடமாக மாறும் சத், இருளாக மாறும் ஒளி, வலியாக மாறும் ஆனந்தம் தன்னுள் தன்னைக் கிரகித்துக் கொள்ளும் முறையைப் பயன்படுத்துகிறது. தானே இச்சைப்பட்டு இது நடப்பதால் இவ்விருமுறைகளும் ஒன்றே. அகத்தில் ஒளியானது புறத்தில் இருளாக இருப்பதால், இதுவே அகம் - புறம் என்ற முறையாகும். ஒளி என்பது ஓர் அளவு. இருள் என்பதும் ஓர் அளவு. ஒளி இருளாக மாற தனக்குத் தானே அளவை ஏற்படுத்திக் கொள்கிறது.

சத் என்பது ஒரு லோகம். கிரகிப்பது ஒரு முறை. இவையிரண்டும் ஒன்றே என மனம் எனும் லோகமும், எண்ணம் என்ற முறையில் விளக்கலாம்.

மனம் செயல்படும்பொழுது எண்ணம் எழுகிறது. எண்ணம் செயல்படாமல் அமைதியானால் மனம் என்ற லோகம் உண்டாகிறது. இதேபோல் எல்லா முறைகளும் ஒன்று எனவும், எல்லா லோகங்களும் ஒன்று எனவும் கூறலாம். மேலும் எல்லா லோகங்களும் எல்லா முறைகளும் ஒன்றே எனவும் கூறலாம்.

**முறைகள், பொருள்கள், ரூபங்கள், குணங்கள் ஆகிய பல ஒன்றிலிருந்து எழுந்த வகை இதுவே.**

❋❋❋❋❋

## காலம், இடம்

## Time and Space

- சித்தின் அகம் காலம், புறம் இடம்.
- சித் என்பது இங்கு முழு சச்சிதானந்தத்தையும் குறிக்கும்.
- சத்தில் அகம், புறம்; காலம், இடம் இருக்க முடியும். சத் பிரியப்பட்டால் அவற்றிலிருந்து விலகலாம்.
- சத்திய ஜீவியத்தில் காலத்தைக் கடந்த பகுதியும், காலத்திற்குட்பட்ட பகுதியும் உண்டு.
- மனம் இவற்றிடையே ஏற்பட்டது.
- மனத்திற்கு ஒரு சமயத்தில் ஒரு பக்கத்தைப் பார்க்க முடியும் என்றாலும் திரும்பி மறுபக்கத்தையும் பார்க்கும் திறன் உண்டு.
- சித்திலிருந்து வரும் சக்தியில் காலமும், இடமும் உற்பத்தியாகின்றன.
- சத்திற்கும், சித்திற்கும் முழுமையுண்டு. சக்தியைப் பிரிக்கலாம். சத், சித்தைப் பிரிக்க முடியாது.
- பிரியும் சக்தி மேலும், பிரியாத ஜீவியமும், சத்தும் முழுமையாக உள்ளேயும் உள்ளன.
- மனத்தால் தான் பிரித்த சக்தியையும், அதன் பாகங்களையும் காண முடியும். முழுமையான சித், சத்தைப் பார்க்க முடியாது, சத்திய ஜீவியம் பார்க்கும்.
- மனிதன் சிந்தனையில் எழுவது கற்பனை, காவியம், சித் - தெய்வ - சிந்தனையில் எழுவது காலம். அது அகம், அதன் புறம் இடம். காலமும், இடமும் உலகைத் தாங்குகின்றன.

❋❋❋❋❋



## The four above which become the four below :

| | |
|---|---|
| Sat | Matter |
| Chit | Life |
| Ananda | Psychic |
| Supermind | Mind |

- *Sat becomes conscious, enjoys its bliss, knows itself as power of Force and Knowledge, splits itself into the Timeless and Time planes, creates a subordinate power of Mind which loses its knowledge on its will to create the plane of life and losing all knowledge and all movement turns into inert Matter.*

- *Mind, life and body have mental consciousness, vital consciousness and physical consciousness. Below the consciousness there is substance in all planes. As Sat precedes Chit in descent, Chit is above Sat in ascent.*

❋❋❋❋❋

## Unity, Truth, Goodness, Knowledge, Power, Love

ஐக்கியம், சத்தியம், நல்லது, ஞானம், சக்தி, அன்பு ஆகிய ஆறு அம்சங்களும் சிருஷ்டி பூர்த்தியாக அவசியம். ஒரு சமயத்தில் ஓர் அம்சமே செயல்பட முடியும் என்பதால், அச்சமயம் மற்றவை குறையாக இருப்பதாகத் தெரியும். அது குறையில்லை. அதன் முறை இன்னும் வரவில்லை எனப் பொருள்.

நமக்கு வலியிருப்பது - ஆனந்தமில்லாதது - தெரிவது போல் மற்ற எந்த அம்சம் குறையாக இருப்பதும் தெரியவில்லை என்பதால், வலியிருப்பதை மட்டும் குறையெனக் கூறுகிறோம்.

❋❋❋❋❋



It is the essential indeterminability of the Absolute that translates itself into our consciousness as the fundamental negating positives of our spiritual experience and fundamental affirming positives.

| | |
|---|---|
| 1. The immobile immutable Self<br>அக்ஷர பிரம்மம் | The Self that becomes all things<br>சத் புருஷன் (The essence and source of all determinations and the dynamic essentiality.) |
| 2. The Nirguna Brahman<br>நிர்குணப் பிரம்மம் | The Saguna Brahman.<br>சகுணப் பிரம்மம். |
| 3. The Eternal without qualities | The Eternal with infinite qualities |
| 4. The pure featureless One Existence - One பரமாத்மா | The One who is the Many - Many<br>ஜீவாத்மா |
| 5. The Impersonal<br>அனந்தகுணா | The infinite person who is the source and foundation of all persons and personalities. |
| 6. The Silence void of activities<br>புருஷன் | The Lord of Creation, the word.<br>ஓம் |
| 7. The Non-Being அசத் | The Master of all works and creation.<br>சத் |
| 8. The Ineffable<br>9. The Unknowable | That being known, all is known. |

ஒரு நாணயத்தின் ஒரு பக்கத்தைப் பார்த்து அதிலுள்ளதை நாம் அறிந்து அடுத்த பக்கமில்லை என்று கூறுவதில்லை. ஆனால் வாழ்வில் பல சமயங்களில் அதைச் செய்கிறோம், விவசாயிக்கு விவசாயமே பெரியது எனத் தோன்றுகிறது. அதைப் பேசும் பொழுது உலகமே விவசாயம் என்கிறான். மற்றது கண்ணுக்குத் தெரிவதில்லை. தெரிந்தால் மனதில் படுவதில்லை.

பிரம்மத்தைக் கண்டவர், கண்டு சித்தித்தவர் ஆயிரம் பேருண்டு. கண்டவர்கள் மனத்தால் கண்டவர்கள். நம் உயர்ந்த பகுதி மனம். மனத்தால் மட்டுமே நாம் காண முடியும். மனத்தால் பிரம்மத்தைக் காண்பது மைக்கிராஸ்கோப்பால் மனிதனைப் பார்ப்பதாகும்.

அப்படி இதுவரை கண்டவர்களுடைய ஆன்மீக அனுபவம் இரு பகுதிகளாகும். ஒன்றை பாஸிடிவ் எனவும், அடுத்ததை

நெகட்டிவ் எனவும் கூறினால் 7 வகைகளாக அவற்றைப் பிரித்து ஸ்ரீ அரவிந்தர் விளக்குகிறார். அவற்றை மேலே எழுதியுள்ளேன்.

ஒன்றை இரண்டாகப் பிரித்து, இரண்டையும் ஒன்றுக்கு எதிரானது மற்றது என்று காண்பிப்பது இயற்கையின் முறை என்கிறார். பிரம்மத்தை சத் எனவும் அசத் எனவும் அதுபோல் பிரித்துக் காட்டுகிறது சிருஷ்டி. சத் என்பதை ஆன்மாவாகவும், அசத் என்பதை ஜடமாகவும் கருதுவோம்.

சலனமற்ற மாறுதலற்ற பிரம்மம் என ஒன்றை ரிஷிகள் அறிவார்கள். அதை அக்ஷர பிரம்மம் என்பர். இதன் மறுபுறத்தைக் கண்டவர்கள் இந்த பிரம்மமே உலகிலுள்ள எல்லாப் பொருள்களாகவுமாயிற்று என்பர். அதை சத் புருஷனின் அம்சமாகக் கருதுவர்.

குணங்களற்றவன், நிர்குண பிரம்மம் என்பது அடுத்தது. அதன் மறுபுறம் சகுணம், எல்லா குணங்களையும் உடைய பிரம்மம். ஈஸ்வரன் இவ்விரு பகுதிகளாகப் பிரிந்து தெரிகிறது. இரண்டும் சேர்ந்த முழுமை ஈஸ்வரன்.

ரூபமற்ற பிரம்மம், அரூபிணி என்பது ஒன்று. இதன் மறுபுறம் எல்லா ரூபங்களுக்கும் உற்பத்தி ஸ்தானமாக இருப்பது.

செயலற்ற சொல்லற்ற மௌனம் அடுத்தது. எல்லா செயல்களையும் எல்லா சொற்களையும் தன்னுட் கொண்ட ஓம், சப்த பிரம்மம் அதன் மறுபுறம்.

சொல்லால் விவரிக்க முடியாதது, அறிவுக்கு எட்டாதது அடுத்தது, எதை அறிந்தால் எல்லாவற்றையும் அறிந்து கொள்ளலாமோ அது இதன் மறுபுறம்.

❋❋❋❋❋



## The Psychic

This is a Yoga of spiritual evolution. Starting from Matter the hidden spirit in it gains evolutionary experience by its movement in the process of generating life and collects its spiritual experience at the psychic centre which is tangible only in the Mind. Starting from there, the Yogi goes up and down to complete its experience through the journey.

Evolution is to find the hidden Sat through the dynamism of Chit by the leader of it, viz. Psychic. So He says that the body is the Delight of being tempting the hidden consciousness to find the secret Godhead.

❋❋❋❋❋

## The range of spiritual mind

| | | | |
|---|---|---|---|
| Higher mind | - | Silence | முனி |
| Illumined mind | - | Light | ரிஷி |
| Intuitive mind | - | Knowledge | யோகி |
| Overmind | - | Knowledge unhampered by Ignorance | தெய்வம் |

- மனத்திற்கும் சத்திய ஜீவியத்திற்கும் இடையே இந்த 4 நிலைகள் உள்ளன. தெய்வீக மனத்திற்கும் மேல் ஒரு பொன் மூடியுள்ளது.
- பொன்மூடியைக் கடந்தவுடன் நிர்வாண நிலையுண்டு.
- மனம் என்பதை மேற்சொன்ன 4 நிலைகளாலும், மனித மனத்தாலும் குறிப்பிடுகிறார்.
- சத்திய ஜீவியம் இரண்டாகப் பிரியும்பொழுது - காலத்தைக் கடந்ததும், காலத்திற்குரியதுமாக - அவற்றிடையே சத்திய ஜீவியத்தின் சிறு பகுதியாக மனம் உற்பத்தியாகிறது.
- சத்திய ஜீவியத்திற்கு முழுமையுண்டு.
- தன் முழுமையையிழந்து பகுதியான மனத்தை சத்திய ஜீவியம் உற்பத்தி செய்கிறது.
- சிருஷ்டி சத்திலிருந்து ஜடத்தை நோக்கி வரும்பொழுது தன்னை பிரம்மம் கொஞ்சம் கொஞ்சமாக இழந்து ஜடமாகிறது.
- சத்திய ஜீவியம் முழுமையை இழந்து மனமாவது அதன் பகுதி. *மனத்தைப் பிரிவினையின் கருவியாக உற்பத்தி செய்கிறது.*
- ஆன்மாவை (spiritual substance) மனம் பிரித்து வாழ்வையும், ஜடத்தையும் உற்பத்தி செய்கிறது.
- பிரம்மம் சிருஷ்டியின் அடியில் ஜீவனாகவும் மேலே சக்தியாகவும் உள்ளது. ஜீவன் என்றும் முழுமையானது. அதைப் பிரிக்க முடியாது. அதன் ஜீவியத்தையும் பிரிக்க முடியாது. பிரிவது Force சக்தி.

❋❋❋❋❋



## யோக விளக்கம்

மனிதன் தன் உயர்ந்த கரணமான ஆன்மாவை உடலிலிருந்து விடுவித்து அதன் ஆதியை அடைவது மோட்சம். ஆன்மா வேறு, உடலும் மனமும் வேறு என ஏற்றுக் கொள்வதால் மேற்கொள்ளும் பாதை மோட்சம்.

உடலும், வாழ்வும், மனமும் ஆன்மாவின் வேறு உருவங்கள், அவற்றுள் ஆன்மா பொதிந்துள்ளது. அது அனுபவம் பெற உடலைத் தாங்கியுள்ளது, விடுவிக்கக் கூடாது. பள்ளிக்குப் படிக்க வந்த பையனிடம் படிப்பை முடிக்கச் சொல்ல வேண்டும், வீட்டுக்கு அனுப்புவது மோட்சம் போலாகும். உடல் உழைப்பதும், உயிர் வாழ்வதும், மனம் சிந்திப்பதும் ஆன்மா அவற்றுள் பிறவியின் அனுபவத்தைப் பெறுவதாகும். அனுபவம் சேருமிடம் சைத்தியப் புருஷன். இவனை உடலில், முதலில் காண முடியாது. மனத்தில் காணலாம். அங்கு கண்டு அவன் வளர்ச்சியை மேலே 4 நிலைகளிலும் கீழே 3 நிலைகளிலும் தொடர்ந்து உடலில் சத்திய ஜீவனாகவும், சத்திய ஜீவியத்தில் ஈஸ்வரனாகவும் முடிப்பது ஆன்மீகப் பரிணாமமாகும். இதைப் பல பிறவிகளில் முடிக்க வேண்டும் என்பதால் மறுபிறப்புண்டு.

❋❋❋❋❋

## Four types of Knowledge

1. The surface mind gets its knowledge indirectly through the various senses.
2. The subliminal goes beyond the sense organs to get the knowledge of the environment without the medium of the sense organs.
3. Intuition is direct knowledge, not through the sense organs or senses.
4. Final knowledge is the knowledge of the spirit that identifies with the Superconscient.

- ஞானம் knowledge என்பது ஜீவியத்தின் வெளிப்பாடு.
- ஞானம் அடுத்த கட்டத்தில் Light ஒளியாகிறது.
- மீண்டும் Light மனிதனுக்குப் புரியும் அறிவாகும்.
- அவற்றுள் கடைசி கட்டமான அறிவு புலன்கள் மூலம் நாம் பெறும் அறிவு. கண்ணால் பார்ப்பதும், காதால் கேட்பதுமான அறிவு கண், காது என்ற பொறிகளால் நாம் பெறுவது.
- அறிவது மனம். புலன் கருவி. மனம் நேரே அறிய முடியும். அதற்குப் புலன் உதவி அத்தியாவசியமில்லை.
- இன்று நமக்கு ஐம்புலன்களுண்டு. 12 புலன்களிலிருந்து மனம் வளர்ந்ததால் மற்ற புலன்களை நாம் இழந்துவிட்டதாக அன்னை கூறுகிறார்.
- அடிமனம் புலனின்றி நடப்பவற்றை பதிவு செய்து கொள்ளக் கூடியது.
- ஒரு கிரேக்கப் பேராசிரியரிடம் வேலை செய்த படிக்காத பெண்ணுக்கு ஜன்னி வந்தபொழுது அவர் படித்த பாடங்களை அவள் மனப்பாடமாகக் கூறினாள்.
- ஒரு சமஸ்கிருதப் பண்டிதரின் சமையல்காரன் ஸ்லோகங்களை சரளமாகச் சொன்னான்.
- நம் அறிவு மேல் மனத்திற்குரியது. அடுத்தது அடிமனம்.
- நேரடி ஞானம் (intuition) யோகியுடையது. அவருக்குப் புலனோ மனமோ இல்லாமல் நேரடியாக அறிய முடியும்.
- முடிவான ஞானம் இறைவனுடன் ஐக்கியம் பெறுவதால் எழுவது.



## The 12 Aspects of Spirit

**Peace, Silence, Truth, Goodness, Knowledge, Power, Beauty, Love, Joy, Infinity, Eternity, Unity.**

| | | |
|---|---|---|
| **Peace** | - | Structureless Existence |
| **Silence** | - | Absence of Thought and Absence of acts |
| **Truth** | - | Objective state of Existence |
| **Goodness** | - | Combination of Truth and Knowledge |
| **Knowledge** | - | Consciousness in the plane of Time |
| **Power** | - | Will in Time |
| **Beauty** | - | Ananda seen by mind |
| **Love** | - | Soul seeing Bliss |
| **Joy** | - | Nerves experiencing ஆனந்தா |
| **Infinity** | - | Beyond Space |
| **Eternity** | - | Beyond Time |
| **Unity** | - | Unity of substance different from union of Consciousness. |

❋❋❋❋❋

## Contradiction to Unity
## முரண்பாடு

Contradiction முரண்பாடு - Matter ஜடம்
Conflict பிணக்கு - Life வாழ்வு
Compromise விட்டுக்கொடுப்பது - Mind மனம்
Harmony சுமுகம் - Supermind சத்திய ஜீவியம்
Union இணைவது - Consciousness ஜீவியம்
Unity ஐக்கியம் - Sat சத்

பிரம்மம் சிருஷ்டியில் மேலிருந்து கீழே வரும்பொழுது ஏற்படும் பல மாறுதல்களில் மேற்சொன்னதும் ஒன்று. மாறுதல்கள் பல.

1. சத் பல நிலைகளைக் கடந்து ஜடமாகிறது.
2. எதுவுமேயில்லாத பிரம்மம், எப்படியும் விவரிக்க முடியாத பிரம்மம், ஐக்கியமே உருவான பிரம்மம் ஜீவனாக முதலில் மாறுகிறது. அது சத் புருஷன்.
3. அந்நிலையில் ஐக்கியம் பாதிக்கப்படுவதில்லை.
4. ஐக்கியம் தன்னைக் கொஞ்சம் கொஞ்சமாக இழந்து முடிவில் ஜடத்தில் முரண்பாடாகிறது.
5. ஜடத்தில் முரண்பாடும், வாழ்வில் பிணக்கும், மனத்தில் விட்டுக் கொடுத்து வாழ்வதும், சத்திய ஜீவியத்தில் சுமுகமும், ஜீவியத்தில் இணைவதும், சத்தில் மீண்டும் ஐக்கியம் பெற்று பரிணாமம் பூர்த்தியாகிறது.
6. ஐக்கியத்தை இழந்து முரண்பாடாவது சிருஷ்டி. கீழே வருவது.
7. முரண்பாடு மீண்டும் ஐக்கியமாவது பரிணாமம்.
8. **பிரம்மம் தன்னைத் தன்னுள் மறைத்து ஜடமாகும் பாதை ஐக்கியம் முரண்பாடாவது.**

❋❋❋❋❋



## பிரம்மம்

| இதுவரை நாமறிந்தது | ஸ்ரீ அரவிந்தம் |
|---|---|
| 1. அடையலாம், விளக்க முடியாது | விளக்கலாம் |
| 2. Indeterminable சிருஷ்டிக்காது | Has self-determination பிரபஞ்ச சிருஷ்டி பிரம்ம சிருஷ்டி |
| 3. Self-contained Being தனித்து வாழ்வது | Has principles and Truths and powers சக்தி உண்டு, வெளிப்படும். |
| 4. Not relative உலகோடு தொடர்புள்ளதன்று | உலகமே பிரம்மம் பிரம்மம் வேறு, உலகம் வேறன்று |
| 5. World is its Lila லீலை | ஆனந்தத்திற்காக லீலை |
| 6. All negating Absolute neti, neti | Is an Absolute that is relative |
| 7. Dwells sufficient to itself on its immobile delight | Seeks delight in emerging from its opposite |
| 8. Solely a Force restoring in inactive sameness | Must have endless powers of its being.<br>Must have endless truths of its own self-awareness |
| 9. Don’t ask, accept creation | Creation is self-manifestation. Every possibility is a truth in the Absolute. |

## One and the Many

***The one secret of creation is seeking the joy of Union after consciously separating***

**பிரிந்தவர் கூடிப் பெறும் இன்பம் பேரின்பம்**

---

**Reason minus sensation is Intuition**

---

| | | |
|---|---|---|
| Brahman | Purusha | Ishwara |
| Maya | Prakriti | Shakti |

Finite, relative, One, Silence, mutable, Time, personal, Manifestation, Self and nature, Being, Individual, Form and their opposites are all parts or partial expressions of the ONE.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| Time | - | Becoming | - | ***காலம்*** | - | ***இல்லறம்*** |
| Timelessness | - | Being | - | ***கடந்தது*** | - | ***துறவறம்*** |

Simultaneous Integrality - Being of the Becoming

---

### 4 Ideas on which Life Divine Rests

1. Reconciling one without a second with *சர்வம் பிரம்மம்*.
2. God is known in the descent and not in the ascent.
3. The scientist does not know his field as fully as the Sannyasi knows Spirit.
4. Aryan balance.

❁❁❁❁❁



## Negative, Positive

***மனிதன் என்பவனை நாம் மனிதன் என்கிறோம். அவனிடம் நல்ல குணமிருந்தால் அதை பாஸிட்டிவ் எனவும், கெட்ட குணமிருந்தால் நெகட்டிவ் எனவும் கூறுகிறோம், அதனால்,***

- **மனிதன் இரு பிரிவுகளாக இருப்பதாக அர்த்தமில்லை.**
- **ஒன்றை விலக்க முடியும் என்றாகாது.**

***மனிதனைப் பிரிக்க முடியாது, பிரித்து அறியலாம். பிரிக்க முடியாது. அதே போல் பிரம்மம் ஒன்றே, உலகம் ஒன்றே. அவற்றைப் பிரித்து அறியலாம். தனித் தனிப் பாகங்களாகப் பிரிக்க முடியாது. இரண்டும் சேர்ந்த முழுமை பூரண யோகத்தின் அடிப்படை.***

***அறிவு பிரித்துப் பார்ப்பதைச் செயலால் பிரித்து அவை வேறுவேறு பகுதிகள் என்றால் அது உண்மையில்லை. அதன் அடிப்படையில் நாம் புரிந்து கொள்பவை அனைத்தும் தவறாகும்.***

***நமக்கு வேண்டியவை, வேண்டாதவை என உண்டு.***

- நாம் வேண்டியதை சேர்த்துக் கொள்கிறோம், வேண்டாததை விலக்குகிறோம்.
- **இன்று வேண்டாதது, நாளை வேண்டும் என்பது முக்கியம்.**
- எதையும் விலக்கக் கூடாது. முழுமை என்பது அதுவே.
- எந்த அளவுக்கு வேண்டாததைச் சேர்த்துக் கொள்கிறோமோ அந்த அளவுக்கு முழுமையுண்டு.
- **எவ்வளவு சீக்கிரம் வேண்டாதது வேண்டியது எனப் புரிகிறதோ, அவ்வளவு சீக்கிரம் முழுமை வரும்.**
- வாழ்வில் விலக்குவதை தேடிப் போக வேண்டியது விதியாக செயல்படுவதை அனுபவம் கூறுகிறது.

***அவசியமான நேரம், ஆபத்தான நேரம், முக்கிய விஷயம் வந்த நேரம் விலக்க முடியாதவை தங்களை வலியுறுத்துவதைக் காண்பது வாழ்க்கையில் ஸ்ரீ அரவிந்த இரகஸ்யம்.***

- தற்காப்புக்காக விலக்க அனுமதியுண்டு.
- அப்பொழுதும் “இவை விலக்கப்பட வேண்டியதில்லை” என்ற ஞானத்தோடு தற்காப்புக்காக விலக்குவது முறை, சட்டமாகும்.

## Sri Aurobindo has realised God in the body

**மோட்சமடைபவன் ஆன்மா அவனைவிட்டுப் பிரிந்து பரமாத்மாவை அடைகிறது**. அவனது 4 கரணங்களும் அதை சாதிக்கவில்லை. அப்படிப்பட்ட யோகம் இதுவரை இல்லை.

- ⊙ ஆன்மா ஆண்டவனை அடைவது மோட்சம்.
- ⊙ நான்கு கரணங்களும் இறைவனாக மாறுவது திருவுருமாற்றம்.

அப்படி மாற யோகம் செய்தால் மனிதன் மனத்திலிருந்து உயர்ந்து சத்திய ஜீவியத்தை அடைந்து, சத்திய ஜீவியம் அவனுள் எல்லாக் கரணங்களிலும் இறங்கி வந்து நிரம்பும்.

பகவான் சத்திய ஜீவியத்தை எட்டிய பின்னும் சத்திய ஜீவியம் இறங்கி வரும் அளவில் அமையவில்லை. 1926ஆம் ஆண்டு நவம்பர் 24ஆம் தேதி தெய்வீக மனத்தை பகவான் எட்டியது முழுமை பெற்றதால், அது இறங்கி வர ஆரம்பித்து அவர் மனம், வாழ்வு, உடலை, நிரப்பியதை சித்தி தினம் என நாம் தரிசன நாளாகக் கொண்டாடுகிறோம். அன்று அவர் தனிமையை நாடினார். பிறகு சத்திய ஜீவியத்தை அடைந்தார். இது பிரம்மத்துடன் நிரந்தரத் தொடர்புள்ளது. சத்திய ஜீவியம் அவர் உடலில் இறங்கி வந்து நிரப்பியது, அப்படி சித்தித்தது அவருடைய physical consciousness உடலின் ஜீவியத்தில் நடந்தது. அடுத்த கட்டம் உடலின் ஜடப்பொருள். அதைச் செய்தது அன்னை.

வேத ரிஷிகள் இயற்கையோடு இணைந்த வாழ்வை நடத்திய பொழுது தங்கள் ஜடமான உடலும், ஜடமான மலை, நதியும் ஒன்று எனக் கண்டனர். உடலின் அன்னமயப் புருஷன் விழித்து எழுந்ததால் ஏற்பட்ட சித்தியிது. பூரண யோகத்தில் உடலின் சைத்தியப் புருஷன் அதைச் செய்ய வேண்டும். பகவானுக்குப் பின் அன்னை யோகத்தை உடலில் தொடர்ந்தார்.

❋❋❋❋❋



## Karma is of the Force, not of the Being.

பிரம்மம் என்பது ஜீவன், இது இதன் சக்தியால் கவரப்பட்டுள்ளது. மனம் துண்டாடும்பொழுது சக்தியைத் துண்டு செய்கிறது. ஜீவனைத் துண்டாடுவதில்லை, துண்டாட முடியாது. சக்தி, காரண காரியத்திற்குட்பட்டது. ஜீவன் காரணத்திற்கோ, காரியத்திற்கோ உட்பட்டதில்லை.

- ⊙ அதனால் அதற்குக் கர்மம் இல்லை.
- ⊙ கர்மம் மேலேயுள்ள சக்திக்கு, ஜீவனுக்கில்லை.
- ⊙ சக்தியை நம்புபவர்க்குக் கர்மம் உண்டு.
- ⊙ நம்பாதவர்க்குக் கர்மம் இல்லை.
- ⊙ ஸ்ரீ அரவிந்தம் மனத்திலிருந்து செயல்படவில்லை. Being of the becoming சைத்தியப் புருஷனிலிருந்து செயல்படுகிறது.
- ⊙ கர்மம் Beingக்கு இல்லை. Being of the becomingக்கு கர்மம் இல்லை.
- ⊙ கர்மம் மனத்திற்கும், வாழ்வுக்கும் உண்டு.
- ⊙ ஜீவனுக்கு கர்மமில்லை.

---

### Force is anterior to the instrument

விஞ்ஞானி சக்தி கருவியிலிருந்து எழுகிறது என்பதை மறுத்து ஸ்ரீ அரவிந்தர் சக்தி தனக்குத் தேவையான கருவியைச் செய்து அதன் மூலம் செயல்படுகிறது என்கிறார். மின்சாரம் மோட்டாரை ஓட்டினால், மின்சாரம் மோட்டாரிலிருந்து வரவில்லை, வெளியிலிருந்து வருகிறது. ***மனம் தான் செயல்பட ஒரு கருவி வேண்டும் என மூளையை உற்பத்தி செய்தது, ஜீவாத்மா உலகில் செயல்பட உடலைத் தாங்குவதுபோல்.*** மூளை வேலை செய்வதால் எண்ணம் உற்பத்தியாவதாக விஞ்ஞானி கருதுவது சரியில்லை என்கிறார் ஸ்ரீ அரவிந்தர்.

---

### Waste

இயற்கை பல காரியங்களை ஒரே சமயத்தில் சாதிக்க முனைவதால் விரயம் அதிகம் என நமக்குப் படுகிறது. இயற்கையில் ***விரயம் என்பதேயில்லை. அத்திறமையை மனிதன் பெறவில்லை என்று பகவான் கூறுகிறார்.***

# Jivatma and Psychic

- *Sri Aurobindo uses the term central being often to denote Jivatma.*
- *The soul in Timelessness is Jivatma.*
- *Its parts are* அன்னமயப் புருஷா, பிராணமயப் புருஷா, மனோமயப் புருஷா, (விஞ்ஞானமயப் புருஷா, ஆனந்தமயப் புருஷா)
- இது சாட்சிப் புருஷன், மாற்றமில்லாதது. பரிணாமத்தில் சேராதது.
- *Psychic is the representation of the Jivatma in the Becoming. It is there in every part as mental psychic, vital psychic, physical psychic. There is a central psychic behind the heart.*
- *The psychic is the soul that evolves. It can lead one to* மோட்சம் *if he chooses.*
- *Mother says there are not many Jivatmas but only one.*
- *Jivatma is a poise of the Supermind.*
- *Jivatma is a point in the universe.*

---

### Bliss and Delight

- *No distinction can be seriously made but He speaks of static Bliss and active Delight.*
- *Delight of Being and Delight of Becoming are terms He uses.*
- *Sachidananda has its Bliss static and it expresses it in the objects when it becomes active Delight.*

---

### Creation of Force, Form and Sensation

- *Force issues out of consciousness as the power of knowledge-will.*
- *When an unformed Force meets another, a Form is created.*
- *Form meeting form creates sensation.*
- *Sensation is consciousness.*



### Commonalty, Individuality, Essentiality

- *Pearl and diamond are His examples.*
- *Knowing their individuality we can use them.*
- *Knowing their commonalty we can make them.*
- *Knowing their essentiality we can transmute one into the other.*

### Intuition

- *By Intuition dwelling on the Becoming, Time is created.*

### Absolute and the Relative

- *There is no inherent contradiction.*
- *They coexist or exist in each other.*
- *The Absolute retains its absoluteness in some way all the time.*

### Eternity

- *Eternity is the common term between the Timeless and Time.*

### Ethics

- *It is not ethics that applies different rules to different situations.*
- *Infra, supra ethics. What is common to all is the satisfaction of force.*
- *Delight of Being becoming Delight of Becoming is what happens.*

### Man has double Consciousness

- *Verticality.*
- *Modern astrology.*

### Part

- *Part is greater than the whole when the part contains the transcendent.*

### Maya

- *There is no illusion in the world, but there is Ignorance.*
- *Dream is real.*
- *Hallucination does see only objects that are there.*

# ஜீவாத்மா, சைத்தியப் புருஷன்

- ⊙ ஜீவாத்மா, பரமாத்மாவின் பகுதி என்பது மரபு.
- ⊙ ஜீவாத்மாவே பரமாத்மா என்பது ஸ்ரீ அரவிந்தம்.
- ⊙ உலகில் ஒரு பிரகிருதியும் இலட்சக்கணக்கான ஜீவாத்மாக்களும் இருப்பதாக சாங்கியம் கூறுகிறது.
- ⊙ பிரகிருதி ஒன்று, ஜீவாத்மாவும் ஒன்றே என்கிறார் அன்னை.
- ⊙ பிரபஞ்ச பிரகிருதி தன்னுள் பல புள்ளிகள்போல் பல ஜீவாத்மாக்களை உண்டு பண்ணுகிறது. பலவாகத் தோன்றினாலும் அவை ஒன்றே.
- ⊙ சத்திய ஜீவியத்திற்குள்ள மூன்று நிலைகளில் ஜீவாத்மாவும் ஒன்று.
- ⊙ ஜீவாத்மாவை நாம் மனத்தில் சாட்சிப் புருஷனாகவும், உடலில் அன்னமயப் புருஷனாகவும், வாழ்வில் பிராணமயப் புருஷனாகவும் காண்கிறோம்.
- ⊙ இவை தொடர்ந்து விஞ்ஞானமயப் புருஷனாக சத்திய ஜீவியத்திலும், ஆனந்தமயப் புருஷனாக ஆனந்தத்திலும் தெரிகின்றன.
- ⊙ ஜீவாத்மாவுக்குப் பரிணாமமில்லை.
- ⊙ சைத்தியப் புருஷன் பரிணாமத்தில் ஜீவாத்மாவின் பிரகிருதி.
- ⊙ ஜீவாத்மாவை Being எனவும் சைத்தியப் புருஷனை Being of the Becoming எனவும் கூறுவோம்.
- ⊙ ஜீவாத்மா காலத்தைக் கடந்தது.
- ⊙ சைத்தியப் புருஷன் காலத்துள், காலத்தைக் கடந்துள்ளது.
- ⊙ ஜீவாத்மாவின் பகுதியான மனோமயப் புருஷன் மேல் மனத்திலிருக்கிறான்.



- ⊙ சைத்தியப் புருஷன் அடிமனக் குகையிலிருக்கிறான்.
- ⊙ சைத்தியப் புருஷனும் ஜீவாத்மாபோல் மோட்சத்திற்கு அழைத்துச் செல்வான். ஆனால் ஜீவாத்மாவுக்கு திருவுருமாற்றமில்லை.
- ⊙ கிருஷ்ணபரமாத்மா வந்த பிறகே பக்தியோகம் வந்தது. சைத்தியப் புருஷன் அதன் பிறகே பிறந்தான்.
- ⊙ 1947க்கு முன் இந்தியாவில் தொழில்கள் இருந்தன. அவை ஆங்கிலேயருடையவை. இந்தியர் தொழில்கள் இருந்தாலும் ஆங்கிலேயர் அனுமதியிலிருந்து கிடைத்தவை. இன்றுள்ள தொழில்கள் சுதந்திர இந்தியர் நடத்துபவை. ஜீவாத்மா 1947க்கு முன் உள்ள நிலைக்கும் சைத்தியப் புருஷன் பின்னுள்ள நிலைக்கும் ஒப்பிடலாம்.
- ⊙ ஜீவாத்மாவை விடுதலை செய்ய, பிரகிருதியை விட்டு அகல இதுவரை யோகம் செய்தனர். ஸ்ரீ அரவிந்தம் பிரகிருதியின் யோகம், சைத்தியப் புருஷன் பிரகிருதிக்கு பூலோகத்தில் மோட்சம் கிடைக்க யோகம் செய்கிறது. அதை ஆன்மீகப் பரிணாமம் என்கிறோம்.

❋❋❋❋❋

# Practical concept of Infinity
# Concrete conception of Infinity
# Boundless finite

Infinity of space and eternity of Time are two related concepts. As all life is covered by Space and Time, Infinity cannot stretch beyond.

Complete minus Complete = Complete

is the explanation Upanishads offer about Infinity. As Time is a concept for the metaphysician, Infinity is not a known concept in life. It is there in Mathematics and Metaphysics.

The nearest we can think of in life to infinity is *காமதேனு, கற்பகவிருஷம், அக்ஷய பாத்திரம்* all of which are myths.

One thing that we can rationally use is knowledge which is infinite. When we take knowledge out, it rather grows as we draw on it.

**Infinity is different from the boundless finite.**

The capacity to refuse to be finite is infinity. Can we have a practical concept of it? Our very basis is infinity and therefore it becomes necessary.

As matter, life, mind and spirit are at the base infinite, though life and matter do not behave like that, we must have an idea of that concept. Water drawn from a well which goes back into it through another route can be inexhaustible but will not qualify for infinity. What grows by what it feeds on can be infinite. Solar energy is inexhaustible but mind's knowledge and vital interest grow by every expenditure of it. **Our own minds must have a PRACTICAL concept of Infinity to appreciate the infinity in creation.**

The conception of Infinity conceived by the thinking mind (No.1) when fully accepted by the physical mind (No.3) in its substance, will become a reality.



# Practical concept of Infinity
# Concrete conception of Infinity
# அனந்தத்தின் தத்துவம்

அனந்தம் என்பது அந்தமில்லாதது, முடிவில்லாதது. நடந்து போனால் நாம் ஓர் இடத்தில் முடிவடைகிறோம் என்பதன்று. காலத்தைக் கடந்ததில் நினைத்தாலும், எதிர்காலத்தில் நினைத்தாலும் முடிவு தெரிவதில்லை.

காமதேனு, கற்பக விருக்ஷம், அட்சயபாத்திரம் என்பவை புராணங்களில் கேட்டவை. எடுக்க எடுக்கக் குறையாது எனக் கேள்விப்பட்டுள்ளோம் (inexhaustible). கணித சாஸ்திரத்திலும், தத்துவத்திலும் அனந்தம் ஒரு கருத்தாக (conception) விளக்கப்படுகிறது. ஆன்மிகத்திற்கு அனந்தம் வெறும் கருத்தன்று, அது ஓர் அனுபவம். எடுக்க எடுக்கக் குறையாதது மட்டுமன்று, எடுத்தால் வளரும் என்பது அனந்தத்தின் அம்சம்.

வாழ்வில், நடைமுறையில் இது உண்மை என்பதை ஸ்ரீ அரவிந்தம் எடுத்துக்காட்டுகிறது, வலியுறுத்துகிறது. இது புரிந்தால் ஸ்ரீ அரவிந்தம் புரியும். இது புரியாமல் புரியாது. உபநிஷதம் முழுமையிலிருந்து முழுமையை எடுத்தபின் முழுமை மீதியாக இருக்கும் என்று இக்கருத்தைக் கூறுகிறது.

கல்வியைப் பொருத்தவரை எடுத்தால் வளரும் என்பதை ஏற்கலாம். தெம்பு, சக்தி, பணம் ஆகியவற்றுள் இக்கருத்தை ஏற்பது எளிதன்று என்றாலும் அங்கும் இவை உண்மை.

- ⊙ உழைப்பவன் உடலால் உழைக்கிறான். உழைத்தால் உடல் களைப்படையும். உடலில் உணர்வுண்டு, உணர்வில் அறிவுண்டு, அறிவில் ஆன்மா உண்டு. உடல் உழைப்பில் ஆன்மா அறிவு, உணர்வு மூலம் வெளிப்பட உழைத்தால் 12 மணி, 18 மணிநேர வேலைக்குப் பின் களைப்புத் தெரியாது என்பது அனுபவம். போரில் பலர் அனுபவம் இது.
- ⊙ வயதாக ஆக, மேற்சொன்னதுபோல் வாழ்பவர், வயோதிகம் வராமல், இளமை நிறைவது அனுபவம்.
- ⊙ பணம் உழைப்பால் வரும். அதற்கு உணர்வும், கடமையும், இலட்சியமும் உண்டு. அதன்படி பணம் செலவானால், உபரியாவது அனுபவம்.

ஒரு செயலில் அதன் உயர் அம்சம் வெளிப்பட்டால், செயலும், சக்தியும், பொருளும் உபரியாவது அனுபவம். உபநிஷத தத்துவத்தை அனுபவத்தால் அறிந்தவர் கூறுவதை மனம் தெளிவாக அறியுமானால் (conceive) அத்தெளிவை மனத்தில் உறுதி ஏற்குமானால் (as a concrete conception of Infinite) அத்தெளிவுக்குப் பலனாக வாழ்வு உபரியாகும். அதிர்ஷ்டமாக முடியும்.

## Ego, Purusha, World-Being, Transcendent

- *Ego makes the Many possible from the One.*
- *Cosmic Self reveals itself when Ego dissolves.*
- *Ego is in the Force, not in the Being of consciousness.*
- *A tearing sound is heard when the physical ego goes.*
- *Ego is formed by self-affirmation of the vital.*
- *Ego's ethics are not ethics.*
- *Ego can usurp any plan to dissolve it.*
- *Let Shakti come to you by dissolving the ego. Ego cannot then usurp it.*
- *So far all realisations are egoistic realisations.*
- *Ego belongs to the surface.*
- *Ego is coordinating intelligence.*
- *Ego is reason.*
- *The Gods have egos.*
- *Senses are the creation of ego.*
- *Ego is the poise of Supermind in Ignorance.*

❋❋❋❋❋



## அகந்தை, புருஷன், பிரபஞ்ச ஆத்மா, பரமாத்மா

- **பரமாத்மா ஜீவாத்மாவாக அகந்தை வழி செய்கிறது.**
- **அகந்தை அழியும்பொழுது பிரபஞ்ச ஆத்மா தரிசனம் தரும்.**
- **அகந்தை சக்திக்குரியது, ஜீவியத்திற்கோ, ஜீவனுக்கோ இல்லை.**
- **உடலில் அகந்தை கரைந்தால் துணி கிழியும் சத்தம் கேட்கும்.**
- **உயிர் தன்னை வலியுறுத்தினால் அகந்தை பிறக்கிறது.**
- **அகந்தையின் தர்மம் அதர்மம்.**
- **அகந்தையை அழிக்கும் எந்த முறையையும் தானே செய்வதாக நடித்துக் கெடுக்கும்.**
- **அகந்தையை அழித்தால், சக்தி நம்மை நாடி வரும். வந்த சக்தியைப் பயன்படுத்த அங்கு அகந்தையிருக்காது.**
- **இதுவரை உலகம் கண்ட ஆன்மிக அனுபவங்கள் அகந்தைக்குரியன.**
- **அகந்தை மேல் மனத்திற்குரியது.**
- **அகந்தை என்பது அறிவின் மையம்.**
- **அகந்தையும் பகுத்தறிவும் ஒன்றே.**
- **தெய்வங்கட்கு அகந்தையுண்டு.**
- **புலன்கள் அகந்தையின் கருவிகள்.**
- **சத்திய ஜீவியத்தின் மூன்று நிலைகளில் அறியாமையில் உள்ள நிலை அகந்தை.**
- **அகந்தைக்கு அனந்தனின் அம்சமுண்டு.**

❋❋❋❋❋

## Form, Force, Sensation
## ரூபம், சக்தி, ஜீவியம்

இரு சக்திகள் சேர்ந்தால் ரூபம் உண்டாகிறது. இரு ரூபங்கள் சேர்ந்தால் ஜீவியம் உண்டாகிறது.

---

### Individuality, Commonalty, Essentiality

- முத்து, வைரம் ஒரு காலத்தில் எவை என்று மக்கள் அறியாத காலத்தில் எவரும் பயன்படுத்தவில்லை. அவை என்ன என்று அறிவது அவற்றின் individuality தன்மையை அறிவதாகும்.
- விஞ்ஞானம் அவை இரண்டும் ஒரே அணுக்களால் செய்யப்பட்டன எனக் கண்டுள்ளது. (Commonalty) இரண்டிற்கும் பொதுவான தன்மையை அறிவதால், அவற்றை இன்று செயற்கையாகச் செய்கிறார்கள.
- இரண்டும் பிரம்மத்தாலானது என்பது essentiality. அதை அறிந்த ரிஷி ஒன்றை மற்றதாக மாற்றுவார் transmute.
  - ❈ தனித்தன்மை தெரிந்தால் பொருள்களைப் பயன்படுத்தலாம்.
  - ❈ பொதுத்தன்மை தெரிந்தால் அவற்றை நாமே செய்யலாம்.
  - ❈ ஆன்மீகச் சாரம் தெரிந்தால், ஒன்றை மற்றதாக மாற்றலாம். அது இரஸவாதம் எனப்படும்.

---

### பகுதி, முழுமை

- பகுதியும், முழுமையும் சமம், ஒன்றேயாகும்.
- பகுதி தன்னுள் ஈஸ்வரனிருப்பதை அறிந்தால் முழுமையை விடப் பெரியதாகும்.

**தன்னையறிந்த பகுதி முழுமையை விடப் பெரியது.**

❋❋❋❋❋



### தர்மம் (Ethics)

- விலங்குக்கும், தெய்வத்திற்கும் தர்மமில்லை.
- மனிதன் தர்மம் என்று கூறுவது அதர்மம். தான் புலியைச் சுடுவது வேட்டை. புலி மனிதனைச் சாப்பிடுவது கொடுமை என தனக்கொரு தர்மத்தையும், பிறர்க்கொரு தர்மத்தையும் பின்பற்றுவது அநியாயம்.
- விலங்குக்கும், மனிதனுக்கும், தெய்வத்திற்கும் பொதுவானது என்ன?
- சக்தி தன்னைப் பூர்த்தி செய்து கொள்வதே மூன்று நிலைகட்கும் பொதுவானது என்பதால் தர்மத்தை ஏற்பதைவிட இக்கொள்கையை ஏற்கலாம்.
- சச்சிதானந்தம் ஆனந்தத்தை அமைதியாக அனுபவிக்கிறது (Delight of Being). மனித உலகில் ஆனந்தம் சிருஷ்டியில் வெளிப்படுகிறது (Delight of Becoming). The spiritual fact is the Delight of Being changes into the Delight of Becoming. அமைதியான ஆனந்தம் சிருஷ்டியில் வெளிப்படும்பொழுது ஆனந்தம் பரிணாம வளர்ச்சியைப் பெறுகிறது.
- நம் அன்றாட வாழ்வில் இக்கொள்கை வெளிப்படுவதைக் காண முடிந்தால் அதர்மம் இல்லை எனவும், நாம் இன்று தர்மம் என நினைப்பது தர்மமில்லை எனவும் தெரியும். உதாரணமாக நாம் கடும் விரதங்களைக் கடைப்பிடிப்பதற்குப் பதிலாக இனிய பண்புகளை மேற்கொள்ள முயன்றால் கடுமை இனிமையாக மாறுவதைக் காணலாம்.
- நாம் உயர்ந்த பண்புகளை ஏற்க முடியாத நேரம் வாழ்வு நம்மைக் கடுமைப்படுத்துகிறது. ஆனந்தம் பெற நம்மை வாழ்வு கடுமைப்படுத்த வேண்டிய நிர்ப்பந்தம் நம் மனத்தைக் குழப்புகிறது. இனிமையை இதமாகக் கடும் உள்ளம் ஏற்றால் சத்தியம் கருணையாக, கனிவாக வெளிப்படும்.

❋❋❋❋❋

## Double consciousness
## இரட்டை ஜீவியம்

- பூமியில் நாம் நிற்பது horizontal ஆக நிற்கிறோம், ஆனால் நாம் நேராக நிற்பதாகவே உணர்கிறோம். தரைமட்டமாக நிற்பதை அறிவு ஏற்றாலும், உணர்வு நேராக நிற்பதாகக் கூறுகிறது.
- ஜோஸ்யம் பெரும்பாலும் பலிக்கிறது. இந்த சாஸ்திரம் சூரியன் உலகைச் சுற்றி வருவதாகக் கொண்டு எழுதப்பட்டது. இன்று எந்த ஜோஸ்யமும் பூமி சூரியனைச் சுற்றி வருவதாக அறியும்.

  அப்படி அறிந்தாலும் ஜோஸ்யத்தை எதிராகக் கணிக்கின்றனர்.
- இரண்டு எண்ணங்களை மனம் ஏற்றாலும், மனிதனால் ஒன்றைப் புறக்கணித்து அடுத்ததின் அடிப்படையில் செயல்படமுடியும் என்கிறார் பகவான் ஸ்ரீ அரவிந்தர்.

---

### மாயை

- மாயை என்பது இல்லாதது என்று கூறுகிறார்கள்.
- இதற்குக் கனவையும், பழுதென்ற பாம்பையும் உதாரணமாகக் காட்டுகிறார்கள்.
- கனவு இல்லாதது இல்லை. பழுதும், பாம்பும் உள்ளவை. இல்லாதவையில்லை என்பதால் பொருத்தமாகாது.
- மாயை சிருஷ்டியின் கருவி, இல்லாதது இல்லை என்கிறார் பகவான்.
- அஞ்ஞானத்தை 'அசித்தி' என விளக்கி இறைவனை அறியாதது அஞ்ஞானம் என்றால் உலகம் மாயையாகும். அஞ்ஞானம், ஞானத்தின் மறு உருவம் எனில் அத்தவறு வாராது. உலகம் மாயையில்லை, இறைவன் தன்னிச்சைப்படி தன்னைத் தன்னுள் ஒளித்து மீண்டும் நினைவு வந்து ஆனந்தம் பெற ஏற்படுத்தியதே உலகம் என்றாகும் என்பது பகவான் விளக்கம்.

---



## ஸ்ரீ அரவிந்தரின் சரணாகதி

- சரணாகதியைக் கீழ்ப்படிதல் என நினைக்கத் தோன்றும்.
- எதிரியின் வலிமைக்குக் கீழ்ப்படிதல் பணிவு, obedience, submission, accepting a defeat எனப் பெயர்.
- உடலால் பணிந்தால் உணர்ச்சி கொந்தளிக்கும்.
- உணர்வாலும் அடங்கினாலும், மனம் பணிவை ஏற்காது.
- மனமும் பணிவு சரி என ஏற்றாலும் ஆழத்தில் உணர்வு ஒத்துக் கொள்ளாது.
- நாம் ஒரு காரியத்தை உணர்வாலோ, அறிவாலோ செய்யும்பொழுது, நிர்ப்பந்தத்தால் செய்தால் கீழுள்ளதும், மேலுள்ளதும் ஏற்கா. மாமன் கடுமையை உணர்வு ஏற்றாலும், மனம் சரியில்லை எனக் கூறும். உடல் பணியாது.
- பூரணமாக ஏற்க நாம் பயன்படுத்தும் கரணமும், அதன் மேலும், கீழும் உள்ள கரணங்களும் ஏற்க வேண்டும்.
- மேலுள்ள கரணம் ஏற்பது ascent சரி என்றாகும். கீழுள்ளது ஏற்றால் descent சரி என்றாகும்.
- Descent சரி எனில் செயலுக்கு ஆன்மிக அனுமதியுண்டு எனப் பெயர்.
- ஒரு கரணத்தில் அதன் சுபாவமும், ஜீவாத்மாவின் பகுதியின் சுபாவமும், சைத்தியப் புருஷனின் பகுதியின் சுபாவமும் உண்டு.
- மேல் பாகம் ஜீவாத்மாவின் பகுதியின் (உ.ம். மனோமயப் புருஷன்) சுபாவம் ஏற்பதைக் காட்டும். கீழ்ப்பாகம் சைத்தியப் புருஷனின் சுபாவம் ஏற்பதைக் காட்டும்.
- அதனால் சரணாகதி பூரணச் சரணாகதியாகிறது.
- முடிவான பலன், முதலிலேயே வரும்.
- கீதைபோல் சரணாகதி மோட்சமடைவதற்கில்லை, திருவுருமாற்றத்திற்கு.
- ஸ்ரீ அரவிந்தரின் சரணாகதி காலத்திலிருந்து காலத்தைக் கடந்ததையும் கடப்பது.
- லீலையில் இறைவன் திருவுள்ளத்தைப் பூர்த்தி செய்து அஞ்ஞானத்திலிருந்து ஞானம் வெளிவருதலில் இன்பம் பெறுவது ஸ்ரீ அரவிந்தரின் சரணாகதி.
- பணிவு உடலின் செயல். கீதையின் சரணாகதி மனத்தின் செயல். ஸ்ரீ அரவிந்தரின் சரணாகதி சைத்திய புருஷனின் செயல்.
- சரணாகதி ஸ்ரீஅரவிந்தர் உலகத்திற்கு அளித்த முடிவான பெரிய பரிசு.

❁❁❁❁❁

The 56 Chapters in one Tamil epigram

Life Divine - 56 அத்தியாயங்களின் தலைப்பு

## பொருளடக்கம்

### Book I

1. முரண்பாடே உடன்பாடு
2. ஜடமே ஆன்மா
3. ஆன்மாவே ஜடம்
4. பரம்பொருளே பரந்த உலகம்
5. பாதாளத்தையும் பரம்பொருளையும் மனிதன் இணைக்க வேண்டும்
6. பிரபஞ்சம் பூர்த்தியாகும் ஜீவாத்மா ஜீவாத்மாவில் பூர்த்தியாகும் பிரபஞ்சம்
7. அகங்காரத்தின் அதிகாரம் அற்றுப் போயிற்று
8. புலன்கள் அவிந்தால் ஞானம் எழும்
9. சமுத்திரம் - ஸ்தாணு - பிரம்மம்
10. பிரகிருதி புருஷனுடைய சக்தி
11. அவனியில் வெளிவரும் ஆனந்தம்
12. பரமாத்மாவின் ஆனந்தம் ஜீவாத்மாவுக்குரியது
13. மாயை என்பது மயன்
14. சத்திய ஜீவியம் சிருஷ்டித்தது
15. பிரம்மமானவை, பிரம்மத்தினுள் பிரம்மத்தை வைத்துக் கொண்டுள்ளன
16. பரமாத்மா - ஜீவாத்மா - அகந்தை



17. சச்சிதானந்தத்தில் சத்திய ஜீவிய வாழ்வு
18. மனம் பிறந்தது
19. வாழ்வு
20. ஆசையும், மரணமும்
21. ஆசை அன்பாகிறது
22. வாழ்வின் சிக்கல்
23. சைத்தியப் புருஷன்
24. ஜடம்
25. சிக்கலின் முடிச்சு
26. சப்த லோகங்கள்
27. பரிணாமம்
28. சத்திய ஜீவியம் பலிப்பது ஆண்டவன் கட்டளை

### Book II

### Part - I

1. பிரபஞ்ச சிருஷ்டி, பிரம்ம சிருஷ்டி
2. பார்வைக்கு மூன்று பக்குவத்திற்கு ஒன்றே
3. பரமாத்மாவே ஜீவாத்மா
4. இறைவன் தீமையைப் படைக்கவில்லை
5. மாயை என்பது அஞ்ஞானம்
6. கனவு உள்ளது, பாம்பும் பழுதும் இல்லாதது இல்லை
7. ஞானமே அஞ்ஞானம்

8. மேல் மனம் பரமனின் ஆடல் அரங்கம்
9. இரண்டும் இருவிடத்திலும் வேண்டும்
10. நால்வகை ஞானம்
11. எழுவகை அஞ்ஞானம்
12. ஆனந்தமாக மூழ்குவது அஞ்ஞானம்
13. அஞ்ஞானம் ஞானத்தைவிடப் பெரியது
14. தீமைக்குக் காணும் தீர்வு

## Part - II

15. பரமாத்மாவைக் கடந்த பிரம்மம்
16. வாழ்வு பரமாத்மாவைத் தன்னுட்கொண்டது
17. இறைவனும் இயற்கையும் இணையும் இடம்
18. அகம் புறமாகும் அற்புதம்
19. எழுவகை ஞானம்
20. புனர் ஜென்மம்
21. சூட்சும உலகங்கள்
22. அழியாத ஆத்மாவின் அமர வாழ்வு
23. மனிதனின் வரலாறு
24. ஆத்மாவைக் காண்பதும் காட்டுவதும் சேவை
25. மூன்று திருவுருமாற்றங்கள்
26. சத்யாரோகணம்
27. சத்திய ஜீவன்
28. தெய்வீக வாழ்வு



**Outline of Life Divine -**

## The History of Spirituality in India
## Life Divine - இந்திய ஆன்மீக வரலாறு

இந்தியா ரிஷிகள் பிறந்த நாடு. உலகின் ஜகத்குருவாகும் தேசம். ஆன்மீகம் வேத காலத்தில் பிறந்தது. உபநிஷதம் வேதத்தை மனத்தின் உச்சிக்குக் கொண்டு போயிற்று. புத்தர் உலகை வென்றார். தீமையை வென்றார். ஆன்மாவே இல்லை, தேவையில்லை என்றார். அகந்தைக்கு வாழும் வழியில்லாத வாழ்வை வகுத்துக் கொடுத்தார். பக்தி பிறந்தது. கிருஷ்ண பரமாத்மா அவதரித்தார். சைத்தியப் புருஷன் பிறந்தான். தீமையை உலகில் வென்று யுகதர்மத்தை கிருஷ்ணன் நிலை நாட்டினார். கீதோபதேசம் சரணாகதியை கனிந்த ஆத்மாவுக்கு அருளியது. உலகின் குரு ஆகவும் உடலே பிரதானம். நாட்டின் உடல் **56** குறுநில மன்னரால் ஆளப்படுகிறது. உடல் **ஒன்றுபட வேண்டும்.** எல்லா முறைகளையும் கடைப்பிடித்துப் பலன் காணாத இயற்கை அன்னிய படையெடுப்பை நாடியது. ஆயிரம் ஆண்டில் நாடு உடலில் ஒன்றுபட்டது. பர்மாவும், இலங்கையும், மலேயாவும் உடலால் ஒன்றின. சூட்சுமத்தில் நாடு விடுதலை பெற்றது. அது ஸ்ரீ அரவிந்தர் பெற்ற வரம். ஒரு லட்சம் ஆங்கிலேயரால் முப்பது கோடி இந்தியரை புரட்சியில் சமாளிக்க முடியுமா? ஆயுதம் ஏந்தி நாடு விடுதலைக்குப் போராட வேண்டும் என ஸ்ரீ அரவிந்தர் கருதினார். நாடு அஹிம்சையை நாடியது. இருப்பினும் **1942**இல் கிரிப்ஸ் திட்டம் வந்தபொழுது முழுச் சுதந்திர வாய்ப்பு இருந்தது. நாட்டின் தலைமை ஆன்மீகத் தீர்க்க தரிசனத்தை ஏற்க மறுத்தது. மீண்டும் உடல் பிளவுபட்டது. அஹிம்சை நாட்டிற்கும், தலைவருக்கும் ஹிம்சையைக் கொண்டு வந்தது. ஸ்ரீ அரவிந்தரின் முதல் இலட்சியம் **45** நாடுகட்கு விடுதலை அளித்தது. அவரது அடுத்த இலட்சியங்கள் கீழ்வருமாறு,

- **உலகம் ஒன்றுபட வேண்டும்.**
- **இந்தியா உலகின் குருவாகும்.**

⊙ சத்திய ஜீவன் பிறப்பான்.

மனிதன் என்பவன் பல பாகங்களாலானவன். ஆன்மா அதனுள் முதன்மையானது. உடல் முதல் ஆன்மாவரை எல்லாக் கரணங்கட்கும் மற்ற எல்லாக் கரணங்களும் உண்டு என்பது கவனிக்கத்தக்கது. உதாரணமாக மனம் என்ற கருவிக்கு உணர்ச்சியுண்டு. மூளை என்பது மனத்தின் உடல், மனத்தில் ஆன்மாவுண்டு. மேலும் ஒரு விஷயம் மனத்திற்கு சைத்தியப் புருஷனுண்டு. உடலுக்கு அறிவுண்டு, உணர்ச்சியுண்டு. உடலின் ஆன்மா அன்னமயப் புருஷன் எனப்படும். உடலுக்கு சைத்தியப் புருஷனுண்டு. சைத்தியப் புருஷன் மனத்திலிருந்து வளர்ந்து உணர்வின் மூலம் உடலின் சைத்தியப் புருஷனானால், அது சத்திய ஜீவனாகும்.

உடல் - உணர்வு - மனம் - ஆன்மா - சைத்தியப் புருஷன் என்பவை நம் கரணங்கள். மனிதன் ஆதி நாளில் உடலாலேயே வாழ்ந்தான். அவன் பெற்ற அறிவு உடலின் அனுபவத்தால் பெறப்பட்டது. அன்று அவன் உடலின் ஆன்மாவின் பகுதியாக அன்னமயப் புருஷனிருந்தது. பிறகு உணர்ச்சியும், அறிவும் வளர்ந்தன. உணர்வின் உடல் நரம்பாகும். அதன் ஆன்மீகப் பகுதிக்குப் பிராணமயப் புருஷன் எனப் பெயர். மனத்தின் ஆன்மாவின் பகுதிக்கு மனோமயப் புருஷன் எனப் பெயர். கிருஷ்ணாவதாரம் தெய்வீக மனத்தின் அவதாரம். இராமாவதாரம் (Higher mind) முனிவர் மனத்தின் அவதாரம். கிருஷ்ணாவதாரத்திற்கு முன் பக்தி யோகமில்லை. பக்தி யோகத்திற்குரிய ஆன்மா சைத்தியப் புருஷன். இதன் பகுதிகள் எல்லாக் கரணங்களிலும் உண்டு. பூரணயோகம் ஆன்மாவில் ஆரம்பிக்கவில்லை. மனத்தில் உள்ள சைத்திய புருஷனில் ஆரம்பித்து,

⊙ மேல்நோக்கி அந்த சைத்தியப் புருஷன் முனிவர், ரிஷி, யோகி, தெய்வ மனங்களைத் தாண்டி சத்திய ஜீவியத்தில் ஈஸ்வரனாகிறது.

⊙ அதே சமயம் மனத்தின் சைத்தியப் புருஷனில் ஆரம்பித்து கீழ்நோக்கிச் சென்று உணர்வின் சைத்தியப் புருஷனாகவும், உடலின் சைத்தியப் புருஷனாகும்பொழுது சத்திய ஜீவனாகிறது.



வேதம் ஆரம்பம். அன்று அன்னமயப் புருஷன் உடலில் விழிப்பாக இருந்ததால், இயற்கையோடு மக்கள் இணைந்து வாழ்ந்தனர். தெய்வலோகக் கடவுள்கள் மூலம் சச்சிதானந்தத்தை அடைந்தனர். அகந்தை ஆட்சி செலுத்தாத நேரம். அகந்தையைக் களைந்து அமரத்துவத்தை அவர்கள் ஆத்மா நாடியது. அடுத்தபடி உபநிஷதம் ஆட்சி செலுத்தியது. இது மனத்திற்குரிய காலம். மனத்திற்கு முழுப் பார்வையில்லை. இது மனோமயப் புருஷன் மூலம் செயல்பட்டது. பிரம்மத்தைக் காணமுயன்று சச்சிதானந்தமாகப் பிரம்மத்தைக் கண்டது. சச்சிதானந்தத்தின் மூன்று அம்சங்கள் மனத்திற்குத் தனித்தனியே தெரிந்தன. சத்தை மட்டும் கண்டவர்கள் அதையே சச்சிதானந்தமாகக் கருதினர். அவர்கட்கு உலகம் மாயையாகத் தெரிந்தது. தான் கண்டதை நம்பினர். பிறர் கண்டதை ஏற்கவில்லை. சித்தை மட்டும் கண்டு அதையே சச்சிதானந்தமாகக் கருதிய ரிஷிகள் உலகைப் பிரகிருதியாகக் கண்டனர். ஆனந்தத்தை மட்டும் கண்டு அதையே முழுச் சச்சிதானந்தமாகக் கொண்டவர் உலகை லீலையாகக் கொண்டனர். ஒருவர் மற்றவர் தரிசனத்தை ஏற்கவில்லை.

மனிதனுடைய கருவி மனம். இது பகுதியான கருவி. இதனால் பகுதியை மட்டும் பார்க்க முடியும். அத்துடன் பார்ப்பவரின் நிலைக்குரிய அளவே சத் புருஷன் தென்படும். க்ஷரப் பிரம்மம், அக்ஷரப் பிரம்மம், புருஷன், புருஷோத்தமன், ஆகிய நிலைகளில் சத் புருஷன் ரிஷியின் நிலைக்கேற்ப வெளிப்படுத்தும். உபநிஷத ரிஷிகள் கண்டனவெல்லாம் அக்ஷரப் பிரம்மத்துடன் முடிந்துவிடுகிறது என்கிறார் பகவான். கீதை புருஷோத்தமனைக் கண்டு, அதை வேதமோ, உபநிஷதமோ காண்பிக்க முடியாது என்று திட்டவட்டமாகக் கூறுகிறது. புருஷோத்தமனும் சத் புருஷனில் ஓர் அம்சம்தான். அதையும் மனம் சமாதியில்தான் காண முடியும்.

⊙ மனத்திற்கு முழுப் பார்வையில்லை.

⊙ முழுப் பார்வைக்கே விழிப்பில் தரிசனம் உண்டு.

- ⊙ முழுப் பார்வையில்லாதபொழுது சமாதியில்தான் பிரம்ம தரிசனம் பெற முடியும்.
- ⊙ சமாதி நாம் நம்மை அறியாத நிலை (unconscious).
- ⊙ மனத்தைக் கடந்து சத்திய ஜீவியத்திற்கே முழுப் பார்வை விழிப்பில் உண்டு.

**இறைவன் வரும் தருணம்**

இறைவன் ஆனந்தத்தை நாடி, அதை ஒளிந்து கண்டுபிடிப்பதில் தேட லீலையை சிருஷ்டியாக ஆரம்பித்தான். உலகில் இறைவன் தவிர வேறெதுவுமில்லாததால் ஆண்டவன் ஒளிய இடமில்லை. தன்னுள்ளேதான் ஒளிய வேண்டும். மறைந்தபின் மறைந்ததை மறந்துவிட்டால் பிறகு நினைவு வருவதே சிரமம். நினைவு வருவது ஆனந்தம். நினைவு வந்து மறைவிலிருந்து வெளிவருவது பேரானந்தம். இந்த லீலையை ஆடுபவன் இறைவன். ஆட்டமும் அவனே. அரங்கமும் அவனே. இந்த நினைவுக்குரியது ஆன்மா. ஜீவாத்மாவோ, அதன் பகுதிகளான மனோமயப் புருஷன், பிராணமயப் புருஷன், அன்னமயப் புருஷனோ இல்லை. அவற்றின் பிரநிதியான சைத்தியப் புருஷனே இந்த நினைவுக்குரிய ஆன்மா. இவன் மோட்சமும் தரவல்லவன். சைத்தியப் புருஷன் பக்தியோகத்தில் சித்திப்பது. நாம் மோட்சத்தை நாடினால் மோட்சமும், திருவுருமாற்றத்தை நாடினால் திருவுருமாற்றமும் தரவல்லது சைத்தியப் புருஷன்.

மனித ஆன்மாவை மற்ற கரணங்களிலிருந்து பிரித்து விடுதலையளிப்பது மோட்சம். வாழ்வும், உடலும் மோட்சத்தால் பலன் பெற முடியாது. வாழ்வும், உடலும் பிரகிருதி, பிரகிருதிக்குள்ள ஆத்மா சைத்தியப் புருஷன். பிரகிருதி பெறும் அனுபவச் சாரம் சைத்தியப் புருஷனால் சேர்கிறது.

- ⊙ மனித ஆத்மாவுக்கு விடுதலையளிப்பது மோட்சம்
- ⊙ மனிதனுடைய எல்லாக் கரணங்களுக்கும் ஆன்மீகப் பூரணமளிப்பது திருவுருமாற்றம்.



ஸ்ரீ அரவிந்தர் பிரம்மத்தை பூமாதேவிக்காக வரம் கேட்டார். அவ்வரம் பூமாதேவியின் எல்லா அம்சங்களும் இறைவனாக வேண்டும் என்பது. வரம் கிடைத்துவிட்டது. அதை மனிதன் சரணாகதியால் பெறவேண்டும். பெற வேண்டிய நேரம்,

**இறைவன் வரும் தருணம்.**

பல்லாயிரம் ஆண்டுகளில் முடிவது க்ஷணத்தில் முடியும் நேரம் இறைவன் வரும் தருணம்.

**அதை அறிவிக்க வந்தது ஸ்ரீ அரவிந்த அவதாரம்.**

ஸ்ரீ அரவிந்த அவதாரம் அன்னையின் வேண்டுகோளின்படி நமக்களித்த வேதம்

**Life Divine என்ற நூல்.**

**நூலில் கூற வேண்டியவை :**

1. உலகம் ஆனந்தமயமான இறைவனின் திருவுடல்.
2. மனிதன் உட்பட அனைத்தும் பிரம்மமே, பிரம்மத்தின் சக்தி ரூபம்.
3. முழுமையான பிரம்மம் ஆனந்தமயமான சக்தி வடிவம் தாங்கி ஆன்மீகப் பரிணாமத்தில் பேரானந்தத்தைச் சேருமிடம் உலகம்.
4. இங்கு வலிக்கோ, நோய்க்கோ, துன்பத்திற்கோ வழியில்லை.
5. சத்திய ஜீவியம் இவ்வுலகை சிருஷ்டித்தது.
6. மனிதன் தன்னை மறந்த இறைவன்.
7. அவன் ஆன்மா சிருஷ்டியிலும், பரிணாமத்திலும் வளரும் இடம் பூலோகம்.
8. மனத்தைக் கடந்து சத்திய ஜீவியத்தில் இதை அவன் அறிய வேண்டும்.

இதைக் கூறுமுன் இன்று மனித மனத்தை ஆக்ரமித்துள்ள கருத்துகளுக்கு ஸ்ரீ அரவிந்தர் பதில் அளிக்க வேண்டும். அவை,

1. உலகத்தை பிரம்மா - மனம் - சிருஷ்டித்தார்.

2. கர்மத்தின் பிடியில் உள்ளது உலகம்.

3. துன்பம் தவிர்க்க முடியாதது.

4. ஆன்மா சாட்சியாகவே இருக்கும்.

மேற்சொன்னவை மனிதன் மனத்தை ஆட்கொள்ளக் காரணம் அவன் மனம் பகுக்கும் கருவி. பகுதியைக் காணக் கூடியது. அது அறியாமையின் கருவி. அதனால் மனத்தால் பிரம்மத்தை முழுமையாக அறிய முடியவில்லை. எப்படி உலகம் சிருஷ்டிக்கப்பட்டது என இதுவரை உலகம் அறியவில்லை. ஸ்ரீ அரவிந்தர் தாம் கண்ட முழுப் பிரம்மத்தின் காட்சியால் தானறிந்த சிருஷ்டியின் இரகஸ்யத்தைக் கூற எழுதிய நூல் Life Divine. இறைவன் தன்னுள்ளே தான் மறைந்த வகையை - முரண்பாடே உடன்பாடு என்று நூலில் பகவான் எடுத்துக் கூறுகிறார். முழுப் பார்வைக்குத் தெரிவது, பகுதியான பார்வைக்குத் தெரியாது. பகுதியான பார்வையின் தவறுகளை முழுப் பார்வை செய்யாது.

நூலை இரு புத்தகங்களாகவும், இரண்டாம் புத்தகத்தை இரு பகுதிகளாகவும் பகவான் எழுதினார்.

- முதற் புத்தகம் சச்சிதானந்தம் தன்னை இழந்து பூலோகமாக மாறியதைக் கூறுகிறது.
- தீமை என்பது அறியாமையே என்றும், அறியாமை ஆரம்பத்தில் ஞானம் எனவும், இரண்டாம் புத்தகத்தின் முதற் பகுதி விளக்குகிறது.
- இவற்றைத் தெளிவுபடுத்த உலகம் மனத்தால் சிருஷ்டிக்கப்பட்டதன்று, சத்திய ஜீவியத்தால் சிருஷ்டிக்கபட்ட முழுமை என்பதுடன் இப்பகுதி ஆரம்பிக்கின்றது.
- அஞ்ஞானத்திலிருந்து விடுபட்ட ஞானம் வளர்ந்து ஆன்மீகப் பரிணாமத்தால் ஆன்மீகப் பூரணம் பெறுவது இரண்டாம் புத்தகத்தின் இரண்டாம் பகுதி.



இறைவன் சிருஷ்டியில் மறைந்தது என்பது ஸ்ரீ அரவிந்தம் கூறும் சிருஷ்டியின் இரகஸ்யம். இதன் சில முக்கிய அம்சங்கள்:

- இறைவன் - பிரம்மம் - சுதந்திரமானவன். காலத்தாலோ, கர்மத்தாலோ, சட்டத்தாலோ, எந்த வகையான நிர்ப்பந்தத்தாலோ கட்டுப்படாதவன்.
- அவனது சுதந்திரம் பூரணமான சுதந்திரம். சுதந்திரத்தை இழக்கும் சுதந்திரமும் உடைய சுதந்திரம் பிரம்மத்தின் சுதந்திரம்.
- *சுதந்திரத்தை இழந்து, ஐக்கியத்தை இழந்து, தன்னுள் மறைகிறான்.*
- ஒன்றை இரண்டான எதிரிடையான அம்சங்களாகப் பிரித்து அவை இணைந்து உயர்ந்த பூரணத்தை அடைவது இயற்கையின் பெருநெறி என்கிறார் ஸ்ரீ அரவிந்தர். முதற் படியில் பிரம்மம் சத், அசத் என தன்னை சிருஷ்டியில் வெளிப்படுத்துகிறது.
- தன்னிச்சையாக, தன்னை அளவுபடுத்தி, தன்னுள் தன்னைக் கிரகித்து, அகத்தை புறமாக்கி, சக்தியை வெளிப்படுத்தி, ரூபத்தை சிருஷ்டித்து சத் என்ற இறைவன் ஜடமாக மறைகிறான். இதுவே முதற் புத்தகம்.
- முரண்பாட்டின் வகைகள் பல.

  ஜடமும், ஆன்மாவும்; பிரபஞ்சமும், மனிதனும்; அகந்தையும், சச்சிதானந்தமும்; பாதாளமும், பரமாத்மாவும்; உடலும், உணர்வும்; உணர்வும், மனமும்; மனமும், சத்தியஜீவியமும் என முரண்பாடுகளை ஏற்படுத்தி சிருஷ்டித்து, அவற்றைப் பரிணாமத்தால் உடன்பாடாக்கி ஆன்மீகப் பரிணாமம் பூர்த்தியாவதை நூல் 56 அத்தியாயங்களில் விளக்குகிறது.

வேதம் இயற்கையுடன் உடலால் ஒன்றி வாழ்ந்து, இறைவனை கடவுள்கள் மூலம் அடைந்து ஆன்மாவுக்கு அமரத்வம் (divine universality and supreme infinity) பெற்றது. உபநிஷதம் சர்வம் பிரம்மம், மனிதன் பிரம்மம், பிரம்மம் தவிர உலகில் வேறெதுவுமில்லை என்ற ஞானம் பெற்று பிரம்மத்தை பூலோகத்தின் இருளில் தேடுவது சாத்தியமில்லை என மேல்

லோகத்தில் தேட மோட்சத்தை நாடியது. பக்குவமான ஆத்மா தவத்தால் மோட்சம் பெறவிழையும் நேரத்தில் ஸ்ரீமத் பகவத் கீதை தவம் அக்ஷரப் புருஷனை அடையும், அதற்கு மேலுள்ள புருஷோத்தமனை வேதம், உபநிஷதம் அடைய உதவாது, மனம் தன் நம்பிக்கைகளுடன் சரணடைந்தால் புருஷோத்தமனை அடையலாம் என அழைத்தது. ஸ்ரீ அரவிந்தம் மனித குலத்தில் இறைவனின் யோகம். உடலிலுள்ள வளரும் ஆன்மா, சைத்தியப் புருஷன் வேதம் ஆன்மாவுக்குப் பெற்றவற்றை உடலுக்கு அமரத்துவமாகப் பெற தவம், ஆசனம் போன்றவற்றை விடுத்து கீதையின் சரணாகதியை மனத்திலிருந்து உயர்த்தி உடலில் பூரணம் செய்ய அழைக்கிறது.

**வேதம் ஆன்மாவுக்குப் பெற்றதை ஸ்ரீ அரவிந்தம் உடலுக்கும் பெறும் வழி சரணாகதி.**

❋❋❋❋❋



# Life Divineஇல் சிருஷ்டியின் அமைப்பும், நூலின் சாராம்சமும்

மனிதன் இறைவன். தான் இறைவன் என்பதை மனிதன் மறந்துவிட்டான். மீண்டும் அதை நினைவுபடுத்திக் கொண்டு இறைவனாக வேண்டும் என்பது நூலின் சாராம்சம். **இறைவனே மனிதன். தன்னை மறந்துவிட்ட இறைவன் மீண்டும் தன்னை நினைவுபடுத்திக் கொள்வது பரிணாமம் என்று கூறப்படுகிறது.**

புதியதாக பகவான் ஸ்ரீ அரவிந்தரை அறிந்தவர்கள், பகவான் என்ன சொல்கிறார் என்று கேட்டால், “மனிதனே சிருஷ்டிக்கு முடிவல்ல. மனிதனுக்கு அடுத்த நிலை சத்திய ஜீவன் பிறப்பது. அது நடக்க மனித குலம் சத்திய ஜீவியத்தை எட்ட வேண்டும். குறைந்தபட்சம் 12 யோகிகள் அந்த சித்தி பெற வேண்டும். அது நடந்தால் சத்திய ஜீவியம் புவிக்கு வரும். மனிதன் சத்திய ஜீவனாவான்” என்று விளக்கம் அளிப்பார்கள்.

சிருஷ்டி எப்படி ஏற்பட்டது என்பதை இந்தியாவிலோ, மற்ற நாடுகளிலோ, இதுவரை எவரும் அறியவில்லை. ஸ்ரீ அரவிந்தர் Life Divineஇல் அதற்குரிய விளக்கங்களை எழுதியுள்ளார் என்றால் பொருந்தும். நூலை ஒருவாறு சுருக்கமாகக் கூறவேண்டும் என்று கேட்டால், கீழ்க்கண்டவைகள் தக்க பதிலாக அமையும் :-

1. பரம்பொருளை சச்சிதானந்தம் என்கிறோம்.
2. சச்சிதானந்தம் தன்னை உலகமாக மாற்றிக் கொண்டது.
3. இதை சிருஷ்டி என்கிறோம்.
4. சிருஷ்டிக்கு அடுத்த நிலை பரிணாமம்.
5. பிரம்மம் சச்சிதானந்தமாகி, உலகமாயிற்று.
6. உலகம் பரிணாமத்தால் மீண்டும் சச்சிதானந்தமாகி பிரம்மமாக வேண்டும்.

7. இது இறைவனின் லீலை. ஆனந்தத்தைத் தேடி இறைவன் மேற்கொண்ட லீலை இது.

8. ஞானமான இறைவன் அஞ்ஞானமான இருளாக மாறி, அதனுள் மறைந்து, மறைந்ததை மறந்து, மீண்டும் நினைவு வந்து, அஞ்ஞானத்திலிருந்து மீள்வதில் ஆனந்தம் காண்கிறான்.

9. ஒளிவது சிருஷ்டி.

10. வெளிவருவது பரிணாமம்.

இது தத்துவம். வாழ்க்கைக்கு முக்கியமானது ஏதாவது உண்டா எனக் கேட்பவருண்டு. கர்மத்திலிருந்து விடுபட்டு தோல்வி, துன்பமற்ற வாழ்க்கையை ஸ்ரீ அரவிந்தம் தரும் எனலாம். Life Divine தத்துவமான நூல், இங்கு யோகப் பயிற்சியோ, வாழ்க்கை நெறியோ விளக்கப்படவில்லை. அவற்றை மற்ற நூல்களில் காணலாம்.

Life Divine-க்கு விசேஷமாகக் கூறப்பட வேண்டியது ஒன்றுண்டு. உலகம் இறைவனை அறியும், வாழ்வை அறியும், இறைவன் எப்படி வாழ்வை சிருஷ்டித்தான் என்பதை அறியாது. Life Divine இறைவன் தன்னை தன்னுள் மறைத்து வாழ்வானான் என்ற விளக்கம் அளிக்கிறது. அதுவே நூலின் விசேஷம்.

**இறைவன் தன்னுள் தானே மறைந்த மார்க்கம் சிருஷ்டி. அதுவே நூலின் முதற் பகுதி.**

முதற் புத்தகத்தின் அமைப்பு

1. சச்சிதானந்தத்தின் விளக்கம்.
   - சத் என்பது சக்தி.
   - சித் என்பது ஜீவனுள்ள சக்தி.
   - ஆனந்தம் சத், சித்திற்கு இயல்பானது.
   - சச்சிதானந்தம் என்ற அகத்தின் புறம் சத்திய ஜீவியம்.



2. சிருஷ்டிக்கர்த்தா

   உலகை சிருஷ்டித்தது சத்திய ஜீவியம், மனம் இல்லை.

3. மனம் பிறந்த வரலாறு

   சத்திய ஜீவியம் காலத்திலும், காலத்தைக் கடந்த நிலையுமாகப் பிரிந்தபொழுது மனம் இடையே பிறந்தது.

4. வாழ்வு

   மனத்தின் ஞானம் உறுதியின்மேல் செயல்பட்டு சக்தி பிறந்து சக்திமயமான லோகமாக எழுந்தது வாழ்வு.

5. ஜடம்

   வாழ்வு உற்பத்தியாக ஞானம் செயல்பட்டபொழுது ஓரளவு தன்னை இழந்தது. தொடர்ந்து செயல்பட்டால், முழுவதும் இழக்கப்படும். அந்நிலை ஜடம்.

இவ்விதமாக சச்சிதானந்தம் உலகமாயிற்று. இறைவன் ஒளிந்ததை பகவான் அஞ்ஞானத்தை ரசிக்க இறைவன் ஒளிந்து கொண்டான் என்கிறார். ஒளிந்து கொண்ட இறைவன் அஞ்ஞானமானான். அஞ்ஞானத்துள் ஞானம் மறைந்துள்ளது. இரண்டாம் புத்தகத்தில் ஞானம் அஞ்ஞானத்திலிருந்து வெளிவந்ததை முதற் பகுதியிலும், வெளிவந்த ஞானம் பரிணாமத்தால் வளர்ந்து ஆன்மாவாகி, சச்சிதானந்தத்தை அடைந்து, தன் பிறப்பிடமான பிரம்மத்தை அடைந்து சிருஷ்டி, பரிணாமம் என்ற யாத்திரை பூர்த்தியாகிறது.

நூலில் இரு புத்தகங்களுண்டு. இரண்டாம் புத்தகம் இரு பகுதிகளானது. முதற்புத்தகம் சிருஷ்டி. இரண்டாம் புத்தகம் பரிணாமம். இரண்டாம் புத்தகத்தில் முதற் பகுதி அஞ்ஞானம், ஞானமாக மாறுவது. இரண்டாம் பகுதி ஞானம் பரிணாமத்தால் வளர்ந்து ஆன்மாவாகி, பிரம்மமாவது.

புத்தகத்தைப் பல பகுதிகளாகப் பிரித்துக் கூறலாம்.

1. முதற் புத்தகம் 9, 10, 11, 12 அத்தியாயங்கள் சச்சிதானந்தம்.

| | |
|---|---|
| 14, 15, 16 அத்தியாயங்கள் சத்திய ஜீவியம். | 18 - மனம் |
| 19, 20, 21,22 - வாழ்வு. | 1ம் அத்தியாயம் - முரண்பாடு |
| 23 சைத்திய புருஷன் | 2, 3 அத்தியாயம் - ஜடம், ஆன்மா |
| 24, 25 ஜடம் | 4 பரம்பொருள் |
| 26, 27, 28 பரிணாமம் | 5, 6 மனிதன், பிரபஞ்சம் |
| 13 - மாயை | 7 அகந்தை |
| 17 தெய்வீக ஆன்மா | 8 வேதாந்த ஞானம் |

2. இரண்டாம் புத்தகம் - முதற் பகுதி

முதல் அத்தியாயம் சிருஷ்டி

இரண்டாம், மூன்றாம் அத்தியாயங்கள் பூரணமான பிரம்மம்

4ம் அத்தியாயம் தீமை என்பதில்லை

5, 6 அத்தியாயங்கள் - மாயை

7,8,9,10 ஞானம்

11,12,13 அஞ்ஞானம்

14 தீமை

3. இரண்டாம் புத்தகம் - இரண்டாம் பகுதி.

1ம் அத்தியாயம் - பிரம்மம்

2ம் அத்தியாயம் - வாழ்வு

3, 4 அத்தியாயங்கள் - இறைவன்

5ம் அத்தியாயம் அஞ்ஞானம் ஞானமாவது.

6,7,8 புனர்ஜன்மம்

9,10 மனிதன் பிறந்து ஆன்மாவானது.

11 திருவுருமாற்றம்.

12 சத்யாரோகணம்

13 சத்திய ஜீவன்

14 தெய்வீக வாழ்வு



இந்த 56 அத்தியாயங்களையும் சுருக்கமாகப் பின்வருமாறு கூறலாம்.

ஒன்பதாம் அத்தியாயத்தில் சச்சிதானந்தம் உலகமாயிற்று என்று கூறுமுன் ஸ்ரீ அரவிந்தர் சிருஷ்டியின் முக்கிய அம்சமான முரண்பாடு உடன்பாட்டை 8 அத்தியாயங்களில் விளக்குகிறார்.

- ⊙ பிரம்மம் ஜடமாக மாறப் பயன்படுத்திய உபாயங்களில் ஒன்று முரண்பாடு.
- ⊙ ஒன்றை எதிரான இரண்டாகப் பிரித்து அவை ஒன்றோடொன்று மோதி உடன்பாட்டைக் காணுவது சிருஷ்டியின் இரகஸ்யம்.
- ⊙ முதல் அத்தியாயம் மனிதனில் உள்ள முரண்பாடுகளைக் குறிக்கிறது.
- ⊙ *உடலுக்கும் உயிருக்கும் உள்ள முரண்பாடு, உயிருக்கும் மனத்திற்கும் உள்ள முரண்பாடுகள் விளக்கப்படுகின்றன.*
- ⊙ *உயிருக்கும் மனத்திற்கும் உள்ள முரண்பாடு உடன்பாடானதால் விஞ்ஞானம் உற்பத்தியாயிற்று என்று கூறுகிறார்.*
- ⊙ *மனத்திற்கும் சத்திய ஜீவியத்திற்கும் உள்ள முரண்பாடு உடன்பாடானால் சத்திய ஜீவன் பிறப்பான் என்பது முதல் அத்தியாயம்.*

இரண்டாம் அத்தியாயம் ஜடமும் ஆன்மாவும் ஒன்றே என்பது. மூன்றாம் அத்தியாயம் ஆன்மாவும், ஜடமும் ஒன்றே என்பதாகும். நான்காம் அத்தியாயத்தில், பரம்பொருள் உலகமாயிற்று என்கிறார். 5ஆம் அத்தியாயத்தில்,

- ⊙ பரமாத்மாவும், பாதாளமும் மனிதன் காணும் முரண்பாடு.
- ⊙ மனிதனே அவற்றை இணைக்க முடியும்.
- ⊙ அங்கு உடன்பாடு காண்பது அவன் கடமை என்கிறார்.
- ⊙ 5ஆம் அத்தியாயம் பிரபஞ்சம், மனிதன் என்ற முரண்பாட்டைக் கூறுகிறது.
- ⊙ *பிரபஞ்சம் தன்னை மனிதனில் பூர்த்தி செய்யும்.*
- ⊙ *மனிதன் தன்னைப் பிரபஞ்சத்தில் பூர்த்தி செய்கிறான் என்பவை 6ஆம் அத்தியாயத்தின் கருத்து.*

7ஆம் அத்தியாயம் சிருஷ்டிக்கேயுரிய முரண்பாடான அகந்தை, சச்சிதானந்தத்தைக் குறிக்கிறது. 8ஆம் அத்தியாயம் வேதாந்த ஞானம்.

- ⊙ பரமாத்மாவுக்கும், பாதாளத்திற்கும் இடையேயுள்ள மனிதன் புலனை இழந்தால் ஞானம் பெற்று இவற்றை இணைத்து பரமனை அறிவான். அதுவே பிரம்மம், அதுவே உலகம் என்பது வேதாந்தம்.
- ⊙ இதைக் கண்ட வேதாந்தம் பாதாளத்தை மனிதனால் எட்ட முடியாது என்பதால் பரமாத்மாவை நாடி மோட்சம் பெற முனைந்தது.

9,10,11,12 அத்தியாயங்கள் சச்சிதானந்தத்தைக் கூறுகின்றன. 13ஆம் அத்தியாயம் மாயை. மாயை என்பது இல்லாதது இல்லை, சிருஷ்டியின் கருவி என்பது பகவான் விளக்கம். 14,15,16 அத்தியாயங்கள் சத்திய ஜீவியம் எப்படி சிருஷ்டித்தது, இறைவன், ஜீவாத்மா, மனிதன் என்பதை எப்படி சத்தியஜீவியத்தின் நிலைகள் எனக் கூறுகின்றன.

17ஆம் அத்தியாயம் தெய்வீக ஆன்மா . தெய்வீக வாழ்வு உண்டென்றால் அதற்குள்ள ஆன்மா தெய்வீக ஆன்மாவாகும் (Divine Soul).

- ⊙ தெய்வீக ஆன்மா சச்சிதானந்தத்துள் உறைகிறது.
- ⊙ இது பிரம்மத்துடன் தொடர்புள்ளது.
- ⊙ இது சத்திய ஜீவிய வாழ்வின் மூன்று அம்சங்களையுடையது.
- ⊙ அஞ்ஞானத்தின் கறைபடாதது.
- ⊙ பரமாத்மாவுடனும், ஜீவாத்மாவுடனும் தொடர்புள்ளது.
- ⊙ Human soul மனித ஆன்மா அஞ்ஞானத்துள் உள்ளது.
- ⊙ மனித ஆன்மா அகந்தையால் கவரப்பட்டுள்ளது.
- ⊙ மனத்தினின்றும், அகந்தையினின்றும் விடுபட்டு மனித ஆன்மா தெய்வீக ஆன்மாவாக வேண்டும்.



மனித வாழ்வு, தெய்வீக வாழ்வாக மாற மனித ஆன்மா தெய்வீக ஆன்மாவாக வேண்டும் என்பதால் இந்த அத்தியாயத்திற்கு முக்கியத்துவம் உண்டு. 18ஆம் அத்தியாயம் மனமும் சத்திய ஜீவியமும் என்ற தலைப்புடையது. சிருஷ்டியில் மனம், வாழ்வு, ஜடத்தில் அஞ்ஞானம் என்பதில்லை. சத்திய ஜீவியத்தில் பிறந்த மனம், தன் ஆதியை மறந்து, தன்னை தன் செயலிலிழந்து, மனத்தோடு ஐக்கியமாகி, வாழ்வோடு ஐக்கியமாகி, முடிவாக உடலோடும் ஐக்கியமாவதால் அஞ்ஞானத்தை உற்பத்தி செய்தது என்பதைக் கூறுவது இந்த அத்தியாயம்.

19,20,21 என்பவை வாழ்வை விவரிப்பவை. அவற்றினுள்ள முக்கியக் கருத்துகள்,

- ⊙ வாழ்வை மனம் உற்பத்தி செய்கிறது.
- ⊙ பிரபஞ்சம் அழிந்தாலும் அழியாதது வாழ்வு.
- ⊙ உடல் உணர்வை மனத்திற்குக் கொண்டு போய் எண்ணமாக மாற்றி, எண்ணத்தின் உதவியால் மனத்தை ஆட்சி செய்ய வைப்பது வாழ்வு. உடல் மனத்தின் ஆதிக்கத்துள் இப்படி வருகிறது.
- ⊙ மரணம் வாழ்வை நித்தியமாக்குகிறது.
- ⊙ மரணம், ஆசை, இயலாமை ஆகியவை முயன்று பாடுபட்டு போரிட்டு சைத்திய புருஷனை மனத்தில் உற்பத்தி செய்கின்றன.
- ⊙ ஜீவியமும், சக்தியும் பிரிந்துள்ளவற்றை வாழ்வு பரிணாமத்தால் இணைக்க பிரபஞ்சவாழ்வாக வேண்டும்.

23ஆம் அத்தியாயம் சைத்திய புருஷன். இது ஸ்ரீ அரவிந்தருக்கே உரிய கருத்து. சைத்திய புருஷன் என்பது வளரும் ஆன்மா. ஆன்மாவுக்கு ஆதி, அந்தம், மாற்றம், வளர்ச்சியில்லை என்பது மரபு. காலத்தைக் கடந்த நிலையினுள்ள ஆன்மா அது. காலத்துள் ஆன்மா இருப்பது உபநிஷதம் அறிந்தாலும், அவர்கள் அதை தங்கள் கணக்கில் சேர்த்துக் கொள்ளவில்லை.

ஸ்ரீ அரவிந்தம் வாழ்வுக்குரிய ஆன்மாவைக் கணக்கில் சேர்த்துக் கொண்டதுடன் அதுவே (Being of the Becoming) பரிணாம வளர்ச்சி பெறும் ஆன்மா என்றார். இதன் சிறப்பு,

- உலகம், வாழ்வு, சிருஷ்டி, பிரம்மம் ஆகிய அனைத்தும் முழுமையானவை என்பது இக்கொள்கை.
- வாழ்வு இயற்கையால் வளர்கிறது.
- வாழ்வின் வளர்ச்சியின் சாராம்சத்தை சேகரிப்பது சைத்திய புருஷன்.
- ஸ்ரீ அரவிந்தரின் யோகமான ஆன்மீகப் பரிணாம யோகத்திற்குரிய ஆன்மா சைத்திய புருஷன். இது வளர்ந்து

**ஈஸ்வரனாகவும்,**
**சத்திய ஜீவனாகவும் மாறுகிறது.**

- இதன் இருப்பிடம் அடிமனக்குகை.

24,25ஆம் அத்தியாயங்கள் ஜடத்தைப் பற்றியவை. ஜடம் உற்பத்தியான வகையை பல வகையாக விளக்கலாம். ஆன்மாவை மனம் புலனால் காண்பதால் ஜடம் உற்பத்தியாகிறது என்று இங்குக் கூறுகிறார். 26,27 அத்தியாயங்கள் பரிணாமத்தைப் பற்றியவை. முக்கிய கருத்துகள்,

- சத், சித், ஆனந்தம், சத்திய ஜீவியம் சிருஷ்டியில் ஜடம், வாழ்வு, சைத்திய புருஷன், மனம் என மாறுகின்றன.
- வேதம் 7 லோகங்களைக் கூறி அவற்றை 8 அல்லது 12 ஆகவும் கூறலாம் என்கிறது. நாம் 8 எனக் கொள்வோம்.
- 8 தத்துவங்கள் பொதிந்திருந்தால் ஒரு சமயம் ஒரே தத்துவம் மட்டும் செயல்படுவதால், மற்ற 7 தத்துவங்கள் பரிணாமத்தால் வெளிவரவேண்டும்.
- 8 லோகங்களும் ஒரே வகையான பொருளாலானதால் பரிணாமம் சாத்தியமாகிறது.

28ஆம் அத்தியாயம் சத்திய ஜீவியம், மனம், தெய்வீக மனத்தின் மாயை என்ற தலைப்புடையது. 1914 முதல் 1920 வரை ஆர்யா பத்திரிகையில் ஸ்ரீ அரவிந்தர் எழுதியபொழுது இவ்வத்தியாயம் எழுதப்படவில்லை. 1940இல் Life Divine புத்தகமாக வெளிவந்தபொழுது எழுதப்பட்ட 3 அத்தியாயங்களில் இதுவும் ஒன்று. இங்கு ரிஷி மனம், முனிவர் மனம், யோகி மனம்,



தெய்வ மனம் விவரிக்கப்படுகின்றன. இதுவரை சத்திய ஜீவன் பிறப்பான் என்ற பகவான் இந்த அத்தியாயத்தில்,

**சத்திய ஜீவன் பிறப்பது நிச்சயம்.**
**இது தவிர்க்க முடியாதது,**

என்று கூறுகிறார். சத்திய ஜீவியம் ஜடத்துள்ளிருப்பதால், உள்ளே மறைந்துள்ளது வெளிவர வேண்டியது அவசியம் என்கிறார்.

**இரண்டாம் புத்தகம் - முதற் பகுதி**

உலகில் தீமையை இறைவன் படைக்கவில்லை. அஞ்ஞானமே தீமை எனக் கருதப்படுகிறது. அஞ்ஞானத்தால் மாறுபட்டு செயல்பட ஆரம்பித்து குதர்க்கமான சிக்கலாகிய செயல் நாம் தீமை என அறிவது. ஆனந்தத்திற்காக சிருஷ்டி ஏற்பட்டது. இங்கு வலி, துன்பம், தீமை என்பவையில்லை. அகந்தை ஆண்டவனின்று பிரிந்து நிற்பதால், பிரிந்துள்ள அகந்தை மீண்டும் ஆண்டவனுடன் சேரும்பொழுது, ஏற்படும் உணர்வு வலி, துன்பம், அகந்தையுள்ளிருந்தாலும், அகந்தையை வலியுறுத்தாவிட்டால் துன்பமில்லை என்பது இரண்டாம் புத்தகத்தில் 14ஆம் அத்தியாயம் கூறுவது.

13ஆம் அத்தியாயத்தில் தீமையெனக் கருதப்படும் அஞ்ஞானம் உற்பத்தியானதை விவரிக்கின்றார். அஞ்ஞானம் மேல் மனத்தில் பூரணம் பெறுகிறது. அஞ்ஞானம் சிருஷ்டியின் சிகரம், மகுடம் என்கிறார். இதற்கு முன் அத்தியாயமான 12ஆம் அத்தியாயம் சத்திய ஜீவியத்தினின்று மனம் பிரிந்ததே அஞ்ஞானத்தின் ஆரம்பம் என்று கூறுகிறது. 11ஆம் அத்தியாயம் நால்வகை ஞானத்தைக் கூறுகிறது. அவை,

1. பரமாத்மாவை அறியும் ஐக்கியம்.
2. யோகி அறியும் ஞானம்.
3. அடிமனம் அறியும் பரந்த உலக ஞானம்.
4. மேல் மனம் அறியும் அகந்தையின் ஞானம்.

10ஆம் அத்தியாயம் ஏழுவகை அஞ்ஞானத்தையும், அவை உறையும் லோகங்களையும், அவை ஏற்பட்ட வகைகளையும்

*கூறுகிறது. 8ஆம், 9ஆம் அத்தியாயங்கள் நினைவைப் பற்றியவை. நினைவு காலத்திற்குரியது. காலத்தைக் கடந்தும், காலத்துள் கடந்த நிலையை அறிந்துமே பிரம்மத்தை அறிய முடியும்.*

**அறியாமையின் ஜீவியம் ஆத்மானுபவம்**
**பெறுவதால் அகந்தை உருவாகிறது**

*என்பதும், அகந்தை செயல்பட ஞாபகம் அவசியம் என்பதும் இந்த அத்தியாயம். 7ஆம் அத்தியாயம் ஞானமும் அஞ்ஞானமும் எனப்படும். வேதம் இவற்றை சித்தி, அசித்தி எனவும், உபநிஷதம் வித்யா, அவித்யா எனவும் கூறியபொழுது ஞானமும், அஞ்ஞானமும் இவ்விளக்கங்களால் பிரிக்கப்பட்டன. பிரிக்கப்பட்ட நிலைகள் முழுமையைக் கூற முடியாது.*

**அஞ்ஞானம் ஞானத்திலிருந்து உற்பத்தியாயிற்று.**
**திருவுருமாற்றத்தால் மீண்டும் ஞானமாக வேண்டும்**

*என்பவை இந்த அத்தியாயத்திற்குரிய கருத்துகள். 5ஆம், 6ஆம் அத்தியாயங்கள் மாயையைப் பற்றியவை. மாயை என்பதில்லை. உண்மையில் மாயை என்பது அஞ்ஞானமே எனக் கூறுகிறார். இவ்விரு அத்தியாயங்களும் ஆர்யாவுக்கு எழுதப்படவில்லை. 1940இல் எழுதப்பட்டன. மீதியுள்ள 4 அத்தியாயங்களில் 2ஆம் 3ஆம் அத்தியாயங்கள் பிரம்மம் முழுமையானது எனவும்,*

- *பிரம்மம் என்றும், எப்பொழுதும், எங்கும் முழுமையானது, பார்வை நம்முடையது. பிரிவினை பார்வையிலுள்ளது. பிரம்மத்திலில்லை.*
- *ஆத்மாவான அகந்தை விழிப்புப் பெற்றால் தன்னைப் புருஷனாகவும், உலகத்து ஆத்மாவாகவும் அறியும்.*
- *புறத்திலுள்ள உலகை அகத்துள் கண்டால், அகத்துள் காணும் ஆத்மாவின் மையம் பரமாத்மா எனக் கூறுகிறார்.*

*4ஆம் அத்தியாயத்தில் தீமை இறைவனால் படைக்கப் படவில்லை என்பதைக் கூறுகிறார். முதல் அத்தியாயம் பிரபஞ்ச சிருஷ்டி, பிரம்ம சிருஷ்டி என்பது. இந்த அத்தியாயம் விஞ்ஞானிக்கும், பகுத்தறிவுவாதிக்கும் பதில் அளிப்பதுடன் உலகை மனம் சிருஷ்டிக்கவில்லை, சிருஷ்டித்தது சத்திய ஜீவியம் என்று*



*கூறுகிறார். சத்திய ஜீவியம் சச்சிதானந்தத்தின் பகுதி. அது பிரம்மத்தின் பகுதி என்பதால், உலகை சிருஷ்டித்தது பிரம்மம் என்று முடிக்கிறார்.*

இரண்டாம் புத்தகம் - இரண்டாம் பகுதி

*இந்தப் பகுதி பிரம்மம், வாழ்வு, ஞானம், மறுபிறப்பு, மனிதன் சத்திய ஜீவன், திருவுருமாற்றம், தெய்வீக வாழ்வு ஆகியவற்றைக் கூறுகிறது.*

1. *ஜீவாத்மாவோ, பரமாத்மாவோ முடிவில்லை. இரண்டையும் உட்கொண்ட பிரம்மமே சத்தியம் என்பது முதல் அத்தியாயம்.*
2. *வாழ்வைப் பற்றிய தத்துவங்கள் நான்கு. ஸ்ரீ அரவிந்தருடைய தத்துவம் பரமாத்மாவை வாழ்விலிருந்து விலக்க மறுப்பது.*
3. *பரமாத்மாவையும், பாதாளத்தையும் மனிதன் தன்னில் இணைத்து, இணைத்ததை மேல் எடுத்துச் செல்வது 3, 4 அத்தியாயங்களாகும்.*
4. *5ஆம் அத்தியாயம் 7 வகை அஞ்ஞானம் 7 வகை ஞானமாக மாறுவது.*
5. *6,7,8 அத்தியாயங்கள் மறுபிறப்பைப் பற்றியவை.*
6. *9ஆம் அத்தியாயம் மனிதன் பிறந்த வரலாறு. 10ஆம் அத்தியாயம் ஆன்மீக மனிதன் பிறந்தது.*
7. *11ஆம் அத்தியாயம் 3 திருவுருமாற்றங்கள். 12ஆம் அத்தியாயம் சத்தியாரோகணம், 13 சத்திய ஜீவன். கடைசி அத்தியாயம் தெய்வீக வாழ்வு.*

**பிரபஞ்சத்தையும், பரமாத்மாவையும் தன்னுட் கொண்ட மனிதன் முழு மனிதன். இவனே திருவுருமாற்றத்திற்குரியவன். சோவியத் சர்க்கார், கிருஸ்துவ மடங்கள், சன்னியாச ஆசிரமம் முடியவில்லை என்று கைவிட்ட திருவுருமாற்றத்தை சரணாகதியால் பூர்த்தி செய்பவன் ஆன்மவிழிப்புள்ள சத்திய ஜீவன்.**

❋❋❋❋❋

# Ch.I - Human Aspiration

## இதயத்தின் எழுச்சி

Page. 1

பிறந்த மனிதனின் மலர்ந்த இதயம்.

கடல் நீரை விலக்கும் கப்பலில்லை.

நாத்திகம்போல் ஆஸ்திகத்தை வளர்த்தவரில்லை.

ஆழ்ந்த இலட்சியமே உயர்ந்ததுமாகும்.

யுகம் பிறந்தபொழுது எழுந்தது யுகதர்மம்.

திகட்டும் உலகம் திருப்தி தாராது.

புறவழிப்போக்கு அகத்தின் ஆரம்பத்தில் முடியும்.

ஆரம்பமே அனந்தனுக்கு முடிவு.

Page. 2

இலட்சியத்திற்கு உடன்பாடு அனுபவத்திற்கு முரண்பாடு.

ஆழ்ந்த அனுபவங்கள் அதிகப் பிரசங்கிகளாகும்.

மனிதனுக்குப் புரட்சி; உலகத்திற்கு வளர்ச்சி.

உலகின் இருட்டு பிரபஞ்ச ஜோதியாகும்.

வலிக்கும் உடலும் வதையும் உணர்வும் சாஸ்வதமான சாந்தியடையும்.

அழியும் உடலுக்கு அழியா அமரத்துவம் தேவை.

இறைவன் இறங்கி இங்கு வருவான்.

கண்ணுக்கு எட்டியதே கடலுக்குக் கரை.

எய்தியதை மறுக்கும் எண்ணம் எடுபடாது.

முரண்பாடே உடன்பாடு.

இறைவனின் இதய கமலம் மடையனுக்கு மண்டை ஓடு.



Page. 3

சுமுகமே சிருஷ்டியின் சூட்சுமம்.

மறைவின் மகிமை மனத்திற்குப் புதுமை.

பிணக்கு விலங்கு மனத்திற்கு விதி, விலக்கன்று.

பிணக்கை மனம் பிணமென விலக்கும்.

குறையான மனம் குறையை குணமெனக் கொள்ளும்.

இயற்கைக்கு சுமுகம் இன்றியமையாதது.

உடல் தன் சுமுகத்தை சுகம் என அறியும்.

சிக்கல் பெருஞ் சிக்கலானால், தீர்வுக்குத் தீவிரம் அதி தீவிரமாகும்.

உடலின் தாமதம் உணர்வின் வேகத்தை ஏற்கும்.

உடல் மனத்தை ஏற்றால் உள்ளொளி நிலைக்கும்.

உடலின் ஜோதி அமர ஜோதி.

மனமும் உணர்வும் இணைந்தது விஞ்ஞானம்.

விலங்கு பெறும் ஜோதி வீடு பேற்றைக் கடந்த சித்தி.

முரண்பாடு முத்தினால் முத்தியைக் கடந்த சித்தியுண்டு.

இயல்பான பகை இயற்கைக்கு இசைவானது.

Page. 4

வேதாந்தம் பரிணாமத்தைப் பற்றிப் பேசுகிறது.

முதற்படியை ஏற்பவர் மூன்றாம் கட்டத்தையும் ஏற்கலாம்.

மனிதன் தெய்வத்தின் சோதனைக் கூடம்.

Page. 5

*பூலோகம் சுவர்க்கத்தை அடைய முடியும்.*

*பகுத்தறிவுக்குப் பளிச்செனப் புரியும்.*

*தொட்ட குறை தொடரும், விட்டகுறை விடாது.*

*முடிவுவரைப் போக முடியாது என்பது மூட நம்பிக்கை.*

*லோகமாதாவை லௌகீகமாக நினைக்கக்கூடாது.*

*உயர்ந்த இலட்சியத்தை உதறித் தள்ளுவது உசிதமன்று.*

*மலரும் மனம் மனித குலத்தின் மகத்துவம்.*

❋❋❋❋❋



# தெய்வீக வாழ்வு

***நூலின் கடைசி அத்தியாயம். 55 பக்க நீளமுள்ளது. நூலில் அதிகபட்ச நீளமுள்ள அத்தியாயம்.*** Life Divine***இன் சுருக்கம் என்று கூறலாம். கருத்துகள் கனமானவை. ஓரிரு பக்கத்திற்கு மேல் தொடர்ந்து படித்து மனதிலிருத்த ஆன்மிக உறுதி தேவை. தத்துவமான சிக்கலோ, விளங்காத வாதமோ ஒன்று கூட இல்லாத அத்தியாயம், அவ்வகையில் கடினமில்லை, எளிமையான நூலின் பகுதி எனவும் கூறலாம். ஸ்ரீ அரவிந்தத்தின் ஒரு முக்கியக் கொள்கை பகுதியே முழுமையாகும். அக்கருத்திற்கு எடுத்துக்காட்டாக அமைகிறது இந்த அத்தியாயம். இதை ஒரு தனிப் புத்தகமாக வெளியிட்டால், இது நூலின் ஒரு பகுதி எனக் கூறாவிட்டால், பகுதி என்பதே தெரியாது. ஒரு முழு நூலின் அம்சமுடையது. ஆங்கிலத்தில் இவ்வத்தியாயத்தின் தலைப்பு*** Divine Life ***என்பது நூலின் தலைப்பைத் தலைகீழே மாற்றியது போன்றுள்ளது.***

***பகவான் ஸ்ரீ அரவிந்தருடைய பூரண யோகம்*** Yoga of the body ***உடலுக்குரிய யோகம். அதைப் பூர்த்தி செய்ய அவர் பயன்படுத்துவது*** Supermind ***சத்திய ஜீவியம். தந்திரயோகம் மனிதனை*** Soul in the body ***உடலின் ஆன்மா எனக் கருதி யோகத்தை உடலில் ஆரம்பிக்கிறது. பூரண யோகம் மனிதனை*** Soul in the Mind ***மனத்தின் ஆன்மா எனக் கருதுவதால், யோகத்தை மனத்தில் ஆரம்பித்து நெடுநாள் பலனை உடனே பெறுகிறோம், என்று ஸ்ரீ அரவிந்தர் வாழ்வனைத்தும் யோகம் எனவும் கூறினார். அவருடைய தலையாய நூலை அவர்*** Divine Body, Divine Spirit, Divine Mind ***தெய்வீக உடல், தெய்வ ஆன்மா, தெய்வ மனம் என தலைப்பிடாமல்*** Life Divine ***தெய்வீக வாழ்வு எனக் கூறியது குறிப்பிடத்தக்கது. இந்த அத்தியாயத்தை சுருக்கமாகக் கூறலாம்.***

நாம் யார், எது உண்மை என அறிந்து அது சிந்திப்பதே நம் இலட்சியம் என அத்தியாயத்தை ஆரம்பிக்க வேண்டும். நாம் உடலோ, மனமோ இல்லை. நாம் என்பது ஆத்மா. அது ஜீவனின் பகுதியான ஆத்மாயில்லை. ஜீவனை முழுமையாக்கும் ஆத்மா. முழுமைக்கு பகவான் அளிக்கும் விளக்கம் முக்கியமானது. தன்னை அறிவதும், தன் சக்தியை எல்லாம் முழுமையாகப் பெற்றதும், பிரபஞ்சம் முழுவதும் பரவியுள்ளதும், ஆனந்தத்தை அளவு கடந்து அனுபவிப்பதும், சூட்சுமமான முறைகள் கண்ணுக்குத் தெரிவதும் முழுமை என்கிறார். இதனுள் சச்சிதானந்தத்தின் எல்லாப் பகுதிகளும் உள்ளன. சச்சிதானந்தமே உலகமாக மாறியதாலும், சச்சிதானந்தமே மனிதன் என்பதாலும், சத், சித், ஆனந்தத்தின் எல்லாப் பகுதிகளும் இருந்தால் முழுமை பெறும் என்பது கருத்து. மனிதன் என்பது மனமன்று, சத்திய ஜீவியம். மனத்திற்கு இம்முழுமையில்லை. சத்திய ஜீவியம் இம்முழுமையையே முகமெனக் கொண்ட பகுதி.

பரிணாமம் பூர்த்தியானால் பரமாத்மாவின் யோகம் பூர்த்தியாகும்.

ஜீவாத்மா பரமாத்மாவாவது பரந்த நோக்கம்.

அதன் முன் பிரபஞ்சத்தின் ஆத்மாவாகவுமாகும்.

நிஷ்டையோ, நிர்வாணமோ இதைச் சாதிக்காது.

ஆத்ம விழிப்பே ஆதர்சப் புருஷனுக்குரியது.

ஆத்மா உலகில் விழித்தால் உடல் உலகம் முழுவதும் பரவும்.

முழுமையை முழுமையாக்குபவன் முதல்வன், மூலவன்.

புறம் பூர்த்தி செய்யாது.

அகம் ஆண்டவனுக்குரியது.

புறச் செயலின் திறமை அகத்தூய்மையின் திண்மை.

அகம் புறமானால், இகம் பரமாகும்.



மனம் மையமன்று.

அகமே மையம். ஆன்மாவே அகம்.

ஆன்மாவின் ஆனந்தம் அனைத்தின் ஆனந்தம்.

திருவுரு மாற்றம் திட்டவட்டமான முறை.

அருளைப் பேரருளாக்கும் சரணாகதி அர்த்தமுள்ள கருவி.

சர்வமும் மாறி சச்சிதானந்தம் உலகமாயிற்று.

திருவுள்ளம் பூர்த்தியாவது திருவுருமாற்றத்தால்.

சரணாகதி சாதாரண மனிதனை சர்வேஸ்வரனாக்கும்.

இப்படித்தானிருக்கவேண்டும் என்பதில்லை, எப்படியுமிருக்கலாம்.

இகத்தில் பரமிருந்தால் எப்படியுமிருக்கலாம்.

எளிமை மனத்திற்கு, வாழ்வுக்கன்று.

அஞ்ஞானத்தின் ரஸம் ஆண்டவன் தேடுவது.

அஞ்ஞானம் ஆண்டவன் தேடி வந்த ஞானம்.

❋❋❋❋❋

**Book II**

**Chapter - II**

# பிரம்மம், புருஷா, ஈஸ்வரா, மாயை, பிரகிருதி, சக்தி

மேற்சொன்னது இவ்வத்தியாயத்தின் தலைப்பு. சத்தியம், உண்மை, பிரம்மம் (Reality) என்பது ஒன்றே, முழுமையானது. இதைப் பகுதியான மனம் அறிய முடியாது. நம்முள் உள்ள ஆத்மா, அதன் பின்னுள்ள பிரம்மம் அறியும் என்று சுமார் 40 பக்கங்களில் 10 அல்லது 12 வகையான விளக்கங்கள் மூலமாகக் கூறுகிறார். இந்த அத்தியாயத்தின் முக்கியக் கருத்துகளை நீண்ட சுருக்கமாகவும், அதன் முன் மையக் கருத்தைச் சிறு சுருக்கமாகவும் காண்போம்.

## சுருக்கம்

1. பிரம்மம் மாயை; புருஷப் பிரகிருதி; ஈஸ்வர சக்தி; என்பவை 6 தனிப்பட்ட அனுபவங்களோ, மூன்று வகையானவையோ இல்லை. அவை அனைத்தும் ஒரே பிரம்மத்தின் மூன்று அம்சங்கள் ஆறாகப் பிரிந்து தெரிகின்றன. தகப்பனார், கணவன், தம்பி, அண்ணன், முதலாளி, வீட்டுக்காரர் என்று ஒருவரை ஆறு பேர் அழைத்தால் அவர் ஆறு வேறு நபர்களில்லை. ஒருவரே. அம்சம் ஆறு, அறுபதாகவுமிருக்கலாம், ஆறு கோடியாகவும் இருக்கலாம்.

2. Transcendent, Superconscient, Inconscient, Supracosmic, Cosmic, Immutable Self, Nihil, Asat; Sat, Chit, Ananda, Nirvana, Mind, Life, Matter பிரம்மம், பரமாத்மா, ஜடம், பிரபஞ்சத்தைக் கடந்தது, பிரபஞ்சம், அக்ஷரப் பிரம்மம், சூன்யம், அசத், சத், சித், ஆனந்தம், நிர்வாணம், மனம், வாழ்வு, உடல் என்று நாம் பலவகைகளாகக் கூறுவது பல அல்ல. ஒன்றே. ஒருவர்க்குத் தம் வீட்டில் தலைவராகவும், கணவனாகவும், சமையல் செய்யவும், விருந்தினரை வரவேற்கவும், வீடு பெருக்கவும் உரிமையுண்டு. அவர் வீடு என்பதால் எந்த வேலையைச் செய்யவும் அவரால் முடியும், உரிமையுண்டு. அதனால் அவர் பல நபராகமாட்டார். **மனிதன் ஒருவனே. செயல்கள் பல.**



3. நம் மரபில் பிரம்மத்தை எதிரெதிரானவைகளாக 10 அல்லது 12 வகைகளாகக் கூறுகிறார்கள். அவை

| | | |
|---|---|---|
| பிரம்மம் | x | சிருஷ்டி |
| பரமாத்மா | x | ஜீவாத்மா |
| சகுணம் | x | நிர்குணம் |
| அகண்டம் | x | கண்டம் |
| ரூபம் | x | அரூபம் |
| காலம் | x | கடந்தது |
| இடம் | x | அனந்தம் |
| பிரபஞ்சம் | x | மனிதன் |
| மௌனம் | x | சப்தம் |
| புருஷன் | x | பிரகிருதி |

மேற்சொன்னவைபோல் இவைகளும் பகுதிகளில்லை, பிரிக்கப்படாத, பிரிக்க முடியாத, ஐக்கியமான ஒன்றே. மனிதப்பார்வைக்குத் தெரிவது பிரிந்த நிலை. உண்மையில் பிரிவினை என்பது எங்கும் எப்பொழுதும் இல்லை.

மேற்கூறியவை தத்துவமாகப் புரிவது ஞானம். வாழ்க்கைக்கோ, யோக சித்தி பெறவோ பயன்படாது. அறிவு விளக்கம் பெறும். பக்தியால் இதுவே புரிந்தால் அது உள்ளத்திற்கு விளங்கும். அது நம்பிக்கையால் புரிவது. பக்தி, நம்பிக்கையால் புரிந்தால் இரண்டு வகைப் பலன் உண்டு.

1. யோகத்தில் காலடி எடுத்து வைக்கலாம்.

2. வாழ்வில் தோல்வி என்பது அழிந்து அதிர்ஷ்டம் பிறக்கும்.

இதே கருத்துகளை நீண்ட, சுருக்கமாக தத்துவங்களைச் சில இடங்களில் வாழ்க்கை உதாரணத்தின் மூலம் கீழே காணலாம்.

## நீண்ட சுருக்கம் :

சொர்க்கத்தைப் பற்றிப் பேசினால் அது நமக்குத் தெரிவதில்லை. அது மேல் உலகில் உள்ளது. அங்குப் போனால் அனுபவிக்கலாம் என்று கேள்விப்படுகிறோம். ஸ்ரீ அரவிந்தர் பூலோகமே சுவர்க்கம் என்கிறார். நாம் பூலோகத்தைச் சுவர்க்கமாக்கலாம் என்றார். இன்று பூலோகம் சுவர்க்கமாக மாறிவிட்டது. கண் திறந்து பார்த்தால் போதும் என்பது ஸ்ரீ அரவிந்தம். பூலோகத்தைச் சுவர்க்கமாக்கலாம் என ஆரம்பத்தில் கூறிய ஸ்ரீ அரவிந்தர் தம் தவ முயற்சியால் 1956இல் சத்திய ஜீவியத்தை உலகுக்குக் கொண்டு வந்துவிட்டதால் சுவர்க்கம் உற்பத்தியாகிவிட்டது. கண்ணை மூடியவர்க்குத் தெரியாது. கண் திறந்து பார்ப்பவருக்குத் தெரியும். கண் திறக்கும் வகைகள் பல.

1. யோகம் கண்ணைத் திறக்கும்.
2. சமர்ப்பணமான வாழ்வு, வாழ்வளவில் கண் திறக்க உதவும்.
3. தத்துவம் புரிந்தால் அறிவுக் கண் திறக்கும். அறிவுடன் பக்தியும் நம்பிக்கையும் சேர்ந்தால் அற்புதம், அதிர்ஷ்டமாக எழும்.

இம்மூன்றாம் முறையை விளக்கும் அத்தியாயம் இது (Bk II, Ch. II). இதன் மேற்கூறிய சுருக்கத்தை சற்று நீளமாகக் கூறுவதே நோக்கம். ஓர் உதாரணம் கூறலாம். Pride and Prejudice என்ற கதையில் £ 50 வருமானமுள்ள எலிஸபெத் என்ற கதாநாயகியை £ 10,000 வருமானமுள்ள டார்சி திருமணம் செய்து கொள்ள



கட்டுக்கடங்காத காதலுடன் தவிக்கிறான். அவளைக் கேட்கிறான். திட்டி திருப்பி அனுப்பிவிடுகிறாள். மனம் மாறி பிறகு அவனை ஏற்கிறாள். நாம் எலிஸபெத் நிலையில் உள்ளோம். மனம் மாறுமா? கீழ்க்கண்ட விளக்கம் மனம் மாற உதவும்.

நாம் கண்டது உலகம். நம்மை நாம் உடலாகவும், மனிதனாகவும் அறிகிறோம். நாம் ஆத்மா, ஜீவாத்மா எனப்படும். அதுவே பரமாத்மா, அதாவது நாமே பிரபஞ்சம் முழுவதும் பரவிய பரமாத்மாவாகும். இதை நம் மனம் அறியாது. நம்முள் உள்ள ஆத்மா அறியும். அதன் பின்னுள்ள பரமாத்மா நன்கு அறியும். நாம் மனத்தால் செயல்படுவதால் நம்மை மனம் என நினைப்பதால், மனம் வெளியில் காண்பது வாழ்வு. அது பயங்கரமானது, ஆபத்தானது, மோசம் நிறைந்தது. உள்ளதையே இங்குக் காப்பாற்ற முடியாது. வெளியில் போனால் உள்ளதும் போகும். இருக்கும்வரை எப்படியோ காலத்தைக் கழித்துவிட்டு, போகிற கதி நல்ல கதியாக இருந்தால் போதும் என மனம் கூறுகிறது. இந்த மனம் தவம் செய்தால் பிரம்மத்தைப் பகுதியாகக் காண்கிறது. பகுத்துப், பகுத்துப் பார்க்கிறது. அதனால் நல்லது வாழ்விலில்லை, மோட்சத்திலுள்ளது என மோட்சத்தை நாடிற்று. ஸ்ரீ அரவிந்தம் கூறுவது வேறு,

- மனிதனாகிய நீ மனமில்லை.
- மனத்தின் பின் ஆத்மாவுண்டு.
- மனத்திற்குத் தெரியாதது ஆத்மாவுக்குத் தெரியும்.
- மனத்தைவிட்டு, ஆத்மாவுக்குப் போய் வாழ்வைக் கண்டால், வாழ்வு அனைத்தும் பிரம்மமாகத் தெரியும். நீ காணும் ஆபத்து இருக்காது.
- ஆத்மாவின் பிரதிநிதியான சைத்தியப் புருஷனிலிருந்து கண்டால் ஸ்ரீ அரவிந்தம் கூறும் பூலோகச் சுவர்க்கம் தெரியும்.
- *மனிதன் ஆத்மாவின் கண் திறந்து பார்ப்பானா என அழைக்கிறது.*

கேட்ட மனிதன் தயங்குகிறான். "அன்று தொழில் செய்ய தடையை ஆங்கில சர்க்கார் விதித்தது. படிக்க ஜாதிக் கட்டுப்பாடு தடையாக இருந்தது. இன்று படிப்பு இலவசம். மேற்படிப்பு அனைவரும் படிக்க வசதியுண்டு. எவரும் தொழில் செய்ய சர்க்கார் ஊக்குவிக்கிறது. இந்தச் சூழ்நிலையில் படித்துச் சம்பாதிக்க முடியவில்லை என்பது சரியா?" என மேலும் ஸ்ரீ அரவிந்தம் கேட்கிறது. அத்தனையும் கேட்டுக் கொண்டு சமூகம் தடை, ஜாதகம் சரியில்லை என்பவருண்டு. சமூகத்தைக் கடந்து சர்க்கார் உதவுகிறது. பெற மறுப்பானேன்? ஜாதகம், கர்மத்தைக் களைய சத்திய ஜீவிய சக்தி வந்துள்ளது. ஏற்கக் கூடாதா என்பது கேள்வி.

- ⊙ இருப்பதை விட முடியாதவர், சமூகத்தைக் கடந்து சம்பிரதாயத்தைக் கடந்து வரமாட்டார்.
- ⊙ குணத்தை, மனத்தை மாற்ற மறுப்பவர், கர்மத்தைக் கடந்து வரமாட்டார்.
- ⊙ மரபில் கூறியவற்றை பகவான் மாற்றிக் கூறியதைப் புரிந்து கொண்டால், - இந்த அத்தியாயம் புரிந்தால் - முடியாதவை முடியும்.

எந்த அளவில் மாற மனிதன் முன் வந்தாலும் அந்த அளவில் பலன் உண்டு.

விளக்க முடியாத பிரம்மம் பகுதி. சகுணமாகவோ, நிர்குணமாகவோ கண்ட பிரம்மமும் பகுதி. 14 வகைகளாகப் பிரம்மத்தை நம் முன்னோர் கண்டுள்ளனர். அத்தனையும் பகுதியான பார்வை. பகுதியான பிரம்ம ஞானம் முழுமையான வாழ்வைக் காண உதவாது. இந்த அத்தியாயத்தில் 10 அல்லது 12 வகைகளான பகுதிகளான விளக்கங்களை எடுத்து, பகவான் முழுமை எனக் காட்டுகிறார். அவ்விளக்கம் பிரம்மத்தை முழுமை என அறிய உதவும். இது அறிவானாலும் வாழ்வை முழுமையாகக் காணத் தடையாக இருக்காது. பிரம்மத்தையே பகுதியாக அறியும்



தத்துவ ஞானம் வாழ்வை முழுமையாகக் காண உதவாது, தடை செய்யும். தடையை யோகத்திலும் வாழ்விலும் களைவது நோக்கம்.

எல்லா விளக்கங்களுக்கும் பொதுவான கருத்து ஒன்றே. தத்துவம் பிரம்மத்தைப் பற்றியது என்பதால் 12 வகையான விளக்கங்களை, 12 முறை திரும்பத் திரும்ப பகவான் எழுதியுள்ளார். பொதுவான தத்துவம்:-

"பிரம்மம் சிருஷ்டித்தது. சிருஷ்டி பிரம்மத்தை நம்பியுள்ளது. நம்பிக்கை தொடர்பு. பிரம்மமும், சிருஷ்டியும் பிரியவில்லை. அவற்றிற்குள்ள தொடர்பு மனத்திற்குத் தெரியவில்லை. தெரியாததால் தொடர்பில்லை என்றது. பிரம்மமே சிருஷ்டி. அவை என்றுமே பிரியவில்லை. மேலெழுந்த பார்வைக்குப் பிரிந்து தோன்றினாலும் அடிப்படையில் ஒன்றே. தொடர்பு தெரிகிறது. முழுப் பார்வைக்கு சிருஷ்டி அனைத்தும் பிரம்மம் எனத் தெரியும்."

## பரமாத்மா x ஜீவாத்மா One and the Many, Purusha, Prakriti

ஜீவாத்மாவுக்குத் தனியாக நிற்கக் காலில்லை. அது மனிதனிலிருந்து விடுபட்டு பரமாத்மாவில் கரைய வேண்டும். அதுவே மோட்சம். புருஷன் சாட்சி, பிரகிருதி இயற்கை. இயற்கை எது செய்தாலும் புருஷன் சாட்சியாகப் பார்த்துக் கொண்டிருக்கும். புருஷனுக்குப் பிரகிருதி கட்டுப்படாது என்பது இதுவரை நாமறிந்தது. பரமாத்மா என்பது சத் (ஜீவன்) அது ஜீவியமாகி அதனின்று சக்தி (Force) வெளிப்படுகிறது. மனம் சக்தியைப் பல பகுதிகளாக்குகிறது. ஒரு பகுதியை ஜீவாத்மா என்கிறோம். மனம் பகுக்கும்பொழுது சக்தி துண்டாகப் பிரிகிறது. ஜீவனோ, ஜீவியமோ பகுக்கப்படுவதில்லை. சக்திக்கு ஜீவன் உண்டு, ஜீவனின்றி உலகில் எதுவுமில்லை. சக்தியிலுள்ள

ஜீவன் தன் ஆதியான ஜீவனோடுள்ள தொடர்பை எப்பொழுதும் இழப்பதில்லை. ஜீவன் தான் மட்டும் பெற்ற ஐக்கியத்தைப் பல ஆயிரம் ஜீவாத்மாக்களை உற்பத்தி செய்தபின் அவற்றுடன் ஐக்கியமான நிலை ஆழத்திலுள்ளது. பார்வை முதிர்ந்தால் மேல் நிலையிலும் சக்தியே ஜீவியம், ஜீவன் எனத் தெரியும். ஜீவாத்மா பரமாத்மாவினின்று எப்பொழுதுமே பிரியவில்லை. ஐக்கியம் எப்பொழுதும் உண்டு.

மாநிலச் சர்க்காரும், மத்தியச் சர்க்காரும் கருத்தில் வேறுபடுவதுண்டு, ஆனால் இரண்டும் சர்க்காரே. அதேபோல் சர்க்காரில் நிதி இலாகாவும், கல்வி இலாக்காவும் கடுமையாக வாதம் செய்வதுண்டு. எதிரியாகப் பேசுவதுண்டு. ஆனால் இரண்டும் ஒரே சர்க்காரின் இரு பிரிவுகள். குடும்பத்தில் அண்ணன் தம்பி பல ஆண்டுகளாகப் பேசாமலிருப்பதுண்டு. ஆனால் நேரம் வரும்பொழுது சேர்ந்து கொள்வார்கள். அண்ணன், தம்பி என்பது ஒரே குடும்பத்தின் இரு அம்சங்கள். கை வேலை செய்யும் கால் சும்மாயிருக்கும். கால் நடக்கும்பொழுது கை சும்மாயிருக்கும். கை வேறு, கால் வேறில்லை. இரண்டும் ஒரே உடலின் இரு பகுதிகள்.

இந்த ஒற்றுமையை முக்கியமாகக் காலத்தில் எடுத்துக் கூறுகிறார். காலம் உலகத்திற்குரியது. காலத்தைக் கடந்தது பிரம்மம். ஆனால் பிரம்மம் இல்லாமல் காலமில்லை. காலத்தின் அடிப்படை காலத்தைக் கடந்த பிரம்மம் என்பதை இவ்வத்தியாயத்தின் முடிவில் விளக்கமாக 3 பக்கங்களில் எழுதுகிறார். அவையிரண்டும் சந்திக்குமிடத்தில் உள்ளது ஆன்மாயில்லை, சைத்தியப் புருஷன். ஆன்மா சாட்சியானது, மாற்றமில்லாதது. சைத்தியப் புருஷன் வளரும் ஆன்மா. ஆன்மாவுக்கும் (புருஷன்) காலம் செயல்படும் இயற்கைக்கும் (பிரகிருதி) தொடர்பானது வளரும் ஆன்மா என்ற சைத்தியப் புருஷன்.



நாம் மேல் மனத்தில் செயல்படுகிறோம். அங்கு ஆன்மா இல்லை. உள் மனத்தில் மனோமயப் புருஷன் உண்டு. இதற்கு வளர்ச்சியில்லை. அடிமனத்தில் சைத்தியப் புருஷன் உண்டு. இதற்கு வளர்ச்சியுண்டு. இதுவே வாழ்வுக்கும் ஆன்மாவுக்கும் தொடர்பாக வாழ்வில் உள்ளது.

பிரம்மம் என்பது அடிப்படை. சிருஷ்டி, ஜீவாத்மா, சகுணம், கண்டம், ரூபம், காலம், இடம், மனிதன், சலனம், பிரகிருதி என்பவை சிருஷ்டிக்குரியவை. இதுநாள்வரை பகுதி எனக் கேள்விப்பட்டுள்ளோம். மேற்சொன்னபடி இப்பகுதிகளின் அடியில் வளரும் ஆன்மா, சைத்தியப் புருஷன் உண்டு. அதனால் பிரம்மம் முழுமை, வாழ்வு முழுமை, பகுதியென நாம் அறிந்த அனைத்தும் முழுமையே. பகுதி என்பது தோற்றம். இந்த ஞானத்தைத் தத்துவமாக மட்டும் பெறாமல், பக்தி நம்பிக்கையுடன் வாழ்வில் பெற்றால் வாழ்வு தன் முழுமையைத் தோல்வியற்ற வாழ்வாக, அதிர்ஷ்டமான வாழ்வாக வெளிப்படுத்தும். வாழ்வு ஆரம்பம், யோகம் முடிவு.

வாழ்வை அதிர்ஷ்டமாக ஆரம்பித்து, எந்த அளவு முன்னேற விரும்புகிறார்களோ அந்த அளவுக்கு முன்னேற இம்முழுமையை விளக்கும் 20 அல்லது 30 பகுதிகள் Life Divineல் உள்ளவை தத்துவார்த்தமாகப் பயன்படும். அதுபோல் அதிகமாகப் பயன்படும் அத்தியாயம் இது.

❋❋❋❋❋

# உலகம் முதல் பிரம்மம் வரை

நாம் கண்ணால் காண்கிறோம். கண் என்பது புலன். இது புலன்களில் ஒன்று. ஐம்புலன்களும் அகந்தையால் ஏற்படுத்தப்பட்டவை. புலன்கள் அகந்தையின் கருவிகள். தவசி கண்மூடி தியானிக்கும்பொழுது புலன்கள் அவிகின்றன. புலன்கள் குவிந்து, அவிழ்ந்தால் மனம் விழித்துக் கொள்ளும். புலன்கள் அவிந்த பின் மனம் தானே புலனின்றிச் செயல்படும்.

கண் மூடியிருக்கும்பொழுது பார்க்கும்.

காதை மூடிக் கொண்டாலும் கேட்கும்.

தொடாவிட்டாலும் தொடு உணர்ச்சியிருக்கும்.

முகராவிட்டாலும் வாசனை தெரியும்.

சுவைக்காவிட்டாலும் ருசி தெரியும்.

விழிப்படைந்த மனம் நிஷ்டையில் மேலே போகும். மனத்தினுள் ஆத்மா - மனோமயப் புருஷன் - உண்டு. தூய்மையான மனத்தின் ஆத்மா மனத்திலிருந்து விடுதலை பெறும். விடுதலை பெற்று உயரும். உயரும் ஆத்மா பிரம்மத்தை அறிய அவாவுடையது. மனம் பகுதியானது. பகுக்க ஏற்பட்ட கருவி. பிரம்மம் முழுமையானது. முழுமையான பிரம்மத்தைப் பகுதியான மனம் காண முடியாது. பிரம்மத்தின் ஓர் அம்சம், அல்லது ஓர் உருவம், ஒரு தோற்றம் மட்டும் தெரியும். அப்படி மனம் பிரம்மத்தைக் காண முயன்றால் பிரம்மம் சச்சிதானந்தமாகத் தெரியும்.

- *பகுதியான மனத்தின் பார்வைக்கு பிரம்மத்தின் ஓர் அம்சமாக சச்சிதானந்தம் தெரியும்.*
- பிரம்மம் சச்சிதானந்தமில்லை.
- சச்சிதானந்தம் பிரம்மத்தின் ஒரு தோற்றம்.
- சத்து, சித்து, ஆனந்தம் என்ற மூன்று அம்சங்களுள்ள சச்சிதானந்தத்தின் ஒரு பகுதியே மனத்தின் பார்வைக்குத் தெரியும்.
- அப்படிக் காணும் ரிஷிகள் சத்தைக் கண்டால், அதை சச்சிதானந்தத்தின் ஓர் அம்சம் எனக் கொள்ளாமல் சத் என்பதையே முழு சச்சிதானந்தம் என்பர். அதேபோல் சித்தை மட்டும் காண்பவர்களும், ஆனந்தத்தை மட்டும் காண்பவர்களும் அவற்றையே முழு சச்சிதானந்தம் என்பர். மனம் இப்படி மட்டும் செயல்படும் தன்மையுடையது.



- தவத்தின் உயர்வுக்கேற்ப சத் தன்னை வெளிப்படுத்தும்.
- சத் என்பதை Self என்று ஆங்கிலத்தில் குறிக்கிறார்.
- இந்த Selfக்கு 4 நிலைகள் உள்ளன.
- முதல் நிலை கடந்த நிலை Transcendent Self.
- அடுத்தது பரமாத்மா எனும் Superconscient Self.
- அதற்கும் அடுத்தது பிரபஞ்சத்தின் ஆத்மா எனும் Cosmic Self.
- கடைசியானது அக்ஷரப் புருஷன் எனும் Immutable Self.

கடந்ததை Self எனவும் பிரபஞ்சத்திற்குரியதை Soul எனவும் குறிக்கிறார். தவத்தின் நிலைக்கேற்ப சத் புருஷன் தன்னைத் தவசிக்கு வெளிப்படுத்துகிறான். மனிதனிலுள்ள பிரம்மத்தை self எனக் குறிக்கிறார். மனிதனுடைய selfலிருந்து கடந்த நிலையிலுள்ள Self வரை எல்லாவற்றையும் தழுவும் சொல் **spirit**, ஆன்மா எனப்படும்.

முழுமையான சச்சிதானந்தத்தின் அம்சங்கள் பகுதியான மனத்திற்குப் பிரிந்து எதிரெதிரானவையாகத் தெரிவதற்கும் நல்ல உதாரணம்,

ஈஸ்வரன் - இது சச்சிதானந்தத்தின் முழுமையான மூன்று அம்சங்களில் - பிரம்மம், புருஷன், ஈஸ்வரன் - ஒன்று. சத்திய ஜீவியத்திலிருந்து பார்த்தால் ஈஸ்வரன் முழுமையாகத் தெரிவான். இதற்கு நிர்குணம், சகுணம் இரண்டும் உண்டு. தெய்வீக மனத்திலிருந்து பார்த்தால் ஒரு புறம் நிர்குணமாகவும், அடுத்த பக்கம் சகுணமாகவும் தோன்றும்.

❋❋❋❋❋

# பணம், அதிகாரம், வாழ்வு, பிரம்மம்

- மனிதன் கெட்டதிலிருந்து நல்லதிற்கு மாற முயல்வதால், கடவுளை நல்லவர் எனக் கருத வேண்டி, கடவுளை நல்லவராக மட்டும் வரிக்கிறான்.
- கடவுளால் கெட்டவராக இருக்க முடியாது என நினைக்கிறான்.
- அவருக்கு அத்திறமையை மறுக்கும் உரிமை மனிதனுக்கில்லை.
- நல்லதும், கெட்டதும் சேர்ந்ததே கடவுள் என நினைக்க அவன் மனம் இடம் தரவில்லை.
- கடவுள்தான் அரிச்சந்திரனையும், நல்லதங்கையையும், திரௌபதியையும், கண்ணகியையும் கொடுமைப்படுத்தியவர் என்பதை மனம் மறந்துவிடுகிறது.
- கடவுளால் கெட்டவராக இருக்க முடியாது என்று கொள்வதற்குப் பதிலாக, கெட்டது கடவுளுக்கில்லை எனக் கூறும் உரிமை நமக்கில்லை, ***கெட்டது கடவுளிடம் நல்லதாகும் என்று அறியும் ஞானம் நமக்கு வேண்டும்.*** அது பிரம்ம ஞானம்.
- ஒரு நிமிஷமும் நம்மால் கெட்டதை விலக்கி உயிர் வாழ முடியாது. நடைமுறையில் ஆசைப்பட்டும், பயந்தும், தெரியாமலும் ஏற்பதை ஆசையின்றி, தைரியமாய், முழு அறிவுடன் ஏற்பது பிரம்மத்தை வாழ்வில் அறிவதாகும். அதற்கு அதிர்ஷ்டம் எனப் பெயர். நாம் காணும் அதிர்ஷ்டம் என்பது ஒரு (vibration) வகை. இது எல்லா வகைகளிலும் அதிர்ஷ்டமாவது, அன்னையின் அதிர்ஷ்டம் எனப்படும்.
- பணம் எந்த வகையாகச் சம்பாதிக்கப்பட்டிருந்தாலும், மனிதன் அதன் பெருமைக்குக் கட்டுப்படுகிறான். எப்படி வந்தாலும் ஏற்கிறான். புருஷன் எவ்வளவு துரோகம் செய்தாலும் மனைவி அவனை ஏற்கிறாள். இப்பொழுது புருஷனுக்கும் அந்நிலை வருகிறது. தவறு செய்வதாலோ, துரோகம் செய்வதாலோ, மகனை, மனைவியை, பெற்றோரை, மனிதன் விட முடியாது என்பது தெரியும். அது பிரம்ம நிர்ப்பந்தம். நாம் கைவிட்டாலும் சந்தர்ப்பம் வலியுறுத்தும்.



கட்டாயத்திற்காக ஏற்பதை, தெளிவால் ஏற்பது பிரம்ம ஞானம். அது அன்னையின் அதிர்ஷ்டம்.

- நாமே விலகக் கூடாது. விலகுவதை இழுத்துப் பிடிக்கக் கூடாது.
- மனம் தெளிவு பெற வேண்டும். குறையேயில்லை. இருந்தால் அது நம் மனத்திற்குரியது என மனக் குறையைக் களைந்தால், தவறு விலகும், துரோகம் விலகும், திரும்பி வந்தால் மனம் தூய்மையானால், மாறியிருக்கும், விலகிய தவறும், துரோகமும் அழியும்.
- உன் மனம் திருவுருமாறினால் உலகம் திருவுருமாறும்.
- உன் மனம் மாறிய பின் மாறாத துரோகம் உன்னைப் பாதிக்காது.
- ஆசையின்றி சம்பாதித்தால் அளவு கடந்து சம்பாதிக்கலாம். அது சேவைக்கு.
- பயமின்றி அதிகாரத்தை ஏற்றால் அதிகாரம் அன்பாக மாறும்.

❋❋❋❋❋

## அகந்தை என்ற ஜீவாத்மா, பிரபஞ்ச ஆத்மா, பரமாத்மா

**நான், குடும்பம், ஊர்**

- ⊙ இவை மூன்றும் ஒன்றே. ஒன்றின் மூன்று பகுதிகளாகும். எதை நாம் நாமாகக் கருதினாலும் கருதலாம். ஆனால் எதுவும் பிரிந்து போகாது.
- ⊙ பொதுவாக மனிதன் சுயநலம், 'நான்' என்றே வாழ்வான். அவன் கோணத்திலே குடும்பத்தையும், ஊரையும் கவனிப்பான். குடும்பமும், ஊரும் தனக்குச் சேவை செய்ய வேண்டுமென முழு மூச்சுடன் வேலை செய்வான்.
- ⊙ நேரம் வரும்பொழுது குடும்பத்திற்குப் பணிவான். பெரிய நேரம் வந்தால் ஊரை மீற முடியாது. ஊர் என்பது ஜாதியாகவுமிருக்கும்.
- ⊙ ஊர் நிர்ப்பந்தப்படுத்தாத நேரம், குடும்பம் கண்டுகொள்ளாத நேரம், தன் சுயநலத்தின் சுயரூபமாக ஊர்வலம் வருவான்.
- ⊙ அகந்தை என்பது ஜீவாத்மா. ஜீவாத்மா என்பது பிரபஞ்சத்தின் ஆத்மா. அதுவே பரமாத்மா என்பது ஸ்ரீ அரவிந்தம்.
- ⊙ மனிதனுக்கு ஜீவாத்மா என்று ஒன்றிருப்பதே தெரியாது. மனிதனாகவோ, அகந்தையாகவே வாழ்பவன் அகந்தையை இழந்து ஜீவாத்மாவாகிறான்.
- ⊙ ஜீவாத்மா என்று தன்னையறிந்து ஜீவன் முக்தனானாலும், அவனுக்குப் பிரபஞ்சம் நினைவு வருவதில்லை. பிரபஞ்சம் வழியாகவே, தான் அகங்காரமானதையும் நினைப்பதில்லை. தன் ஆத்மாவுக்கு மோட்சம் தேடி பரமாத்மாவை அடைகிறான்.
- ⊙ சிருஷ்டியில் பரமாத்மா, பிரபஞ்சமாகி, அகந்தையான ஜீவாத்மாவாகிறது.
- ⊙ தன்னைக் குடும்பத்திலிழந்தவன் நல்லவன்.
- ⊙ தன்னையும் தன் குடும்பத்தையும் ஊரில் இணைத்தவன் ஊருக்குப் பெரியவன்.



- ⊙ அவன் ஊரை ஆள்வான். நல்லவனாக இருப்பான். ஊர் அவன் ஆள்வதை நாடும், விரும்பும்.
- ⊙ அகந்தை அழிந்தால் ஜீவாத்மாவாகிறது. ஜீவாத்மா தன்னைப் பிரபஞ்சத்தின் ஆத்மாவாகப் புறத்திலும், அகத்திலும் கண்டு, அதன் மையத்தில் பரமாத்மாவைக் காண்கிறது.
- ⊙ மனிதன் சுயநலமின்றி குடும்பத்திற்கு உழைப்பதும், தானும், தன் குடும்பமும் ஊருக்குச் சேவை செய்யும்பொழுது அதைவிட தனக்குத் தான் செய்யும் பெரிய சேவையில்லை என்பது தெரிகிறது.
- ⊙ அகந்தை - ஜீவாத்மா - பரமாத்மா - *ஜீவாத்மாவினுள் பரமாத்மா* என்ற கட்டங்கள் பரிணாமத்திற்குரியவை.
- ⊙ அவை சுயநலமற்றவை.
- ⊙ ஜீவாத்மா தான் மட்டும் மோட்சம் பெறுவது அதன் கடைசி சுயநலம் என்கிறார் பகவான்.
- ⊙ ஈஸ்வரன் எல்லாக் காரியங்களும் அவனிஷ்டப்படி நடக்க வேண்டும் என்பதால் அவனே பெரிய சுயநலமி. அதனால் சுயநலத்தை நாம் கண்டிக்க முடியாது என்கிறார்.

❋❋❋❋❋

# ஹிருதய சமுத்திரம்

- ⊙ அகந்தையற்ற பார்வைக்கு உலகம் சமுத்திரமான சக்தியாகக் காட்சியளிக்கும்.
- ⊙ நமக்கு சமுத்திரம் பொருட்டல்ல. சமுத்திரத்திற்கு நாம் முக்கியம்.
- ⊙ நாம் நம் வாழ்வை சமுத்திரத்தின் கையில் ஒப்படைத்தால் நம் வாழ்வுக்கு சமுத்திரத்தின் முழுத் திறன் வரும்.
- ⊙ நெடுநாள் கழித்துப் பிறந்த குழந்தைக்குக் குடும்பத்தில் அனைவரும் முழு ஆதரவு தருவதுபோல், நம் வாழ்வு இறைவனால் நடத்தப்படும்..
- ⊙ ஓரளவுக்கு நாம் நம் வாழ்வை குடும்பத்திடம் ஒப்படைக்கிறோம்.
- ⊙ ஒரு குழந்தை குடும்பமில்லாமல் வளராது, உயிரோடிருக்காது.
- ⊙ குடும்பத்தில் எவரும் கவனிக்காமல் ஒரு குழந்தை வளர்ந்தால் அது எப்படியிருக்கும்?
- ⊙ நாம் சமூகத்தைப் பல விஷயங்களிலும் நம்பியிருக்கிறோம்.
- ⊙ நாம் பயன்படுத்தும் எல்லாப் பொருள்களும் சமூகம் நமக்காக உற்பத்தி செய்வதாகும்.
- ⊙ சமூகத்தில் மேல் மட்டத்திலுள்ளவர் செல்வாக்கு நமக்குத் தெரிகிறது.
- ⊙ சமூகத்தின் உச்சியிலுள்ள அனைவரும் நம்மை முன்னுக்குக் கொண்டு வரப் பாடுபட்டால் நாம் எவ்வளவு உயர முடியுமோ, அந்த அளவுக்கு சமூகத்தை நாம் மனதால் ஏற்றுக் கொண்டால் முன்னேறலாம் என நமக்குத் தெரியாது.
- ⊙ நாம் மூச்சு விடும் காற்று பூமாதேவியின் ஆடை.
- ⊙ நாம் பூமாதேவியின் மீது நடந்து செல்வதை அவள் நம் அரவணைப்பாக ஏற்கிறாள்.



- ⊙ நாம் அதுபோல் பூமாதேவியையோ, சமூகத்தையோ மனதால் அறிவதில்லை.
- ⊙ எந்த அளவுக்கு நாம் பூமியின் பகுதி, எந்த அளவு சமூகத்தின் பகுதியென மனதால் அறிந்து, உணர்ந்து, ஏற்றுக்கொண்டால், மனிதனுக்கு அளவுகடந்த முன்னேற்றம் உண்டு.
- ⊙ இன்று உலகிலுள்ள அவ்வளவு கல்வியும் நமக்குப் பாடமாக, செய்தியாகக் கிடைக்கிறது.
- ⊙ உலகம் நம்மை ஏற்ற அளவுக்கு நாம் உலகை ஏற்றால் நாம் பெறும் முன்னேற்றம் அளவு கடந்தது. உலகின் உச்சியிலிருப்போம்.
- ⊙ அரசியல் நமக்கு அளித்துள்ள உரிமை, வியாபாரம் நமக்கு வழங்கும் பொருள்கள், சமூகம் கொடுக்கும் வசதிகள் என்ன என்று அறிந்து அதே அளவுக்கு நாம் மலர்ந்து, மனம் உவந்து சமூகத்தை மனதால் ஏற்றால், நாம் இன்றுள்ள நிலையில் இருக்கமாட்டோம்.

❁❁❁❁❁

# ஆத்மாவின் இரு முனைகள்

- மனிதனுடைய ஆயுள் முடிய அவனுடைய சம்மதம் தேவை. மனிதனாகிய ஜீவாத்மா முடிவு செய்யாமல் உயிர் உடலை விட்டுப் பிரியாது என்கிறார் ஸ்ரீ அரவிந்தர்.
- மேலும் பரமாத்மாவின் உத்தரவும் தேவை.
- பரமாத்மாவும், ஜீவாத்மாவும் சம்மதிக்காமல் உயிர் உடலை விட்டுப் போகாது.
- எந்த சிறு காரியத்திற்கும் பிரபஞ்ச சட்டம் இதுவே.
- ஜீவாத்மாவும், பரமாத்மாவும் ஆத்மாவின் இருமுனைகள் என்பதால் ஒன்று சம்மதப்பட்டால் இரண்டும் சம்மதப்படுவதாக அர்த்தம்.
- உலகிலும், பிரபஞ்சத்திலும் உயிருடையது ஆத்மா மட்டுமே.
- மற்ற அனைத்தும் ஆத்மாவுடன் தொடர்பு கொள்வதால் உயிர் பெறுகின்றன.
- ஆத்மாவின் ஒரு முனை பிரம்மம். அடுத்த முனை வாழ்வு.
- ஆத்மா அறிவாலும், அறிவின் திறனாலும் செயல்படுகிறது.
- பிரம்மமே முதல், அதுவே முடிவு என்பது ஸ்ரீ அரவிந்தம்.
- மேலிருந்து கீழே வருவது சிருஷ்டி, கீழிருந்து மேலே போவது பரிணாமம்.
- இவற்றிடையே ஆயிரம் இடங்கள் அனந்தமான வீச்சுடனிருக்கின்றன.
- மனிதன் தானுள்ள இடத்திலிருந்து மேலே போகலாம், கீழே போகலாம், வலது பக்கமோ, இடது பக்கமோ, எந்த பக்கமோ முடிவில்லாமல் போகலாம்.
- இது பிரம்மத்தின் சுதந்திரம், மனிதன் பிரம்மம் என்பதால் அவன் பெற்ற சுதந்திரம்.
- தவம், துறவறம், மோட்சம் மேலே போவது. உள்ளதுபோய் சீரழிந்து அவல வாழ்வில் ஒதுக்கப்பட்டு ஜடமாவது கீழே போவது, வலது பக்கம் போவது சமூகத்தில் சிறப்புடன் வாழ்வது. இடது பக்கம் போவது சமூகத்தில் தவறான செல்வத்துடன் வாழ்வது. இதுபோல் மனிதனுக்குரிய பாதைகள் முடிவற்றவை.



- உள்ளே போய் மேலே போவது பரிணாமம். சத்திய ஜீவனாவது.
- ஆண்டவனும், அன்னையும் மனிதன் சுதந்திரத்தில் குறுக்கிடுவதில்லை.
- ஆத்மா அறிவால் உணர்ந்து திறனால் செயல்பட்டால் எதையும் சாதிக்கும்.
- உணர்வது அருள், செயல்படுவது சாதனை.
- அருள் தன்னை அன்னையாக நாடுவதை அறிவது பேரருள்.
- நல்லவனும், கெட்டவனும், தோல்வியடைபவனும், வெற்றியடைந்தவனும், தன் இச்சைப்படியே சாதிக்கிறான்.
- மறைந்த பிரம்மம் மறந்தது ஜடம். நினைவுபடுத்துவது அருள். ஏற்பது அறிவு. நடப்பது யோகம்.
- ஆத்மா அசைந்தால் அனைத்தும் அசையும்.
- ஆத்மா அசைக்காதது இல்லை.
- ஆத்மா அறிவால் எதையும் அசைக்கும்.

**மனிதன் விரும்பினால் எதையும் சாதிப்பான் என்பது ஆத்மாவின் தத்துவம்.**

❋❋❋❋❋

# அடக்கத்துள் அடங்கிய ஐந்து அம்சங்கள்

- திருவுருமாற்றமும், சரணாகதியும் பூரணயோகத்திற்கேயுரியவை.
- பிரம்மத்தின் முழுமை, லீலை, பிரம்மம் சிருஷ்டியில் அசுரனாக இருப்பது ஆகிய ஐந்து அம்சங்களும் பூரண யோகத்திற்குரியவை.
- ஒவ்வொரு அம்சத்தையும் நமக்குப் பெற்றுத் தரும் குணம் உண்டு.
- *இந்த ஐந்து அம்சங்களையும் சேர்த்துத் தருவது அடக்கம்.*
- அடக்கமானவர் ஒருவரையே நான் அறிவேன். அது ஸ்ரீ அரவிந்தர் என்றார் அன்னை.
- அடக்கம் ஆலகாலத்தை அமிர்தமாக்கும்.

## சரணாகதி

- எதிரிக்குப் பணிவதை நாம் சரணாகதி என்று கூறுவதில்லை.
- *சரணாகதி என்பது ஒரு செயல் என்பதை விட ஒரு மனநிலை எனலாம்.*
- எந்த காரியத்திற்காக நாம் சரணாகதியை மேற்கொண்டாலும், சரணாகதி அப்பலனை - முடிவான பலனை - முதலிலேயே தரவல்லது.
- முடிவான பலனை செயலை ஆரம்பிக்கும் முன் முதலிலேயே தரும் மனநிலை சரணாகதி.
- முடிவான பலனை முதலிலேயே தரும் முடிவுக்குரிய மனநிலை சரணாகதி.
- அடக்கத்தால் சரணாகதி பலிக்கும். சரணாகதி அடக்கவுணர்வைத் தரும்.
- மனம் எதை ஏற்கிறதோ, அப்பலனை இதுபோல் தரவல்லது சரணாகதி.



- கார் டிரைவரும், பியூனும் மந்திரிகளானது சரித்திரம்.
- அவர்கள் மனம் ஆசையால் நாடியதை சந்தர்ப்பம் அவர்கட்குத் தந்தது.
- அவர்கள் மனம் எதையும் நாடலாம் என அவர்கட்குத் தெரியாது.
- ஆசையால் நாடினால் திறமையால் பலிக்கும்.
- ஆசையின்றி நாடினால் அருளால் பலிக்கும்.
- எதையும் நாடலாம் என்பது மனித நிலை என உலகம் அறியாது.
- ஸ்ரீ அரவிந்தர் பிரம்மத்தை பூமாதேவிக்காக கேட்ட வரம் பெரியது.

  அந்த வரம் கிடைத்துவிட்டதால் மனிதன் எதையும் நாடலாம்.
- எதையும் மனிதன் நாடலாம், அது பலிக்கும் என்றாலும் எதையும் நாடாத மனப்பான்மை போற்றத்தக்கது.
- எதையும் நாடாத மனம் அன்னையை நாடுவது முறை.
- அன்னையை மனம் நாடினால் அன்னை எதைத் தருவார்?

  நமது உச்சகட்ட ஆசையைப் பூர்த்தி செய்வாரா?

  நம்மால் பெறக்கூடிய அதிகபட்சத்தைத் தருவாரா?

  உலகத்தின் அதிகபட்சத்தைத் தருவாரா?

  இவற்றையெல்லாம் அன்னை தருவதை நாம் கண்டுள்ளோம்.

  அன்னை அவரவர் மனநிலைக்கேற்ப, சந்தர்ப்பத்திற்கேற்ப தருகிறார்.

  ஆனால் அன்னை தன் உச்சகட்டவரத்தைத் தர விரும்புகிறார்.

  தருவதை எதிர்பார்ப்பது சரணாகதியில்லை.

  எதையும் எதிர்பார்க்க முடியாத மனநிலை சரணாகதிக்குரியது.

  That surrender is an end itself.

  சரணாகதியை சரணாகதிக்காகவே செய்வது முறை.

  *அதுவே அன்னை விரும்பும் சரணாகதி.*
- அந்த சரணாகதி எந்தப் பலனையும் தரவல்லது.

- அதுவே திருவுருமாற்றத்தைத் தரும்.
- திருவுருமாற்றம் முடிவானது.
- முடிவான திருவுருமாற்றத்தை முதற் பலனாகத் தரும் சரணாகதி *அடக்கத்திற்குரியது.*

## திருவுருமாற்றம்

- இது உலகத்திற்கும், யோகத்திற்கும் புதிய கருத்து.
- சச்சிதானந்தம் உலகமானது சிருஷ்டி. சிருஷ்டி சச்சிதானந்தமாவது பரிணாமம்.
- எனவே திருவுருமாற்றம் இன்றியமையாதது, தவிர்க்க முடியாதது.
- *திருவுருமாற்றமின்றி திருவுள்ளம் பூர்த்தியாகாது.*
- பிரம்மம் உலகமாயிற்று.
- உலகினுள் பிரம்மம் ஒளிந்துள்ளது.
- ஒளிந்தது தன்னைத் தானே கண்டுபிடிப்பது லீலை - ஆனந்தம்.
- பிரம்மம், சச்சிதானந்தமாகி உலகமாயிற்று.
- சச்சிதானந்தம் ஆன்மாவாகி உலகை சிருஷ்டித்தது.
- ஆன்மா ஜடமாகி உலகம் உண்டாயிற்று.
- ஆன்மா 12 அம்சமாகி எதிராக மாறி உலகமாக இருக்கிறது.

  மௌனம், அமைதி, அனந்தம், கடந்தது, சத்தியம், நன்மை, ஐக்கியம், ஞானம், சக்தி, அன்பு, அழகு, சந்தோஷம் என்ற ஆன்மாவின் 12அம்சங்களும், செயல், அசைவு, வலி, காலம், பொய்மை, தீமை, பிரிவினை, அஞ்ஞானம், இயலாமை, வெறுப்பு, விகாரம், துன்பமாக தலை கீழே மாறின.
- மீண்டும் இவை ஆன்மாவின் அம்சங்களாக மாறுவது திருவுருமாற்றம்.



- அப்படி மாறுவது, பரிணாமம், லீலை.
- அப்படி மாறினால் ஆன்மா சிறக்கும்.
- வளராத ஆன்மா வளரும் ஆன்மாவாக, சைத்திய புருஷனாக மாறும்.
- அமைதியான ஆனந்தம், ஆர்ப்பரிக்கும் ஆனந்தமாக மலரும். (Static Bliss becomes active Delight)
- இந்த 12 அம்சங்களும் பரிணாமத்தால் முதலிலிருந்ததை விட உயர்ந்ததாக மாறும்.
- தெய்வங்களுக்கு உடலில்லை. அதனால் இடைவிடாத நினைவில்லை என துர்கை அன்னையிடம் கூறினார்.
- மேல் லோகத்தின் ஆனந்தம் நிலைக்காது. அதற்கு நிலையான தன்மையைத் தருவது உடல் என பகவான் எழுதியுள்ளார்.
- சச்சிதானந்தம், பூலோகத்தில் திருவுள்ளத்தைப் பூர்த்தி செய்யும் பொழுது தன் நிலையில் எல்லா வகைகளிலும் உயர்கிறது.
- கண் தெரியாத ஹெலன்கெல்லர் முயன்று மாறினால் பிரசித்தி பெறுகிறார்.
- உடல் ஊனமுற்றவர் திருவுருமாறினால் உலகத்தில் முதன்மை பெறுவார்.
- ஒதுக்கப்பட்டவர், தாழ்த்தப்பட்டவர் திருவுருமாறினால் நிலை உயர்வதுடன், உலகின் உச்சகட்டத்தை எட்டுவார்.
- திருவுருமாற்றம் என்பது குறையைப் போக்குவது, குறையை நிறைவாக்குவது என்பதில்லை. நிறையை பெருநிறைவாக்க இறைவன் எதிராக மாறி, மீண்டும் பழைய நிலைக்கு உயர்ந்து எழுவது திருவுருமாற்றம். அந்த ஆனந்தமே லீலையின் ஆனந்தம்.
- திருவுருமாற்றம் மூன்று நிலைகளுடையது,
  - முதல் நிலை மனம் சைத்திய புருஷனாவது.
  - இரண்டாம் நிலை சைத்திய புருஷன் ஆன்மீகமயமாவது.
  - மூன்றாம் நிலை சத்திய ஜீவியத்தில் ஈஸ்வரனாவது.

- ⊙ திருவுருமாற்றத்தின் கரு உள்ள நிலையை - விஷமான நிலையை - விருப்பமாக ஏற்பது. ஏற்பதற்கு மனதில் உண்மையும், அடக்கமும் தேவை.

## அசுர, தீயசக்திகள் - Hostile Forces

- ⊙ சிருஷ்டிக்கு முன் சிருஷ்டிக்கப்பட்ட கடவுள்கள் அசுரர்களாயினர் என்பது தத்துவம், பொய், மரணம், இருள், நாட்டின் தலைவன், என்ற 4 அசுரர்களாயினர்.
- ⊙ அவர்களிலிருவர் அழிந்துவிட்டனர் என்கிறார் அன்னை.
- ⊙ அவர்கள் மீண்டும் சத்தியம், அமரவாழ்வு, ஜோதி, உலகத் தலைவர்களாக வேண்டும்.
- ⊙ மனிதனில் 99% தீயது என்கிறார் பகவான்.
- ⊙ நாம் அவ்வசுரன், அந்த தீமை, இருள், மரணம், விகாரம், வேதனை என உள்ளுணர்வால் அறிய வேண்டும். அறிந்ததை ஏற்கும் அடக்கம் தேவை.
- ⊙ மனம் எண்ணத்தாலானது. எண்ணமே தீமை என்கிறார் அன்னை.
- ⊙ எண்ணம் எனில் கெட்ட எண்ணம். எண்ணம் நல்லதாக இருக்க முடியாது என்கிறார் அன்னை.
- ⊙ எண்ணம் கெட்டது, உணர்ச்சி தீமை, உடலின் உணர்வு அசுரனுடைய உணர்வு என அறிவதும், அறிந்ததை ஏற்கும் மனப்பான்மையும் அடக்கத்தால் மட்டும் வரும்.
- ⊙ உள்ளேயுள்ளது அனைத்தும் ஆலகால விஷம் என்று தெரிந்தவுடன், அடக்கம் தானே வரும்.
- ⊙ வெட்கப்பட்டு அடக்கம் வந்தாலும் உயர்ந்த பலன் உண்டு.
- ⊙ வெட்கம் ஞானமாகி, வெட்கப்படுவது அஞ்ஞானமெனமறிந்து வெட்கங்கெட்ட மனமுடையவனைப்போல், ***வெட்கத்தைக் கடந்த மனநிலை பெறவேண்டும்.***
- ⊙ இம்மனநிலை அடக்கத்திற்குரியது.



## சுயநினைவு, Remembrance

- ⊙ பிரம்மம் உலகமாகி, உலகில் மறைந்ததை மறந்தது நினைவுக்கு வருவது சுயநினைவு.
- ⊙ பிரம்மம் அசுரனாகி, உலகமாக இருப்பதால், பிரம்மம் நினைவுக்கு வருமுன் அசுரன் நினைவுக்கு வருவான்.
- ⊙ அசுர குணத்தை அசுர குணமாக ஏற்பது பெரிய உண்மை.
- ⊙ அசுர குணத்தை, அசுர குணமாக அறிவது அஞ்ஞானம்.
- ⊙ பிரம்மம் அசுரனாயிற்று, அதனால் அசுர குணம் பிரம்மத்தின் குணம் என்றறிவது ஞானம்.
- ⊙ நம்மிடம் தீயகுணமில்லை என்பது நாம் நம்மை அறியாதது.
- ⊙ நம்மிடம் தீயகுணம் உண்டு என்று தெரிந்து வெட்கப்படுவது ஞானமில்லை.
- ⊙ தீயகுணம் அசுர குணம், அசுரனாக இருப்பதால் அசுர குணமிருக்கிறது, அசுரன் என்பது பிரம்மத்தின் முன் நிலை. ***அசுரனைக் காண்பது பிரம்மத்தைக் காண்பதற்கு முன் கட்டம் என்பது ஞானம்.***
- ⊙ அசுரன் என்று நம்மை நாம் அறிந்து, அதுவே பிரம்மம் என்று அறிவது இன்று உலகிலில்லாத ஆன்மீக ஞானம்.
- ⊙ ஆன்மீகம் அசுரனை ஒதுக்குகிறது, அழிக்க முற்படுகிறது.
- ⊙ அசுரனை அழித்தால் பிரம்மத்தை அழிக்கிறோம் என்பது ஸ்ரீ அரவிந்த ஞானம்.
- ⊙ தீமையை விலக்கினால் நன்மையை விலக்குவோம் என்கிறார் பகவான்.
- ⊙ அசுரன் என்பதை அறிவதும், அறிவதை ஏற்பதும், ஏற்றதைத் திருவுருமாற்றுவதும் ஸ்ரீ அரவிந்தம்.
- ⊙ ***மறைந்து மறந்த பிரம்மம், சுயநினைவு பெறுவதன் முதற் கட்டம் மனிதன் தன்னை அசுரன் என அறிவது.*** அடக்கம் அசுரனை ஏற்கும்.

## பிரம்மம்

- ⊙ பிரம்மம் என்பதை அனந்தன், அனந்தம் என்பது வழக்கம்.
- ⊙ அனந்தம் என்பதும் ஒரு குணம் என்பதால் பிரம்மத்தை அனந்தம் என்றால் அதற்கு குணத்தைக் கற்பிக்கிறோம். அது சரியாகாது.
- ⊙ வேறு சொல்லில்லாததால் அனந்தம், கடந்தது (Infinity, Eternity) என்று கூறுகிறோம்.
- ⊙ கணிதத்திலும், தத்துவத்திலும் அனந்தம் என்ற கருத்துண்டு. அவை மனத்திற்குரிய கருத்துகள்.
- ⊙ யோகம் வாழ்வு எனவும், உடலின் யோகம் எனப் பூரணயோகம் குறிக்கப்படுவதால், பிரம்மம், அனந்தம் என்பவை மனத்தில், வாழ்வில், உடலில் எப்படி வெளிப்படுகின்றன என்று அறிதல் அவசியம். (Practical concept).
- ⊙ பிரம்ம ரிஷி என்பவர்கள் கண்ட தரிசனங்கள் ஏராளம்.
- ⊙ அவற்றை உண்டு என்று சகுணம் போலும், இல்லை என நிர்குணம் போலும் கண்டு சித்தி பெற்றனர்.
- ⊙ சகுணமும், நிர்குணமும் ஈஸ்வரனின் இருபுறங்கள். ஈஸ்வரன் முழுமை. சகுணமும், நிர்குணமும் மனத்தின் பகுதியான பார்வைக்குரியவை.
- ⊙ பிரம்மம் சிருஷ்டியின் ஆரம்பத்தில் சத் என்றாயிற்று.

  சத் என்பதை புருஷனாகக் கண்டோம்.

  சத் என்பதற்கு முழுமையுண்டு என்றாலும் அதற்கு சிருஷ்டியில் முழுமையுண்டு. சிருஷ்டியைக் கடந்த நிலையில் சத் என்பது பகுதி, எதிரான பகுதி அசத். சத், அசத் இரண்டும் சேர்ந்த பிரம்மம் முழுமை என்றோம்.
- ⊙ சத் புருஷன் என்பது ரிஷியின் பார்வைக்குகந்ததுபோல் பல கட்டங்களில் தெரியும். கடைசியான கட்டம் அக்ஷர பிரம்மம், அதற்கு மேல் புருஷன், புருஷோத்தமன், சத் என்ற நிலைகள் உள்ளன. பிரம்மம் ஒன்றே, பார்வை வேறு. பார்வைக்குகந்தது போல் தரிசனம் உண்டு என்றோம்.



- ⊙ நிலை எதுவானாலும் இரண்டாகப் பிரிந்து தெரியும். ரிஷியின் பார்வை மனத்தின் பார்வை. மனம் ஒரு பகுதியை மட்டும் காணும். அப்படி ரிஷிகள் கண்டவற்றை 7 வகையாகவும், 7 வகையை இரு பிரிவுகளாகவும் - 14 - நாம் இந்திய ஆன்மீகப் பொக்கிஷமாகப் பெற்றுள்ளோம். அவை:-

| | |
|---|---|
| 1. The immobile immutable Self. அக்ஷர பிரம்மம். | 1. The Self that becomes all things சத் புருஷன். |
| 2. Nirguna Brahman<br>The Eternal without qualities<br>நிர்குணப் பிரம்மம். | 2. The essence and source of all determinations and the dynamic essentials. சகுண பிரம்மம். |
| 3. The pure featureless One Existence - ONE பரமாத்மா. | 3. The ONE who is the Many - Many - ஜீவாத்மா. |
| 4. The Impersonal<br>அனந்த குணா. | 4. The infinite Person who is the source and foundation of all persons and personalities. |
| 5. The Silence void of activities<br>புருஷன் | 5. The Lord of Creations - The Word ஓம். |
| 6. The Non-being<br>அசத். | 6. The Master of all works and action.<br>சத். |
| 7. The Ineffable<br>சொல்லைக் கடந்தவன்<br>The Unknowable<br>அப்பாலுக்கப்பால். | 7. That being known all is known |

- ⊙ இந்த 14 தரிசனங்களும் பகுதியான மனம் கண்ட பகுதியான பிரம்மம்.

- ⊙ ***பிரம்மம் மேல் லோகத்திலும், சிருஷ்டியைக் கடந்த நிலையிலும், சிருஷ்டியில் பூலோகத்திலும் என்றும், எப்பொழுதும், எதிலும் முழுமையானது என்பது ஸ்ரீ அரவிந்தம்.***

- ⊙ பகுதிக்கு எதிரான முழுமையில்லை இம்முழுமை.

- ⊙ இது பிரம்மத்தின் முழுமை. மனிதன் அறியும் முழுமையல்ல. பகுதிக்கு எதிரான முழுமையுமில்லை, எல்லா பகுதிகளும் சேர்ந்த தொகுதியுமில்லை என்பது ஸ்ரீ அரவிந்தம் பிரம்மத்திற்குக் கொடுக்கும் புது விளக்கம். இந்த விளக்கத்தை உடலிலும், ஜடத்திலும் அறிவதே பூரண ஞானம்.

- ⊙ Life Divineஇல் இரண்டாம் புத்தகத்தில் இரண்டாம் அத்தியாயத்தில் இந்த தத்துவத்தை 12 வகையாகப் பிரித்து முழுமையை விளக்குகிறார்.

- ⊙ வகுப்பில் கணிதம் நடத்தும் ஆசிரியரை மாணவர்கள் கணித ஆசிரியர் என்பர், அடுத்த வகுப்பில் ஆங்கிலமும், வேறொரு வகுப்பில் விஞ்ஞானமும் நடத்துகிறார். அவர் ஆசிரியர். எந்தப் பாடமும் நடத்தக் கூடியவர். ஒரு வகுப்பு மாணவர்க்கு அவர்களின் ஆசிரியர்.

- ⊙ அவர் வீட்டிற்குப் போனால் ஆசிரியரில்லை, கணவன், தகப்பனார், தம்பி, மகன் என்ற நிலைகளுண்டு.

- ⊙ அவர் ஆசிரியர் தொழிலிலிருந்து வியாபாரம், விவசாயம் என்ற மற்ற தொழில்கட்கும் போவதுண்டு.

- ⊙ இவற்றை எல்லாம் கடந்து அவன் ஒரு மனிதன். அதையும் கடந்து ஆத்மா. முடிவாக அவர் பிரம்மம். பிரம்மம் என்பவரை கணித ஆசிரியரென மாணவர் உலகம் அறியும். ***அவரது முழுமை பிரம்மம். அதற்கும் கணிதத்திற்கும் உடன்பாடான தொடர்போ, எதிர்மறையான தொடர்போ மிகச் சிறியது.*** ரூபத்திற்கு ஆண்டவன் எதிரான அரூபி என்றால், அவன் ரூபம், அரூபத்திற்கு உட்பட்டவனாகிறான். அவனுக்கு குணம் உண்டு, எதிரான நிர்குணம் உண்டு. அவனே சத், எதிரான அசத்தும் கூட. அவன் வலியும், ஆனந்தமுமாவான். மௌனமும், நிசப்தமுமாவான். ரூபத்திற்கு எதிரான அரூபி என்பதால் மற்ற அம்சங்களில்லை என்றாகாது. பிரம்மத்திற்கு எல்லா அம்சங்களும், அவற்றிற்கு எதிரான



அம்சங்களும், அம்சமேயில்லாத நிலையும், நிலையைக் கடந்ததுமான அனந்தமும் உண்டு என்பதை இவ்வத்தியாயத்தில் 12 தலைப்புகளில் பகவான் நேரான அம்சத்தாலும், எதிரான அம்சத்தாலும், அம்சத்தைக் கடந்த நிலையாலும், நிலையாலும் வர்ணிக்க முடியாதபடியும் கூறுகிறார்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மௌனம் | x | செயல் | ஐக்கியம் | x | பிரிவினை |
| அமைதி | x | அசைவு | ஞானம் | x | அஞ்ஞானம் |
| அனந்தம் | x | அந்தம் | சக்தி | x | இயலாமை |
| கடந்தது | x | காலம் | அன்பு | x | வெறுப்பு |
| சத்தியம் | x | பொய்மை | அழகு | x | விகாரம் |
| நன்மை | x | தீமை | சந்தோஷம் | x | வலி, துன்பம் |

- ⊙ இந்த வர்ணனையை முடிவற்றது, தீராதது (endless, boundless finite, inexhaustible) என அறிவதும் பிரம்மத்தை அறிவதாகாது.
- ⊙ எடுக்க எடுக்கக் குறையாது பிரம்மம், அக்ஷயபாத்திரம்போல் என்றால் புரியும்.

- ⊙ எவ்வளவு சேர்த்தாலும் வளராது என்பது அதேபோல் எளிதில் புரியாது.

- ⊙ *குறைய முடியாததும், வளர முடியாததுமானது பிரம்மம்.*

- ⊙ குறைவதும், வளர்வதும் மனத்திற்குரிய நிலைகள். அதைக் கடந்த நிலையிது.

- ⊙ குறைவதும், வளர்வதும் பகுதிக்குரிய நிலைகள்.

- ⊙ குறை நிறைவானது பகுதி.

- ⊙ நிறை குறைவாவது பகுதி.

- ⊙ குறை நிறையானால் முழுமையல்லவா? - அது பகுதியின் முழுமை.

- ⊙ ***பிரம்மத்தின் முழுமை அசைவால் மாறாதது.***
  ***பிரம்மத்தின் பகுதியே முழுமை.***

*பிரம்மத்திற்கு பகுதி, முழுமை என்பவையில்லை. அவை குணங்கள்.*

*பிரம்மத்தை பிரம்மம் எனலாம், முழுமை எனக் கூற முடியாது.*

*அசைவால், அளவால், செயலால், குணத்தால், ரூபத்தால் மாற முடியாதது பிரம்மம். பிரம்மத்திற்குரியது பிரம்மம், குணமல்ல.*

- இப்படி பிரம்மத்தை அறிவது பிரம்ம ஞானம்.
- நாமே இந்த பிரம்மம் என அறிவது சுயநினைவு.
- இந்த பிரம்மம் அதன் முன் நிலையில் ஆலகால விஷமாக இருக்கிறது.
- *நானே அந்த விஷம்,* என்பதை ஏற்பதற்கு மனத்தில் உண்மையும், அடக்கமும், ஆன்ம விழிப்பும், பிரபஞ்சத்தை அறியும் திருஷ்டியும் வேண்டும்.
- பிரம்மத்தை அறிவது பிரம்ம ஞானம்.
- பிரம்மத்தை உணர்வது பிரம்ம ஆனந்தம்.
- பிரம்மத்தை பூவுலகில் காண்பது பிரம்ம திருஷ்டி.
- நாமே பிரம்மம் என உணர்வது பரிணாமத்திற்குரியது.
- அந்த பிரம்மத்தின் முழுமையை உலகில் காண்பதுபோல் உள்ளத்தில் கண்டால், முழுமையும், தீமை முழுமையாகவும் இருக்கும்.
- தீமை விலக்கப்பட வேண்டியதில்லை, திருவுருமாற்றப்பட வேண்டியது.
- திருவுருமாற்றம் மனிதனுக்குரியதல்ல. அன்னைக்குரியது.
- அன்னையைத் திருவுருமாற்ற அழைப்பது சரணாகதி.
- சரணாகதி அடக்கத்தால் வருவது.
- பிரம்மத்தின் முழுமையை அறிய அடக்கம் தேவை.
- அதன் முழுமை மனதில் எழ மனம் அடங்க வேண்டும்.



- பிரம்மம் ஆலகாலமாகக் காட்சியளிப்பதை ஏற்க, அறிய, அடக்கம் வேண்டும்.
- நாமே பிரம்மம் என்றபின், அடக்கம் பறந்து போகும்.
- நாமே பிரம்மம் என்ற பின் இருக்கும் அடக்கம், அடக்கமாகும்.
- சுயநினைவு அடக்கத்திற்குரியது.
- ஆலகாலமே நான் என ஏற்பது அடக்கம்.
- அதை என்னால் திருவுருமாற்ற முடியாது என்பது அடக்கம்.
- அதை மாற்ற அன்னையை நான் அழைக்க முடியும் என்றவுடன் அடக்கம் பறந்துபோகும்.
- அழைத்தவுடன் அன்னை ஆலகாலமாக இருப்பதை அமிர்தமாக மாற்றுமுன் நம்மை அன்னையாக மாற்றுகிறார்.
- இந்த மாற்றம் அடக்கத்தைக் கொடுக்காது.
- அடக்கமிருந்தால்தான் இம்மாற்றம் நிலைக்கும்.
- இம்மாற்றம் நிலைக்கும் மனநிலை சரணாகதிக்குரியது.
- இம்மாற்றம் ஏற்பட சரணாகதியை ஏற்கும் ஞானம் முடிவான ஞானம்.
- பிரம்மம், லீலை, அசுரன், திருவுருமாற்றம், சரணாகதி ஆகியவை அடக்கத்துள் அடக்கம்.
- ஸ்ரீ அரவிந்தரிடம் அந்த அடக்கத்தை அன்னை கண்டார்.
- மற்றவரிடம் காணவில்லை.

**அடக்கம் பிரம்மத்தைக் காட்டி, சுயநினைவைக் கொடுத்து, ஆலகாலத்தை அமிர்தமாக மாற்றும் சரணாகதிக்கு நம்மை உரியவராக்கும்.**

❁❁❁❁❁

## விளக்கங்கள்

**1. சரணாகதி முடிவான பலனை முதலிலேயே தரும்.**

நாம் ஒரு செயலை மனத்தால் நினைத்து பிறகு அதை கற்று உடலால் செய்கிறோம். மனம் நினைக்கிறது. புத்தகம் வாங்குவது எண்ணமாக மனதில் தோன்றுகிறது. உடல் கடைக்குப் போய் வாங்குகிறது. புத்தகத்தின் மீதுள்ள அக்கறை கடைக்குப் போகும் உற்சாகத்தைத் தருகிறது. இது நாம் செயல்படும் முறை.

மனம் என் எண்ணத்தை உணர்வாலும், உடலாலும் நிறைவேற்றுவதை நான் செயல்படும் முறையாகக் கொண்டுள்ளேன்.

சமர்ப்பணம், சரணாகதி எனில் மனத்தின் எண்ணத்தை ஆன்மாவுக்கும், அன்னைக்கும் தருகிறோம். மௌனமாக ஆன்மா மனத்தின் எண்ணத்தை எடுத்து அன்னையிடம் தருவது சமர்ப்பணம், சரணாகதி. அன்னையின் சக்தி சத்திய ஜீவிய சக்தியாகும். உண்மையில் அதையும் கடந்ததாகும். அங்கு காலம் இல்லை. அது காலத்தைக் கடந்த நிலை. காலத்தைக் கடந்த சக்தி எண்ணத்தை ஏற்று செயல்படுவதால் முடிவான பலன் முதலிலேயே வருகிறது. கடைக்குப் போகும் முன் அப்புத்தகம் வீட்டிற்கு வருவதைக் காண்கிறோம்.

**2. அடக்கத்தால் சரணாகதி பலிக்கும், சரணாகதி அடக்கவுணர்வைத் தரும்.**

நமக்கு திறமையுள்ள காரியத்தை செய்யப் பிரியப்படுகிறோம். அதை செய்யாமலிருக்க முடியாது. புதியதாக பெற்ற பயிற்சி எதுவானாலும் அதைச் செய்ய கை துடிக்கும். ஒருவர் கேட்கும் கேள்விக்குச் சரியான பதிலை எவரும் சொல்லாதபொழுது அதைத் தெரிந்தவரால் சொல்லாமலிருக்க முடியாது. மனம் அடங்காது. தன் திறமையை சரணம் செய்வது அருளைப் பொருளாக்கும் என்கிறார் அன்னை. சரணாகதிக்கு அந்த அடக்கம் தேவை. இறைவன் முன் நாம் துரும்பு என்பதே அடக்கவுணர்வு என்பது அன்னை விளக்கம். அந்த அடக்கமில்லாமல் சரணாகதியில்லை. இது எவ்வளவு சிரமம் என்பதை அறிய வேண்டுமானால், ஓர் எண்ணம் - யார் கதவைத் தட்டுகிறார்கள் என அறியும் எண்ணம் - மனத்தில் எழுந்தபொழுது அதைச் சரணம் செய்ய முயன்றால் சிரமம் தெரியும். அதைச் சரணம் செய்வது யோகத்தில் முதல் அடி எடுத்து வைப்பதாகும்.



**3. மனம் எதை ஏற்கிறதோ அதைத் தரவல்லது சரணாகதி.**
நாம் எதையும் அதிக சிந்தனையின்றி செய்கிறோம். படிப்பு எனில்,

"நான் SSLC படித்திருக்கிறேன். 15 வருஷமாயிற்று. இனி எனக்கு வராது" என்பவர் வராது என்பதை ஏற்கிறார். அவருக்கு அது பலிக்கிறது. Ph.D. எடுத்துவிட வேண்டும் என நினைப்பவருக்கு இது பலிக்கிறது.

சிறிய உத்தியோகம், பெரிய செல்வம், கற்பனைக்கெட்டாத பதவி ஆகியவற்றை எட்டியவர்களை நெருக்கமாகத் தெரியுமானால், அவர் மனம் ஏற்றது அதனால் அவருக்குப் பலித்தது என்பது தெரியும்.

- ⊙ மனம் ஏற்காவிட்டால் நிச்சயமாகப் பலிக்காது.
- ⊙ மனம் ஏற்றதால் மட்டும் பலிப்பதில்லை.
- ⊙ மனம் ஏற்றால், திறமைக்கும், அதிர்ஷ்டத்திற்கும் ஏற்றவாறு பலிக்கும்.
- ⊙ அன்பரின் மனம் ஏற்றால் திறமையிருந்தால் நிச்சயமாகப் பலிக்கும். திறமை இல்லாதவர்க்கும் பலித்ததுண்டு.
- ⊙ ஒரு காரியம் பலிக்க மனம் ஏற்பது அவசியம்.

இது முதற் பகுதி. மனம் ஏற்றுப் பலிக்கும் காலத்தில் அதற்குரிய நேரத்தில் பலிக்கும். மனம் ஏற்றபின், சரணாகதியிருந்தால் உடனே பலிக்கும். எதுவானாலும் பலிக்கும் என்பது கவனிக்கத்தக்கது. ஸ்ரீ அரவிந்தர் கேட்ட வரம் அளிக்கப்பட்டதால், நாம் கேட்பதெல்லாம் அதற்கு உட்பட்டது என்பதால், எதுவும் பலிக்கும். உடனே பலிக்கும்.

4. திருவுருமாற்றத்தை முதற்பலனாகத் தருவது சரணாகதி, அது அடக்கத்திற்குரியது. நாம் நல்லது வேண்டும். கெட்டது வேண்டாம் என்கிறோம். ஒரு நாணயத்தின் தலை மட்டும் வேண்டும் என்றால் நாணயமில்லை. தங்க சுரங்கத்தில் தங்கம்

கனிப்பொருளாக இருக்கிறது. கனிப்பொருளை சுத்தம் செய்து, உருக்கி தங்கம் பெறவேண்டும். தங்கம் வேண்டும், கனிப்பொருள் வேண்டாம், எனில் தங்கமில்லை. ஞானம், அஞ்ஞானமானதால், இனி ஞானம் அஞ்ஞானத்திலிருந்து எழ வேண்டும். அஞ்ஞானத்தை ஒதுக்கினால் எதிலிருந்து ஞானம் வரும்? ஞானம் வருவது தடைப்படும். "ஏழ்மையை ஒதுக்கினால் செல்வம் எப்படி ஒதுக்கப்படும்" எனலாம். ஏழை பணக்காரனாகாவிட்டால் நாடு ஏழையாக இருக்கும்.

5. வளராத ஆன்மா, வளரும் ஆன்மாவாக மாறியது. அதுவே சைத்திய புருஷன். சத் என்ற அகம் சத்தியம் என்ற புறமான பொழுது ஆன்மா அவற்றிடையே ஏற்பட்டது. அந்த ஆன்மாவுக்கு ஆதி, அந்தம், மாற்றம், வளர்ச்சியிலில்லை என்பது இந்திய மரபு. பிறப்பிலேற்பட்ட புத்தி வளராது, கர்மம் அனுபவிக்கப்பட வேண்டியது போன்றவை இவை. சச்சிதானந்தம் உலகமாக மாறி, பரிணாமத்தால் மீண்டும் சச்சிதானந்தமாகும்பொழுது ஆனந்தம் வளர்கிறது (Bliss becomes Delight) ஆன்மா வளர்கிறது என்பது ஸ்ரீ அரவிந்தம். சத், சித், ஆனந்தம் மூன்றும் முதலிலிருந்ததைவிட உயர்ந்ததாகின்றன. சிருஷ்டி, பரிணாமம் என்ற பாதைகளில் சென்ற பின் வளர்ச்சியுண்டு. பரிணாமத்தைப் பற்றி மரபு பேசுவதால் அவர்கள் வளராது என்றனர்.

6. எண்ணமே கெட்டது என்கிறார் அன்னை.

உடல் இருளாலானது. இருள் தீமை. எண்ணம் உடலில் எழுவதால் அது இருளின் வெளிப்பாடு. அதனால் எண்ணமே தீமை என்கிறார். அத்துடன் எண்ணம் பிரம்மத்தை எட்டும் என மரபுக்கு எதிராகவும் பேசுகிறார். சிருஷ்டியில் இரு அம்சங்களுண்டு.

- ⊙ சத்திய ஜீவியம் சத் என்பதன் எண்ணத்தால் (Real Idea) உலகை சிருஷ்டித்தது.
- ⊙ பிரம்மம் தன் எண்ணத்தால், இச்சையால் உலகை சிருஷ்டித்தது என்கிறார் (Self -Conception).



பிரம்மம் எண்ணத்தால் உலகை சிருஷ்டித்தது என்பதால் எண்ணம் பிரம்மத்தை எட்டும் என்கிறார்.

7. குறைய முடியாததும், வளர முடியாததும் பிரம்மம்.

குறைய முடியாதது பிரம்மம் என்பதை அக்ஷய பாத்திரம் மூலம் அறியலாம். வளர முடியாது என்றால் எப்படிப் புரியும். பூவுலகம் சலனத்திற்கு உட்பட்டது. அது சலனத்தால் - எடுப்பதால் - குறையும், நிறையும். பிரம்மம் சலனத்தால் பாதிக்கப்படாதது என்பதால் குறைவும், நிறைவும் அதற்கில்லை. பொருத்தமான உதாரணம் சொல்வது சிரமம். மகாத்மா காந்தி, ஐன்ஸ்டீன் போன்றவர்களை உலகம் தாழ்த்தவோ, உயர்த்தவோ முடியாது. குறை சொல்வதால் அவர்கள் குறையப் போவதில்லை. நோபல் பரிசால் உயரப் போவதில்லை. அவர்கள் மனித நிலையைக் கடந்தவர் என்பதுபோல், பிரம்மம் மனித நிலையைக் கடந்தது. பிரம்மம் குறையாது, வளராது என்ற கருத்தை மனம் கணிதத்தில் ஏற்பதுபோல் ஏற்க வேண்டும். மேலும் ஜடத்திலும் அதை ஏற்பது அவசியம். முக்கியமாகப் பணம் செலவு செய்தால் பெருகும் என்ற சொந்த அனுபவம் பிரம்மத்தை ஜடத்தில் அறிய உதவும். பணம் செலவு செய்தால் பெருகும் என்ற அனுபவம் தருவது பணமில்லை, பிரம்மம். பிரம்மத்தை மனிதன் திட்டவட்டமாக, தெளிவாக, ஐயம் திரிபு அற ஜடத்தில் அறிவதற்கு இவ்வனுபவம் உதவும்.

**பெருகும் பணம் பிரம்ம சித்தி.**

❋❋❋❋❋

# ஸ்ரீ அரவிந்த மந்த்ரோபதேசம்

ஸ்ரீ அரவிந்தர் காயத்ரி மந்திரம் எழுதியுள்ளார். வேறு சில மந்திரங்களையும் பல சமயங்களில் எழுதினாலும் "ஸ்ரீ அரவிந்தர்", "அன்னை" என்பவையே சக்தி வாய்ந்த மந்திரங்கள் என்கிறார்.

சாவித்திரியிலும், Life Divineளிலும் ஒவ்வொரு வாக்கியமும் மந்திர சக்தி வாய்ந்தவை என்பதை சோதனை செய்தும் பார்க்கலாம். மந்திரம் போன்ற சொற்களே இந்நூல்களில் ஏராளமானவையுண்டு. உதாரணமாக,

There is a Silence behind Silence.
Body rules the mind is a minor truth.
Mind rules the body is a major truth.
This seems to be the complete process of creation.
The taste of Ignorance is over.
Ignorance is the greatest product of creation.
At the gates of the Transcendent stands the Self pure, Silent, immobile.

பகவான் எழுதியவற்றை அவர் எழுதியபடி புரிந்து கொள்வது ஸ்ரீ அரவிந்தர் நேரடியாக தீட்சையளிக்கும் மந்த்ரோபதேசமாகும். நாம் நூலைப் படிக்கும்பொழுது அவர் கருத்துகளைத் திரட்டி மனதில் ஒன்று சேர்க்கிறோம். பகவான் Life Divine எழுத ஆரம்பிக்கும்பொழுது அவர் மனதில் ஓர் எண்ணம் இருந்தது. நாம் நம் மனதில் அவருடைய பல எண்ணங்களைத் திரட்டி ஒன்றாக்குவதுபோல் அவர் தம் மனதிலிருந்த ஒரு எண்ணத்தைப் பல பாகங்களாக்கி நூலை எழுதினார். கொஞ்சம் கொஞ்சமாக நாம் அதை அடையலாம். அந்த ஓர் எண்ணம்,

**பிரபஞ்சத்தை சிருஷ்டித்த மந்திரம்.**



நூலில் நான்கு இடங்களில் அதை நான்கு பாகமாகப் பிரித்து நூலின் ஆரம்பத்திலும், இரண்டாம் பாகத்தின் முன்னும் இரண்டாம் புத்தகத்தின் இரு பாகங்களுக்கு முன்னும் ஸ்ரீ அரவிந்தர் எழுதியுள்ளார். அவை நூல் எழுந்த மூலம். விவரமாகப் புரிந்து மனதில் ஏற்றால் அந்த நான்கு பகுதிகளும் எண்ணத்தில் கனிந்து உணர்ச்சியை ஆட்கொண்டு ஜீவனைத் தொடும். நூலில் 1070 பக்கங்களில் சுமார் 1000 முதல் 1500 கருத்துகள் உள்ளன, 56 அத்தியாயங்கள் 3 பகுதிகளாக எழுதப்பட்டன. இவற்றை முழுவதும் மனம் அறிந்தால் ஒருவர் multiple genius பல துறைகளில் மேதையாவார். இந்த இரகஸ்யம் ஓரளவு வெளிப்படும் வகையில் நூலின் அமைப்பை சுருக்கமாகவோ, விளக்கமாகவோ கூறலாம். சில கட்டுரைகளில் சுருக்கமாகக் கூறியவற்றை இங்கு முடிந்தவரை விளக்கமாகக் கூறுவது நோக்கம்.

அறிவுக்குத் தடையான அம்சங்கள் சிக்கலாக மாறுகின்றன. அந்த சிக்கல்கள் பலவற்றை அவிழ்க்கும் வகையாக மேற்கூறிய குறிக்கோளை எட்ட முனைவது கட்டுரையின் நோக்கம்.

வாசகர் நூலைப் படிக்க ஆரம்பித்தவுடன் முதல் அனுபவம் முதலிரண்டு பக்கங்களில் "என்ன எழுதுகிறார் என்று புரியவில்லை" என்பது. அத்துடன் மனம் களைத்து சோர்ந்து கொட்டாவி வரும். பல கொட்டாவிகள் வந்தால் நூலை மூடி வைத்தால் பல மாதங்கள் Life Divine நினைவு வராது. பெரும்பாலோர்க்கு இதுவே ஆரம்பம். அநேகருக்கு முடிவும் இதுவே. ஆங்கிலம் அற்புதமாக இருக்கிறது என்பது அனைவருடைய அனுபவம். சொல் நயம் செப்பலோசையாக இருக்கும். படிக்க அளவு கடந்த ஆசையும், தொட மறுக்கும் உணர்வும் வாசகர்கள் அனுபவம். ஆங்கிலம் தாய் மொழியானவர் ஒருவர், இதுபோல் நினைத்தபொழுது நான் சித் - சக்தி என்ற அத்தியாயத்தைப் படித்துக் கொண்டிருந்தேன். "நீங்கள் சொல்வது சரி. ஆனால் அத்தியாயம் என்ன கூறுகிறது, என்ன வாதங்கள், எப்படி எழுதப்பட்டிருக்கின்றன என அறிந்தால் நாவல் படிப்பதுபோல் (page turner) கடினமான இதே அத்தியாயமிருக்கும்" என்றேன்.

அத்துடன் அந்த அத்தியாயம் விளக்குவதையும், வாதங்கள் வரிசைப்பட்டிருப்பதையும், அவற்றிற்கெல்லாம் சிகரமாக விரயம் சுருக்கமாக விளக்கப்பட்டிருப்பதையும் அவர் திருப்திப்படும்வரை சொன்னேன். அடுத்த ஆண்டு அவர் தம் நாட்டிலிருந்தபொழுது தினமும் காலையில் ஒரு அத்தியாயம் படிப்பதாகச் சொன்னார். அப்படி இந்த 10ஆம் அத்தியாயம் வந்தபொழுது page turner ஆக இருந்தது எனவும் கூறினார்.

ஆங்கிலம் தடை எனில் நூலைத் தமிழில் எழுதினால் மொழியின் தடையிருக்காது. அத்தியாயங்களை பகவான் அமைத்த பாங்கை மட்டும் இக்கட்டுரையில் எழுத முற்படுகிறேன். இக்கட்டுரை பயன்பட நூலை பலமுறை படித்திருக்க வேண்டும். என்றாலும் முதலில் படிப்பவர் மனதிலும் ஓரளவு படும் வகையில் எழுத முயல்கிறேன். அதற்கு முன் பகவான் உலகுக்கு அருளிய புதுக் கருத்துகளை எழுதுகிறேன். நூலின் அமைப்பு இக்கருத்துகளை வெளிப்படுத்துவதாக அமைவதால் இவற்றை அறிவது உதவும்.

- இறைவன் ஆனந்தம் தேடி உலகை சிருஷ்டித்தான்.
- தேடுவது அவன் திறமை, நாடுவது அவன் உரிமை.
- கண்டுபிடிப்பது ஆனந்தம்.
- மறைந்ததைக் காண்பது ஆனந்தம்.
- தானே தன்னுள் மறைந்து, மறைந்ததை மறந்து, மீண்டும் நினைவு வருவது ஆனந்தம். நினைவைத் தொடர்ந்து தன்னை மீண்டும் கண்டுபிடிப்பது பேரானந்தம்.
- இது லீலைக்கு ஸ்ரீ அரவிந்தர் அளிக்கும் விளக்கம்.
- மறைவது சிருஷ்டி.
- கண்டுபிடிப்பது பரிணாமம்.
- காலத்தைக் கடந்த அனந்தமான பிரம்மம் தன்னை மறைக்க தன் அம்சங்களை ஒவ்வொன்றாய் இழக்கிறது.



- சிருஷ்டிக்கு அப்பாற்பட்ட பிரம்மம் தன் நிலையை இழந்து சிருஷ்டிக்குள் வருவது முதல் நிலை.
- அம்முதல் நிலை சத் என்ற சத் - புருஷன், Self-Conscious Being.
- இதை Being, Existence சத், ஜீவன் எனவும் கூறுகிறோம்.
- ஒன்றை எதிரெதிரான இரண்டாகப் பிரித்து ஒன்றை மற்றதினுடன் இணைத்து முழுமையை அடைய இயற்கை பின்பற்றும் முறை சிருஷ்டியின் ஆரம்பத்தில் ஆரம்பிக்கிறது.
- பிரம்மம் தன்னை சத், அசத் எனப் பிரித்து சிருஷ்டியை ஆரம்பிக்கிறது.
- Being வந்தவுடன் Non-Being வரும்; Existence வந்தவுடன் Non-Existence வரும். அவற்றையே சத், அசத் என்கிறோம்.
- சத் என்ற சத் புருஷன் சச்சிதானந்தமாகும்.
- பிரம்மத்திற்கு சத்தாக வேண்டிய அவசியமில்லை என்பதுபோல் சத்திற்கு சித்தாக வேண்டிய அவசியமில்லை. சித்திற்கு ஆனந்தமாகும் அவசியமில்லை. *அவசியமில்லாததை ஏற்பது சுதந்திரத்தை இழப்பது, அதுவே மறையும் பாதை.*
- சத் சித் ஆக மாறி சித் ஆனந்தமாக மாறுவது சச்சிதானந்தம் ஏற்படுவது.
- வேறு வகையான மாற்றமும் உண்டு. இதை அகம், புறம் என்போம்.
- *சத் என்ற அகம் சத்தியம் என்ற புறமாகும்.*
- சத் என்ற அகத்தையும், சத்தியம் என்ற புறத்தையும் இணைப்பது ஆன்மா Spirit எனப்படும். இதை Spiritual substance என்கிறார்.
- பிரபஞ்சமும், உலகமும் இந்த substance ஆல் ஆனவை.
- மேல் லோகங்களில் Spiritual substance ஆக இருப்பது கீழ் லோகங்களில் material substance ஆக மனத்தால் மாறுகிறது.
- இந்த spirit ஆன்மா, என்பது ஆதியில் பிரம்மம்.

- பிரம்மம் மறைவது எனில் Spirit மறைவதாகும்.
- Spirit ஆன்மா தன்னுள் மறைந்து Matter ஜடமாகிறது.
- Spirit அதுபோல் மறைவதன் முன் 12 அம்சங்களாகப் பிரிந்து தலைகீழ்மாறி எதிராக உருவம் பெற்று சிருஷ்டி involution யைப் பூர்த்தி செய்கிறது.
- இதையே சச்சிதானந்தம் உலகமாக மாறுகிறது என்கிறோம். அதுவே சிருஷ்டி.
- சத், சித், ஆனந்தம், சத்திய ஜீவியம் தலைகீழே மாறி ஜடம், சைத்திய புருஷன், வாழ்வு, மனமாக மாறுவதும் ஆன்மாவின் 12 அம்சங்கள் தலைகீழே மாறுவதும் ஒன்றே. இருவகையாக விளக்கப்படுவது.
- சத் சித்தாக மாறி ஆனந்தமாக மாறுவது ஒரு மாற்றம்.
  சத் என்ற அகம் சத்தியம் என்ற புறமாக மாறுவது அடுத்தவகை மாற்றம்.
- சத் சத்தியமாகவும், சித் ஞானமாகவும், ஆனந்தம் அனந்தமாகவும் மாறினால் சத்தியம் - ஞானம் - அனந்தம் என்பது சத்திய ஜீவியமாகும். இவை அகம் புறமாகும் மாற்றமாகும்.
- சத், சித், ஆனந்தம் என்பவை ஆன்மாவாக மாறும்பொழுது ஆன்மாவின் அம்சங்கள் 12 என்றோம்.

  சத் என்பது ஐக்கியம், சத்தியம், நன்மை எனவும்,

  சித் என்பது ஞானம், உறுதி எனவும்,

  ஆனந்தம் என்பது அழகு, அன்பு, சந்தோஷம் எனவும் மாறுகின்றன.
- ஆன்மாவுக்கு அடிப்படையில் 4 அம்சங்கள் உள்ளன. அவை மௌனம், சாந்தி, அனந்தம், காலத்தைக் கடந்த நிலை.
- இந்த 12 அம்சங்களும் எதிராக மாறுவது சிருஷ்டி.

| | | | |
|---|---|---|---|
| Silence | Peace | Unity | Truth |
| x | x | x | x |
| Activity | Movement | Division | Falsehood |



| | | | |
|---|---|---|---|
| Goodness | Knowledge | Will | Beauty |
| x | x | x | x |
| Evil | Ignorance | Weakness | Ugliness |

| | | | |
|---|---|---|---|
| Love, | Joy | Infinite | Timeless |
| x | x | x | x |
| Hatred | Pain | Finite | Time |

| | | | |
|---|---|---|---|
| மௌனம் | சாந்தி | ஐக்கியம் | சத்தியம் |
| x | x | x | x |
| சப்தம் | சலனம் | பிரிவினை | பொய்மை |

| | | | |
|---|---|---|---|
| நன்மை | உறுதி | அழகு | அன்பு |
| x | x | x | x |
| தீமை | உறுதியின்மை | விகாரம் | வெறுப்பு |

| | | |
|---|---|---|
| சந்தோஷம் | அனந்தம் | காலத்தைக் கடந்த நிலை |
| x | x | x |
| வலி | அந்தம் | காலம் |

- எப்படிப் படிப்படியாக தங்கள் நிலையை இழந்து எதிராக மாறுகின்றன என்பது சிருஷ்டியின் பல்வேறு நிலைகள்.
- சிருஷ்டியில் 12 அம்சங்கள் மாறுவதும் ஒரே சமயத்தில் நடந்தாலும் சிருஷ்டியை விளக்க ரிஷிகளும், ஸ்ரீ அரவிந்தரும் பயன்படுத்திய அம்சம்,

  **Knowledge எதிராக Ignorance ஆக மாறுவது**
  **ஞானம் அஞ்ஞானமாக மாறுவது.**
- இதுவரை மனிதன் பெற்றிருந்த பெரிய கருவி மனம்.
- மனம் பகுக்கும் கருவி, பகுதியானது. இதனால் முழுமையை அடைய முடியாது.
- ரிஷிகள் பிரம்மத்தை மனத்தால் பார்க்க முயன்றபொழுது முடியவில்லை என்பதால் சமாதியில் பிரம்மத்தைக் கண்டனர். பிரம்மத்தின் பகுதியைக் கண்டனர்.

- கண்டது பகுதி, பார்த்தது மனம், சமாதியில் (unconscious) பார்த்தனர்.
- அதனால் காண முடியும், விளக்க முடியாது என்றனர்.
- சத்திய ஜீவியம் முழுமை. முதலில் ஸ்ரீ அரவிந்தருக்கு சித்தித்தது.
- சத்திய ஜீவியத்தில் பிரம்மம் என்றும் நின்று நிலை பெறும்.
- சத்திய ஜீவியத்தால் பிரம்மத்தை முழுமையாகக் காணலாம்.
- விழிப்பில் காணலாம்.
- அதனால் விளக்கலாம்.
- அப்படி விளக்கி எழுதப்பட்ட நூல் Life Divine.
- காலம், இடம் என்பவை ஜீவியத்தின் அகம், புறம்.
- ஜீவியத்தின் அகமான காலம், புறமான இடமாகிறது.
- காலமும், இடமும் உலகம் செயல்பட அவசியம்.
- பரமாத்மா ஜீவாத்மாவானதும், புருஷன் பிரகிருதியானதும், ஒன்று பலவாக மாறியதும் சிருஷ்டி. அது எப்படி நடந்தது என நாம் கேட்கக் கூடாது என்பது இதுவரையுள்ள நிலை.
- இதை double opening என்கிறார் ஸ்ரீ அரவிந்தர். பரமாத்மா இரண்டாகப் பிரிந்து ஜீவாத்மாவாகி, மீண்டும் ஒன்றாவது சிருஷ்டியின் இரகஸ்யம் என்பது ஸ்ரீ அரவிந்தம்
- பரமாத்மா என்பது ஜீவன் Being, Purusha அதன் ஜீவியம் சித் எனப்படும். சித் தன்னுள்ளிருந்து சக்தியை வெளிப்படுத்துகிறது. சக்தி பிரகிருதி எனப்படும். மனம் என்ற பகுக்கும் கருவி சக்தியைப் பகுப்பதால் பல ஜீவாத்மாக்கள் பிரகிருதியில் எழுகின்றனர். பலவாகத் தோன்றினாலும் ஜீவாத்மா என்பது ஒன்றே.
- பரமாத்மா ஜீவாத்மாவாக மாறுவது அகந்தை ஏற்பட்ட வழி.
- பரமாத்மா, ஜீவாத்மா, அகந்தை என்பவை சத்திய ஜீவியத்தின் 3 நிலைகள்.
- சத்திய ஜீவியத்தில் காலத்தைக் கடந்த பகுதி மேலேயும், காலத்துள் உள்ள பகுதி கீழேயும் உள்ளது.



- இவற்றிடையே மனம் ஏற்பட்டது.
- மனத்திற்கு ஞானம்; உறுதி என இரு அம்சங்கள் உள்ளன.
- ஞானம் உறுதிமேல் செயல்பட்டால் சக்தி வெளிப்பட்டு வாழ்வு என்ற லோகம் உற்பத்தியாகிறது. இப்பொழுது ஞானம் தன்னை ஓரளவு இழக்கிறது.
- தன்னை ஓரளவு இழந்த ஞானம், முழுவதும் இழந்துவிட்டால் வாழ்வு ஜடமாகும். இதையே வேறு வகையாகவும் கூறலாம்.

**மனம் புலன்வழி ஆன்மாவைக் கண்டால், மனத்தின் புலன்கட்கு ஆன்மா ஜடமாகத் தெரிகிறது.**

- ஜடம் உற்பத்தியாவதை மேலும் ஒரு வகையாக விளக்கலாம். இருசக்திகள் சந்தித்தால் ரூபம் ஏற்படுகிறது. ரூபம் சலனமிழந்தால் ஜடம் ஏற்படுகிறது.
- இது ஆன்மா முதல் ஜடம்வரை சிருஷ்டியின் பாதை.
- இனி பரிணாமம். அது ஜடத்தில் ஆரம்பித்து சத் வரை உயர்ந்து எழுவது.
- ஆன்மாவுக்கு ஆதியில்லை, அந்தமில்லை, வளர்ச்சியில்லை மாற்றமில்லை என்பது மரபு. சிருஷ்டியிலும், பரிணாமத்திலும் ஆன்மா வளர்கிறது என்பது ஸ்ரீ அரவிந்தம். பூரண யோகத்தை ஆன்மீகப் பரிணாம யோகம் என்கிறார்.
- ஆன்மா என்பது புருஷன், சாட்சி என்பது மரபு.
- பிரகிருதி என்ற உலகத்திற்கு ஆன்மா உண்டு என்பதும், பிரகிருதியின் உலக அனுபவ சாரம் அதன் ஆன்மாவில் சேருகிறது எனவும், சேர்வது தொடர்வதால் ஆன்மா வளர்கிறது எனவும், அந்த ஆன்மாவுக்கு சைத்திய புருஷன் எனவும், அது மனிதனில் சைத்திய புருஷனாக ஆரம்பித்து மேலே போய் சத்திய ஜீவியத்தில் ஈஸ்வரனாகவும், கீழே போய் உடலில் சத்திய ஜீவனாகவும் மாறுவது என்பது ஸ்ரீ அரவிந்தம்.
- இந்த ஆன்மீகப் பரிணாமத்தை நாடி ஒவ்வொரு ஜீவாத்மாவும் உடலைத் தாங்கி உலகில் உலவி வருகின்றன.

- உடலின் கடமையும், திறமையும் முடிந்தவுடன், மறு உடலை நாடுவது மறு பிறப்பு.
- ஆன்மீகப் பரிணாமம் நெடிய யாத்திரை என்பதால் பல ஆயிரம் உடல்கள் தேவைப்படுவதால் மறுபிறப்பு இன்றியமையாததாகிறது.
- வளரும் ஆன்மா புது உடலைத் தேடுவதற்கு பதிலாக, வளர்ந்த ஆத்மாவுக்கேற்ப உடல் வளர்வது சத்திய ஜீவன் பிறப்பதாகும். அதுவே சத்திய ஜீவியத் திருவுருமாற்றம்.
- அஞ்ஞானம் என்பது அசித்தி, அவித்யாயில்லை, ஞானத்தின் மறு உருவம்.
- முரண்பாடு என்பது முரணானதில்லை. உடன்பாட்டின் எதிர்ப்புறம்.
- அகந்தை என்பது மனிதனில்லை, ஜீவனில்லை. பரமாத்மாவிலிருந்து பிரிந்த நிலை.
- சிருஷ்டி என்பது கடவுளால் ஏற்பட்டதில்லை, கடவுளே சிருஷ்டியாக மாறினார்.
- சிருஷ்டித்தது பிரம்மாயில்லை, சத்திய ஜீவியம்.
- இந்த ஞானம் அறிவால் பெறப்படுவதில்லை. அனுபவத்தால் பெறக்கூடியது.
- உலகில் தீமை படைக்கப்படவில்லை. பிரிந்து நிற்கும் அகந்தை பிரிந்து நிற்பது தீமையாகத் தோன்றுகிறது.

மேற்சொன்னவை ஸ்ரீ அரவிந்தத்திற்குரிய புதிய நிலைகள். பகவான் இவற்றை விளக்க முயன்றால் நாம் புரியவில்லை என்கிறோம். இதைத்தான் விளக்குகிறார் என்று தெரிந்தவுடன் புரியும். அது போன்ற சிக்கல்கள் ஆயிரம். சில உதாரணங்களை மட்டும் கூறுகிறேன். புரியாத இடம் இதுபோன்ற விளக்கத்தால் புரிந்தால், அளவு கடந்த சக்தி மனத்துள் எழும். அது மந்திர சக்தி.

பிரபஞ்ச சிருஷ்டியைப் பற்றிய அத்தியாயத்தில் சிருஷ்டியின் இரகஸ்யத்தைப் பற்றி விளக்கமாகக் கூறியபின், அடுத்த பாராவில் முதல் வரியில் "பிரம்மம் நமக்கு சச்சிதானந்தமாகத் தெரிகிறது" என்று ஆரம்பிக்கிறார். சிருஷ்டிக்கும் இதற்கும் தொடர்பு



தெரியவில்லை. தொடர்பும் ஏற்படுத்த முடியாது தவிப்போம். இந்த அத்தியாயத்தின் கடைசி பக்கங்களில் திடீரென ஒரு பாராவில் "இங்கு நாம் அஞ்ஞானத்தைப் பற்றி அறிவது அவசியம்" என்கிறார். சிருஷ்டிக்கும் அஞ்ஞானத்திற்கும் தொடர்பு இருப்பதாகத் தெரியாது. சத்திய ஜீவியத்தைப் பற்றிய மூன்று அத்தியாயங்களுக்குப் பின் மனத்தைப் பற்றிய அத்தியாயத்திற்கு முன் தெய்வீக ஆத்மா என்று ஒரு அத்தியாயம். இதற்கு முன் அத்தியாயத்துடனோ, பின் அத்தியாயத்துடனோ இந்த அத்தியாயத்திற்கு என்ன தொடர்பு என்றால் சிந்தனைக்கு எட்டாது. சிந்தனை ஆரம்பிக்காது.

அதிகமாகப் படித்த பல்கலைக்கழக பேராசிரியர் ஒருவர் பகவான் தரிசனம் பெற்றவர். பகவான் நூல்களைப் படித்து விட்டு தனித்தனியாகத் திட்டு திட்டாகப் புரிகிறது. மொத்தமாகப் புரியவில்லை என்றார்.

இலக்கியப் பேராசிரியர் ஒருவர் பகவானைப் பற்றிப் பல நூல்களை எழுதியவர். தம் ஆன்மீக சித்திகள் நம் பரம்பரையில் வந்த வழிக்குரியவை என ஸ்ரீ அரவிந்தர் காண முயல்கிறார் என்று கூறினார். பரம்பரை பகுதி. ஸ்ரீ அரவிந்தர் முழுமை. Life Divine முழுவதும் எப்படி ஸ்ரீ அரவிந்தம் பரம்பரையிலிருந்து முழுவதுமாக மாறுபட்டது என எழுதியுள்ளார்.

சட்டம் சக்தி வாய்ந்தது. ஆனால் நாம் போட்டது சட்டம். நாம் சட்டத்தை மாற்றலாம். கர்மம் சக்தியின் விளைவு. சக்தி ஜீவனுக்குட்பட்டது. சக்திக்குக் கட்டுப்பட்ட மனிதனை கர்மம் ஆளும். ஜீவனை கர்மம் ஆளமுடியாது.

நாட்டில் நிர்வாகம் சட்டத்திற்குக் கட்டுப்பட்டது. அரசியல்வாதிக்குக் கட்டுப்பட்டதல்ல. காங்கிரஸ், DMK அரசில் கலெக்டர் கலெக்டராக இருப்பாரே தவிர காங்கிரஸ் கலெக்டர், DMK கலெக்டர் என்பதில்லை. நீதிபதியும், எலக்ஷன் கமிஷனரும் சட்டத்திற்குட்பட்டவர்கள். மந்திரிகளுக்கு அடங்கியவரல்ல என்ற விபரங்கள் இன்று தெரிவதுபோல் அன்று தெரியாது. Life Divine ஐப் படிப்பதில் புரியாதவை என்பவற்றைவிட குழப்பமானவை என்பவையுண்டு.

ஒரு சிக்கலைக் கருதுவோம்.

P.*174*ல் ஜடம் என்பது ஆழ்மனத்தின் உறுதி என ஒரு விளக்கம் உள்ளது. முதலிரண்டு பாராக்களில் இது விளக்கப்பட்டு முடிவான கருத்தாக எழுதப்பட்டுள்ளது. பத்து, இருபது முறை படித்தபின் "எதுவும் புரியவில்லை. இதெல்லாம் தத்துவம். நம் சிற்றறிவுக்கு எட்டாது" என்று தோன்றுகிறது. அது பொதுவாக சரி. அதுவே முடிவல்ல. இதுபோல் புரியாத இடங்களில் பேப்பரும் பென்சிலும் எடுத்து குறிப்பு எடுத்து நிதானமாகப் படிக்க வேண்டும் என்கிறார் அன்னை. அதை செய்து ஊன்றி கவனித்தால், ஆசிரியர் மனம் எண்ணத்தை எப்படிக் கருதுகிறது என எழுதியவர் கோணத்தில் பார்த்தால் உதவும். அதையும் கீழே செய்து பார்ப்போம்.

1. மனம் சத்திய ஜீவியத்தில் எழுவதால் அதன் ஆதி இறைவன் என முன் அத்தியாயம் கூறியதை முதல் வரி மீண்டும் கூறுகிறது.
2. கீழ் லோகத்திற்குரிய மூன்று கரணங்களான உடல், வாழ்வு, மனம் ஆகியவற்றுள் மனம் உச்சியிலுள்ளது.
3. மனம் தெய்வசக்தியின் சிறப்பான செயல் அல்லது மேல் லோகத்தில் கடைசி நிலையிலுள்ள கரணம் மனம் எனப்படும்.
4. மனம் புருஷனையும், பிரகிருதியையும் பிரித்துக் காட்ட வல்லது. புருஷனும் பிரகிருதியும் ஒன்றானவை. தனித்தனியானவையல்ல. ஆனால் பிரித்துப் பார்க்க விரும்பினால் மனம் பிரித்துக் காட்டும் திறன் உடையது. ஒரு கம்பெனியின் கணக்குகளை மட்டும் தனியாக எடுத்துப் பார்த்தால் விளங்கும். அதனால் கம்பெனி வேறு, கணக்கு வேறு என்றாகாது.
5. ஆத்மா அஞ்ஞானத்திலிருப்பதால் மனம் பிரித்துக் காட்டுவதை பிரிந்தவை என தவறாக நாம் நினைக்கிறோம்.
6. சத்திய ஜீவியத்திலிருந்து மனம் பிரியாதவரை மனம் அஞ்ஞானத்தின் கருவியாகாது. பிரிக்கும் மனத்தின் திறன் ஞானத்திற்கே பயன்படும்.



7. மனம் பிரபஞ்சத்தில் சிருஷ்டிக்கும் கருவியாகிறது.
8. மனத்தின் இத்திறனை நாம் அறிவதில்லை.
9. மனம் புரிந்து கொள்ளும் கருவி. உலகில் நடப்பவற்றை நமக்குப் புரியவைக்கும் கருவி என நாம் நினைக்கிறோம்.
10. ஜடத்தில் உற்பத்தியான சக்திகளை அதன் மனத்தின் ஆரம்பமாகக் கருதுகிறோம்.
11. சமீபகாலமாக நடக்கும் சோதனைகள் மூலம் இந்த சக்தியுள் மனம் மறைந்துள்ளது என நாம் அறிகிறோம்.
12. மறைந்துள்ள இம்மனம் ஜடத்தினின்று தானே வெளிவரும்.
13. முதலில் அது உயிராகவும், முடிவில் மனமாகவும் வெளிவரும் என அறிகிறோம்.
14. முதலில் வருவது தாவரங்களுக்குரிய உணர்வு.
15. முடிவில் விலங்குகளிலும், மனிதனிலும் வெளிப்படும் மனம் வெளிவரும்.
16. ஏற்கனவே ஜடம் என்பது சக்தியின் உருவம் (Matter is only substance of Force) என நாம் முன்னொரு அத்தியாயத்தில் கண்டோம்.
17. எனவே ஜட சக்தி என்பது சக்தி உருவமான மனம் (Energy -form of Mind) எனப் புரிகிறது.
18. Material force is, in fact, a subconscious operation of will. ஜடசக்தி என்பது ஆழ்மனத்தின் உறுதி செயல்படுவதாகும்.

 Matter is substance of Force.

 Mind is Energy-form.

 Force is Energy.

 Therefore Matter is Mind.

 ஜடம் என்பது சக்தி (Force).

 மனம் என்பது சக்தியின் ரூபம் (Energy-form).

Force = Energy.

எனவே ஜடம் என்பது மனம்.

மனம் விழிப்பாக இருந்தால் மனமாகும்.

மனம் மறைந்திருந்தால் ஆழ்மனம் என்கிறோம்.

மனம் மறைந்திருப்பது ஜடமாகும்.

ஜடம் என்பது ஆழ்மனத்தின் உறுதி செயல்படுவதாகும்.

இது தத்துவமான விளக்கம்.

நடைமுறை உதாரணம்,

- வாயில் சொன்னால் மனம் உள்ளவன் கேட்டு அதன்படி நடக்கிறான்.
- மனம் இல்லாதவன் சொல்லுக்கு அசையமாட்டான்.
- மனம் இல்லாதவன் வெறும் ஜடம், உடல்.
- மனம் சொல்லாக வெளிப்படாமல் செயலாக வெளிப்பட்டு ஓங்கி ஒரு அறை கொடுத்தால், சொல்லுக்கு அசையாதவன் செயலான அடிக்குப் பணிவான்.
- நல்லவனுக்கு ஒரு சொல். நல்ல மாட்டுக்கு ஒரு அடி என்பது பழமொழி.
- ஜடம் மனம் என்பது அடிபட்ட பின் உத்தரவை ஏற்பவனைக் காட்டுகிறது.

❁❁❁❁❁

# இதயத்தின் எழுச்சி

ஆதி முதல் மனிதன் இறைவனைத் தேடுகிறான். இறைவன் ஜோதியாகவும், ஆனந்தமாகவும், அமரத்துவமாகவுமானவன். ஆனால் உலகில் மனிதன் இவற்றிற்கு எதிரான இருளையும், வலியையும், மரணத்தையுமே காண்கிறான். உடன்பாட்டை இறைவன் முரண்பாடாக காட்டுவது சிருஷ்டி, அதன் இரகஸ்யமும் கூட, இருளான மனமாகிய ஜடம் ஜோதியான மனமாவது பரிணாமம் என்று வேதாந்தம் கூறுவதை நாம் அடுத்த கட்டத்திற்கு எடுத்துப் போய் சத்திய ஜீவன் பிறந்து உலகில் மனித வாழ்வு, தெய்வீக வாழ்வாகும் என்பது அறிவுக்குப் பொருத்தமானதே.

## நாத்திகனின் மறுப்பு.

ஜடம் ஜடமே என்பதை நாம் ஏற்க முடியாது. ஜடமும் ஆன்மாவும் ஒன்றே என்பதே பொருத்தம். இது முடியுமா எனப் பார்ப்போம். எண்ணத்தின் பின்னும், உயிருக்குப் பின்னும் அது உள்ளது என மனம் அறிகிறது. இறைவன் அறிவுக்குப் புலப்படவில்லை எனில், அறிவின் ஆதியான ஜீவியத்திற்குப் போனல் புலப்படுமல்லவா? எண்ணத்தைக் கடந்த ஞானம் உடல், வாழ்வு, மனம், சத்திய ஜீவியம் ஆகியவற்றை விளக்கவல்லது. மனமும், உயிரும், உடலும் மூவகையான ஒரே சக்தியென வேதம் கூறுகிறது. அச்சக்தியை உறுதி (will) உற்பத்தி செய்தது. மனிதனுக்கு பின்னாலுள்ள உறுதி இறைவனின் உறுதியாகும். அவ்வுறுதி ஜடத்துள் புதைந்துள்ளது. பரிணாமத்தால் அது வெளியெழும் பொழுது அது தேடுவது ஞானம், சக்தியுள்ள ஞானம், எல்லையற்று அவற்றை உறுதி நாடுகிறது. அதற்கு எல்லையில்லை, கம்பியில்லாத் தந்தி தூரத்தை அழித்து கம்பியையும் அழித்தது போல், மேலும் உள்ள தடைகளை - receiver, sender - அழிக்கும். கடைசியான தடை மனிதனின் அகந்தை.

### சன்னியாசியின் துறவறம்

பிரபஞ்சத்தில் ஜடமும் ஆன்மாவும் ஒன்றெனெ சென்ற அத்தியாயத்தில் கண்டது போல் கடந்த நிலையிலும் அவையொன்றே எனக் காண வேண்டும். பிரபஞ்சத்தில் சாட்சி புருஷனைக் காண நாம் மனத்தை விட்டு அகன்று ஜீவியத்தைத் தொட வேண்டும். பிரபஞ்ச ஜீவியம் தானே இயங்குவது. சத் என்பது பிரம்மம். அசத் என்பது அதன் பின்னுள்ளது. பிரம்மத்தைக் கண்டு துறவி உலகை உதறித் தள்ளுவது அவன் குறையோ, மனிதகுலத்தின் இயலாமையோ இல்லை. அது ஒரு தேவையான கட்டம்.

## Ch - 4

### பரம்பொருள்

ஜடமும், ஆன்மாவும் பிரபஞ்சத்தில் இணைவதைக் கண்டோம். அசத், மௌனம் ஆகியவை உலகைக் கடந்தவையில்ல, உலகை பின்னிருந்து உய்விப்பவை. மனிதன பூரணம் பெற சத்தில் ஊன்றிய காலை எடுக்காமல் அசத்திற்குப் போக முயன்றால், இரண்டையும் உட்கொண்ட பரம்பொருளான பிரம்மத்தை அடுத்த கட்டத்தில் அடைவான். இதுவே ஜடமும் ஆன்மாவும் கடந்த நிலையில் ஒன்றாவதாகும்.

## Ch - 5

### மனிதனின் ஆன்மீக லட்சியம்.

பரம்பொருள் அறிவைக் கடந்தது. ஒன்றானது. சத் சித் ஆனந்தத்தைக் கடந்து அசத் இருப்பதை வேதாந்தம் கண்டது. ஜடமானாலும், ஆன்மாவானாலும் இருமுனைகளும் இருந்தால் தான் செல்லும். பரமாத்மா, பிரபஞ்சம், ஜீவாத்மா ஆகிய மூன்றும் தேவை. அவை அனைத்தும் என்னும், எங்கும் ஒன்றே. நம் பார்வைக்கு வேறுபட்டுத் தோன்றுகின்றன. பாதாளத்தையும், பரமாத்மாவையும் இறைவன் படைத்தான். அகந்தை அளவை விட்டகன்று இவையிரண்டையும் இணைக்கிறது. எனது



ஜீவாத்மாவே இரகஸ்யத்தை பெற்றுள்ள இடம். தெய்வீக ஆன்மா சித்த புருஷர்களாகப் பெருகுகிறது. மனிதனின் ஆன்மிக இலட்சியமும் இதுவே.

## Ch - 6

### மனிதனும் பிரபஞ்சமும்

பிரம்மம் மனிதனால் வெளிப்பட ரூபம் பெறுகிறது. இதை விஷ்ணு என்பர். மனமும், வாழ்வும், உடலும் அனந்தனை அதன் மூலம் வெளிப்படுத்தும், பிரபஞ்சம் தன்னைப் பூர்த்தி செய்ய பெறவேண்டி ஜீவாத்மாவை ஏற்படுத்துகிறது. பிரபஞ்சத்தின் மூலமே ஜீவாத்மா தன்னைப் பூர்த்தி செய்து கொள்ளும். வாழ்வுக்கு மனோமய புருஷனே ஜீவன். தெய்வீக வாழ்வுக்கு அடுத்த உயர்ந்த நிலையான விஞ்ஞானமய புருஷன் வேண்டும் சத், சித் ஆனந்தத்தைக் கடந்த அசத்தை ஆழத்தில் கண்டு முடிவான தீர்வை அடையலாம்.

## Ch - 7

### அகந்தையும் அதன் இரட்டைகளும்

ஜீவாத்மா பிரபஞ்ச முழுவதும் பரவி தன் உடலிலுள்ள ஆன்மாவைக் கண்டால், அகந்தையிலிருந்து விடுபடலாம். மரணம் என்பதொரு மாற்றமே என்ற உணர்வு மனிதனுக்குரியது. பூமி சூரியனைச் சுற்றி வருவதை அறிய மனிதன் பிரபஞ்சத்தையும் பிரம்மத்தையும் அடையவேண்டும். பகுத்தறிவால் பிரம்மத்தை அறிய முடியும். அகந்தையை மறந்த வாழ்வுக்கு ஆனந்தம் சுயமானது எனத் தெரியும். மனிதனில் அனந்தன் மலர இயற்கை எதிர்பார்க்கிறது.

## Ch - 8

### வேதாந்த ஞானம்

புலன்களை விட்டகன்ற பகுத்தறிவு பாதாளத்தையும், பரமாத்மாவையும் இணைத்து பிரம்மத்தை சித்திக்கும். பிரபஞ்சத்தை வேதாந்தம் ஆத்மா மூலம் அறியும். திரைமறைவில் ஞானம் பிரம்மத்தைக் காண்கிறது. சோஹம், சர்வம், பிரம்மம்,

அகம் பிரம்மாஸ்மி என்பவை வேதாந்த மந்திரங்கள்.

## Ch-9

### சத் புருஷன்

சத் என்பது சக்தி, காலத்தையும், இடத்தையும் கடந்தது உண்டு என அறிவு அறிவுறுத்துகிறது. கடந்தது பிரம்மம். நாம் அறிவைக் கடந்து செல்வோம். சத் என்பது சலனம். சலனம் காலமும், இடமும் இரண்டும் உண்மை. அனந்தன் உண்மை. காலம் உள்ளது. சிருஷ்டி என்பது ஜீவன். ஞானம் சிருஷ்டியில் லயிப்பது காலம். பிரம்மம் நம்முள் உள்ளது. அங்கு சென்று அனந்த காலத்திற்கு நாம் தங்கலாம். சத் என்பதும், உலகம் என்பதும் ஜீவனும், சிருஷ்டியுமாகும். இவையிரண்டையும் அறிவது விவேகம். ஸ்தாணு, சலனம், ஐக்கியம் என்பவை அறிவுக்குரிய சொற்கள். பிரம்மம் இவற்றைக் கடந்தது, சத்தைக் கண்டோம். சித் என்பது என்ன? சித் சத்தின் சக்தியா? தனிப்பட்ட சக்தியா என்பது கேள்வி.

## Ch-10

### சித் - சக்தி

சிருஷ்டியே ரூபமும் சக்தியுமானது. பஞ்ச பூதங்களும், பஞ்சேத்திரியங்களும் ஜடத்திலிருந்து சப்த பிரம்மமாக எழுகின்றன. ஜீவியம் உற்பத்தியானது எங்ஙனம்? இரு சக்திகள் சந்தித்தால் ரூபம் உருவாகிறது. இரு ரூபங்கள் சேர்ந்து உணர்வு எனும் ஜீவியம் எழுகிறது.

சக்தி சந்திப்பது. அது தாவம் முதல் உலோகம் வரை அனைத்திலும் உண்டு. அதற்கு அறிவுண்டு அதாவது ஜீவியம் உண்டு. இயற்கையின் விரயமில்லை என்பது அறிவுண்டு என்பதுடன் திறமையும் உண்டு எனக் காட்டுகிறது.

## Ch-11, 12

### ஆனந்தம் - பிரச்சினையும் விடையும்



பிரம்மம் தேடுவது ஆனந்தம். உலகில் துன்பமில்லை. வாழ்வுக்கு தர்மமில்லை. பாதாளமும், பரமனும் தர்மத்தை ஏற்கவில்லை. சிருஷ்டியின் ஆனந்தம், பரிணாமத்தில் ஆனந்தமாவதே பரமனுக்கும், மனிதனுக்கும், பாதாளத்திற்கும் பொதுவானது. இதை சாதிக்க சச்சிதானந்தம் ஜீவாத்மாவை பிரபஞ்சத்திற்குக் கொண்டு போகிறது. ஜடத்தில் ஆனந்தத்தை வெளிப்படுத்துவது சச்சிதானந்தத்தின் இலட்சியமும். ஜடத்தை மட்டும் நாடும் மனிதன் ஏமாந்துபோகிறான்.

ஜீவனுக்கு உலகம் மாயை. உலகம் பிரம்ம சத்தியமில்லை, உலகம் சிருஷ்டியின் சத்தியம். ஆண்டவனே ஆட்டமாகவும், ஆடுபவனாகவும், அரங்கமாகவுமிருக்கிறான். அசைவற்ற ஆனந்தம் அனைத்திலும் அலையாக எழுமானந்தமாவதே உள்ளுறை சூட்சுமம், இரகஸ்யம், நாம் ஆனந்தமயமான அமைப்பு. வலியை ஏற்கும் அவசியம் நமக்கில்லை. சுதந்திரமான சுமூகம் அகந்தையற்றவனுக்குண்டானால், அகந்தை அழியும். அனைத்துக்கும் விடுதலை கிடைத்தபிறகே விடுதலைக்கு அர்த்தமுண்டு. பிரபஞ்சத்தைத் தழுவிய மனிதனுக்கு வலியில்லை.

## Ch-13

### தெய்வீக மாயை

பிரம்மத்தைக் கண்டு கொண்டோம். சிருஷ்டி புதிராக உள்ளது. அனந்தம் சிருஷ்டியாக அளவு தேவை. அந்த அளவு மாயை. ஸ்தாணுவின் சத்தியம் பூலோக சத்தியமாக மாயை எனும் கருவி தேவை. அனைத்தும் நம்முள்ளிருப்பதும், நாம் அனைத்து ஜீவனிலிருப்பதும் சிருஷ்டி, இது சத்திய ஜீவிய சத்தியம். மனம் காணாது.

ஸ்ரீ அரவிந்தம் இலட்சியக் கொள்கையைக் கடந்தது.

உலகத்தையும் பிரபஞ்சத்தையும் மனம் விளக்க முடியாது, சத்திய ஜீவியம் விளக்கும்.

அறிவை விட்டகன்றால், அரியாசனத்தில் ஞானம் வீற்றிருப்பது தெரியும்.

## Ch-14

### சத்திய ஜீவியம் - சிருஷ்டிக் கர்த்தா

தெய்வங்களின் பிறப்பிடம் சத்தியம் ஜீவியம்.

சத்தியம் சுயமாக உருப்பெறும் லோகம் சத்திய ஜீவியம்.

சொல்லும் செயலும் சேர்ந்த லோகம் இது.

காலத்தைக் கடந்ததும், காலமும் உள்ளது சத்திய ஜீவியம்.

மேலே சச்சிதானந்தமும், கீழே உலகமும் நடுவில் சத்திய ஜீவியமும் உள்ளன.

சத்திய ஜீவியம் பிரம்மம் லோகமானது.

ஜீவனின் எண்ணம் சத்திய ஜீவியத்திற்கு சிருஷ்டிக்கும் கருவி.

பிரிக்காமல் பகுக்கும் பாங்குடையது.

சத் - புருஷன் ரூபத்தாலும் சக்தியாலும் தன் சத்தியப் படைப்பை தன்னுள் சிருஷ்டித்தது லோகம்.

ஜீவனின் எண்ணம் ஜீவனுள்ள சக்தி.

சத்திய ஜீவியத்தில் பிரிந்த நிலையில்லை. ஐக்கியம் உண்டு.

## Ch-15

### சத்திய ஜீவியத்தின் உச்ச கட்டம்

சத்திய ஜீவியம் ஈஸ்வர ஜீவியம். அதன் அனந்தருணம்.

காலமும், இடமும் கண்டிப்பாகத் தேவை.

அகம் புறமாவது சிருஷ்டி.

பிரபஞ்சதே முதற் காரியமாகச் சிருஷ்டிக்கப்பட்டது.

❋❋❋❋❋